மஞ்சரி

கர - மார்கழி

அமெரிக்காவை வென்ற மைனு

ரமணர்: வாழ்வும் வாக்கும்

முயல்குட்டி பெற்ற பெண்

கொடி (சிறு கதை)

கோபாலகிருஷ்ண பாரதியார்
(புத்தகச் சுருக்கம்)

-6-
அணா

வாழ்க்கைப் போர்

மூன்றாவது மீன்: எஜமானே, மீன்கள் எப்படித்தான் கடலில் வாழ்கின்றனவோ! இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

முதல் மீன்: ஏன், மனிதர்களைப் போலத்தான்; பெரியது சின்னதை விழுங்குகிறது.

—ஷேக்ஸ்பியர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்	கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி	கி. தாமோதரன்
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	கி. சாவித்திரி அம்மாள்
ஸீதா தேவி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுஸி.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 5] [இதழ் 1

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

இந்தியக் குடியரசின் முதல் பொதுத் தேர்தல் ஆரம்பமாகிவிட்டது. வாக்கெடுக்கும் வேலை ஏற்கனவே சில பிரதேசங்களில் நடைபெற்று முடிந்தது. பெரும்பாலான பிரதேசங்களில் - முக்கியமாக நமது சென்னை ராஜ்யத்தில் - ஜனவரி முதல் வாரம் தொடங்கி, நாலாம் வாரத்தோடு அது பூர்த்தியாகும். பிப்ரவரி ஆரம்பத்தில் சகல முடிவுகளும் தெரிந்துவிடும். காங்கிரஸ்தான் நாடெங்கும் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. கிருஷக் மஸ்தூர், பாரதீய ஜன சங், ஸோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளும் மற்றும் பல சிறு கட்சிகளும் தனித்தவர்களும் அங்கங்கே போட்டியிடுகிறார்கள். ஆனால், நாடெங்கும் பரவிய முறையில் காங்கிரஸுக்குப் பலத்த எதிர்க் கட்சி எதுவும் இல்லை. காங்கிரஸே அநேகமாகச் சகல இடங்களிலும் தனித்தோ, பிற கட்சியினர் ஒன்றிருவரையும் சேர்த்துக்கொண்டோ பதவிக்கு வரும். இன்னும் ஓர் ஐந்து வருஷத்துக்கு அதுதான் அதிகாரத்தில் இருக்கப் போகிறது. அந்தக் காலத்திலாவது அதன் இன்றைய ஊழல்கள் தொலைந்து அது தூய்மைப்படவேண்டும். இல்லையானால், உத்தமர்கள் தோற்றுவித்த காங்கிரஸ், தியாகிகள் வளர்த்த காங்கிரஸ், காந்தி மகான் வழிகாட்டிய காங்கிரஸ், சுதந்தரம் தேடிக்கொடுத்த காங்கிரஸ் செத்து மடிந்துவிடும். காங்கிரஸின் சார்பாக நிற்கும் அபேட்சகர் அனைவரும் தங்களுடைய மகத்தான பொறுப்பை உணரவேண்டும். முழு மனத்துடன் தேச நலனுக்கு உழைக்க முடியாதென்று உணர்கிறவர்கள், இன்றே வாபஸ் வாங்கிக்கொள்வது மேல். அதுவே தேசத்துக்கும் அவர்களுக்கும் நன்மையாகும்.

* * *

பல மாதங்களாகக் கொரியாவில் நடைபெற்று வந்த சமரஸப் பேச்சில் ஒரு சிறு பலன் ஏற்பட்டிருக்கிறது. வடகொரியக் கம்யூனிஸ்ட் சீனப்படைகளுக்கும் தென் கொரிய-ஐ. நா. படைகளுக்கும் இடையே இரண்டரை மைல் அகலத்துக்கு நடு நிலைமை எல்லைப் பிரதேசம் ஒன்றை வகுக்க இரு கட்சிகளும் சம்மதித்துவிட்டன. 145-மைல் நீளமுள்ள போர் முனை எங்கும் இதை வகுத்து வைக்கிறார்கள். முப்பது நாளில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகாவிட்டால்,

இந்த எல்லை ரத்தாகிவிடும். இந்த எல்லை ஏற்பட்டது நல்ல குறிதான். ஆனால், இனித்தான் போர் நிறுத்தமும் அதன் பிறகு சமாதான உடன்படிக்கையும் ஏற்பட வேண்டும். கம்யூனிஸ்ட் சீனாவுக்கு ஐ. நா. வில் இடம் தந்து, அதன் சர்வதேச அரசியல் அந்தஸ்தை அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் ஒப்புக்கொண்டாலொழிய, கொரியாவில் சமாதான உடன்படிக்கை ஏற்படாது.

* * *

இந்திய விமானிகள் சிறந்தவர்கள் என்று வெளி நாடுகளிலெல்லாம் ஒரு கீர்த்தி உண்டு. பிற நாடுகளில் நிகழும் அத்தனை விமான விபத்துக்கள் இந்தியாவில் நிகழ்வதில்லை என்ற ஒரு பெயரும் உண்டு. அப்படியிருந்தும் சில நாட்களுக்கு முன் தேசத்தையே நிலைகலங்கச் செய்துவிட்டது ஒரு விமான விபத்து. டம் டம் விமானத்தருகே டெக்கான் ஏர்வேஸ் மெயில் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி எரிந்து சாம்பலாகிவிட்டது. அதிலிருந்த ஒரே ஒருவரைத்தவிர மீதி அத்தனை பேரும்-16 பிரயாணிகள்-மாண்டுவிட்டார்கள். அவர்களில் ஒருவர், அகில இந்தியப் பத்திராசிரியர் மகாநாட்டுத் தலைவர் தேசபந்து குப்தா. இன்னும் பலரும் பிரபலஸ்தர்களே. இந்த விபத்தைக் கேட்கும்போது அளவற்ற வருத்தம் உண்டாகிறது. விபத்தின் காரணம்பற்றி விசாரிக்கச் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதைப் போன்ற கொடிய விபத்துக்கள் இனி ஏற்படாதிருக்க மனிதயத்தனத்தில் இயன்ற முன் ஜாக்கிரதைகளையெல்லாம் அதிகாரிகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

* * *

முதல் மகாயுத்த காலத்தில் பிரிட்டனின் பாதுகாப்புக்குட்பட்ட நாடாக இருந்தது எகிப்து. பின்னால் போராடி, 1922-இல் சுதந்தரம் அடைந்தது. முதல் புவாது மன்னர், சட்ட வரம்புக்குட்பட்ட மந்திரி சபை மூலம் ஆட்சி தொடங்கினார். ஆனால், ஸூயஸ் கால்வாயும் ஸூடானும் பிரிட்டனின் வசம் இருந்தன. 1936-இல் புதிய உடன்படிக்கை ஒன்று பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் இடையே ஏற்பட்டது. ஸூயஸ் கால்வாயைப் பாதுகாக்க 10,000 ஸோல்ஜர்களையும் 400 விமானங்களையும் அங்கே பிரிட்டன் நிறுத்தி வைக்க இடம் அளித்தது அந்த உடன்படிக்கை. இப்போது அதை ரத்து செய்துவிட்டது எகிப்து. ஸூடானைப் பிரிட்டன் விட்டுச் செல்லவேண்டும் என்றும், அது தன்னைச் சேரவேண்டும் என்றும் வேறு சொல்கிறது. இதில் தான் விவகாரம். ஸூயஸ் கால்வாய் கீழ்நாட்டுக்கு வரும் கடல் மார்க்கத்தின் முக்கியமான வாயிற்படி. அதைக் கைவிட்டுச் செல்ல, பிரிட்டன் முதலில் இசையவில்லை. எகிப்து விபரேஷன் படைகளுக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கும் கைகலப்புக் கூட நேர்ந்தது. இப்போது பிரிட்டன் இறங்கிவிட்டது; கால்வாய்ப் பிரதேசத்திலிருந்து தன் படைகளை வாபஸ் வாங்கிக்கொள்ள இசைந்துள்ளது. ஆனால் ஸூடான் பிரதேச விஷயம் இன்னும் தீரக்காணோம். அதுவும் முடிவுற்றால், மத்தியக் கிழக்கில் எகிப்தும் பிரிட்டனும் சிறந்த நண்பர்களாகிவிடும்.

தேர்தலுக்கு முன்னே பேசுவது ஒன்று, பின்னே பேசுவது மற்ருென்று; இப்படி நடக்கலாமா?

சட்டசபை உறுப்பினர் கடமை

பி. எஸ். நாயர்

"அரசியலில் அக்கறை இராதவர்கள் பின்னுல் தங்களே விட மோசமானவர்களின் ஆட்சியில் சிக்கி அவதிப்படுவார்கள்" என்று பிளேட்டோ சொல்லியிருக்கிருர். அவர் காலத்தில் சில ஆயிரம் மக்கள் வசிக்கும் நகரத்தைத்தான் ராஜ்யம் என்பார்கள்; நகரவாசிகளின் கூட்டத்தைச் சபை என்பார்கள். அப்போதே பிளேட்டோ இந்தமாதிரி சொன்னுர் என்ருல் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து வரும் ராஜ்யத்தில், ஜனநாயக ஸ்தாபனங்கள் ஏற்பட்டுப் பல தொகுதிகளுக்குப் பிரதிநிதிகள் இருந்து வரும் இந்த நாளில் கேட்பானேன்? இப்போது முன்னேவிட அரசியலில் அக்கறை செலுத்துவது அவசியமாகும். ஜனப் பிரதிநிதிகளுக்குச் சிறந்த திறமை இருக்கவேண்டும். அப்படி இராவிட்டால் சட்டசபையில் இரண்டாந்தர ஆசாமிகள் சேர்ந்து ஜனநாயகமே சீரழிந்து விடும்; கடைசியில் இது சர்வாதிகார ஆட்சியில்தான் கொண்டு விடும். இன்று ஜனநாயகம் என்ருல் மக்களுக்காக மக்களின் சிறந்த பிரதிநிதிகளின் மூலம் மக்கள் நடத்தும் ஆட்சி என்று பொருள்.

'கட்சித் தலைமைக்கு அடங்கி ஒடுங்கி இருந்தாலே போதும்; சட்டசபை அங்கத்தினராகி விடலாம். அப்புறம் பிரயாணப்படி, இதர அலவன்ஸ் எல்லாம் வாங்கிக்கொண்டு கண்ணே மூடிக்கொண்டு தலைவரை ஆதரித்து வோட்டுச் செய்யவேண்டியதுதானே!' என்ற தவருன அபிப்பிராயம் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சட்டசபையில் தன் விருப்பப்படி வோட்டளிக்க முடியாவிட்டாலும் கட்சிக் கூட்டத்தின் போதாவது சற்றுப் புத்தி சாதுரியத்துடன் நடந்துகொண்டு மசோதாவை ஓரளவுக்கு மாற்ற முயற்சி செய்யலாம். கட்சித் தலைவர் செய்வது பொருந்தாது என்று கண்டித்து இவரது பிழையை எடுத்துக் காட்டி அறிவுறுத்தலாம். அங்கத்தினர் மட்டும் திறமையுள்ளவராக இருந்தால் அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட பல கமிட்டிகள், கமிஷன்கள் முதலியவற்றில் செயலாற்றுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளமாக அவருக்குக் கிடைக்கும். தம் தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்குக் கட்சிக் கொள்கைபற்றிப் பல விஷயங்களே எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கும். இந்தமாதிரி

காப்பிரைட்; இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்; அக்டோபர் '51), சென்னை.

சமயங்களில் அவருடைய வாக்கு வன்மை மிகவும் பயன்படும்; அதனுல் மக்களுக்கும் நாட்டுக்கும் நலன் ஏற்படும்.

ஆனல் இவ்வளவு அலுவல்கள் இருந்தும் இவைகளை அங்கத்தினர் சட்டை செய்வதேயில்லை; தங்கள் உறவினர்களுக்கு எங்கேயாவது உத்தியோகம் பார்த்து வைப்பது, தங்களைச் சுற்றி அலையும் கூட்டத்தாருக்குப் 'பெர்மிட்' வாங்கி வழங்குவது, தங்கள் தொகுதிக்கான சில வசதிகள் செய்வது இவைகளைக் கவனிப்பதிலேயே காலங் கழிக்கிருர்கள். மசோதாவைப்பற்றியோ சட்டசபை விவாதத்திலோ அவர்கள் அக்கறை செலுத்துவதே யில்லை.

லட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கக் கூடிய பிரச்னைகளைப் பற்றிப் பார்லிமெண்டில் விவாதம் நடந்துகொண்டிருக்கும். அப்போது இந்த அங்கத்தினர்கள் எங்கே இருப்பார்கள் தெரியுமோ? செக்ரடேரியட் கட்டிடத்தின் வராந்தாவிலும் மூலைமுடுக்கிலும் இருந்து கொண்டிருப்பார்கள். மேலும் மேலும் தங்கள் சொந்த நலனை வளர்ப்பதற்கு அங்கத்தினர் பதவியை ஒரு சாதனமாகவே இவர்கள் கருதுகிருர்கள். தேர்தலின்போது, "அதைச் செய்வோம்; இதைச் செய்வோம்" என்றெல்லாம் ஆணையிடுவார்கள். ஆனல் தேர்தல் முடிந்தவுடனே எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். 1946-இல் ஒரு மசோதாமீது விவாதம் நடந்தபோது அமெரிக்க ஜனப்பிரதிநிதி சபை, ஸெனேட் இரண்டிலுமுள்ள அங்கத்தினரில் 40 சதவிகிதம் பேர் ஆஜராகவேயில்லையாம். கடைசியில் அரசாங்கத்துக்கே இது தீங்காக முடியும். அங்கத்தினர்கள் சட்டசபைக்குச் சம்பந்தமில்லாத விவகாரத்தில் ஈடுபட்டுப் பெரும்பாலும் அதிலேயே பொழுதைப் போக்கி விடுகிருர்கள் என்று சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியிலிருந்து தெரிந்தது.

அங்கத்தினர்கள் சட்டசபை அலுவல்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமே யொழியச் சர்க்காருக்கும் தொகுதியிலுள்ள பிரமுகர்களுக்குமிடையே தூது போய்க்கொண்டிருக்கும் ஆசாமிகளாகிவிடக் கூடாது. கட்சித் தலைவர் இதையெல்லாம் கவனித்து நடக்கவேண்டியது அவசியமாகும். சட்டசபை அங்கத்தினர்கள் பிரயாணப்படி முதலிய அலவன்ஸ் வாங்குகிருர்களே, அவை பொது மக்களின் பணந்தானே? ஆகவே, சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போல் அவர்களும் நாட்டுக்குத் தங்களால் ஆன ஊழியம் புரியத்தான் வேண்டும். முழுநேரமும் அதில் ஈடுபடவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் அலவன்ஸ் தாராளமாக இருக்கவேண்டும்; அப்போதுதான் பிற வழிகளில் பணம் திரட்ட வேண்டுமென்ற சபலம் அவர்களுக்கு ஏற்படாது. நல்ல அறிவோ நேர்மையோ இராத ஆசாமிகள் அங்கத்தினர்களாக வந்தால், பொதுமக்களுக்கும் சரி, நாட்டுக்கும் சரி, தீங்காய்த்தான் முடியும். சட்டசபை அங்கத்தினர்கள் இன்ன இன்னபடி நடந்துகொள்ள வேண்டும் என்று ஒழுங்கு முறை வகுத்துப் பார்லிமெண்டில் சட்டமாக நிறைவேற்றினுல் நலம்.

ஸினிமாவில் வானலோகம்

"ஹாலிவுட் மாதிரி இருப்பது எங்கள் ஸ்டுடியோ" என்றெல்லாம் நம் ஸினிமா முதலாளிகள் பெருமையடித்துக் கொள்வார்கள். அந்த ஹாலிவுட்டில் எடுக்கும் படங்கள் எத்தனையோ விதம். அவைகளில் மிக்க உயர்தரமும் உண்டு; மட்டமும் உண்டு. ஆனால், போன சுவட்டிலேயே போகாமல் புதுப்புது வழிகளில் இறங்குவதில் பிரசித்தி பெற்றவர் ஹாலிவுட் முதலாளிகள். இப்போது அவர்கள் விஞ்ஞான விசித்திரப் படங்கள் பிடிப்பதில் தீவிரமாக முனைந்திருப்பதுபற்றிய இந்த விவரம் 'நியூ யார்க் ஹெரால்டு ட்ரிப்யூன்' கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டது.

செவ்வாய் உலகத்துக்கு – ஏன், அதற்கு அப்பாலுங்கூட – அமெரிக்க ஹாலிவுட் ஸினிமாக்காரர்கள் இந்த வருஷம் அடிக்கடி பிரயாணம் செய்யப் போகிறார்கள். நிஜப் பிரயாணம் அல்ல; ஸினிமாப் பிரயாணந்தான். என்றாலும் நிஜப் பிரயாணம்போல் தோன்றச் செய்யும் மிக்க அதிசயமான கருவிகளையெல்லாம் அமைத்துக்கொண்டே இந்தக் காரியம் நடக்கப் போகிறது.

இந்த மண்ணுலகம் ஒன்றின் சிக்கல்களைப் படம் பிடித்தால் போதாதென்று, வான உலகச் சிக்கல்களிலும் தலையிடப் போகிறார்கள் ஹாலிவுட்டின் பல ஸினிமா முதலாளிகள். இதற்காக விஞ்ஞான விசித்திரக் கதைப் புத்தகங்களை வெகு மும்முரமாகப் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். உலகங்கள் ஒன்றோடொன்று மோதுவது, வான மண்டலங்களுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மனிதர்கள் சர்வசகஜமாகப் பாய்வது, குண்டுக்குப் பதிலாய் மின்காந்தக் கிரணங்களையே பீச்சாங்குழல்போல் நினைத்த திசையில் சுடும் பீரங்கிப் பிரயோகம் இந்த மாதிரி அபூர்வக் காட்சிகள் அடங்கிய பல படங்களை வெகு சீக்கிரம் மார்க்கெட்டிலே வெள்ளம்போல் குவித்துவிடப் போகிறார்கள்.

எச். ஜி. வெல்ஸ் போன்றவர்கள் விஞ்ஞான சூட்சுமங்களைப் புகுத்தி எழுதிய நாவல்களை உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் பல வருஷங்களாக விரும்பிப் படித்து வருகிறார்கள். ஆயினும் அவைகளைப் படம் பிடிக்கப் பெரிய ஹாலிவுட் ஸினிமா முதலாளிகள் இதுவரைக்கும் முயற்சி எடுத்ததில்லை. ஏதோ சில சிறிய முதலாளிகள் மட்டும் ஓரளவு முயன்று, சரித்திர காலத்துக்கு முந்திய ராட்சச விலங்குகளையும்

'ராக்கட்' என்ற வாண விமானங்களை யும் சில படங்களில் பிடித்திருக்கிறார்கள். அந்தப் படங்களைப் பிரமாதமானவை என்று சொல்ல முடியாது. இப்போதுதான் முதல் முதலாக மிகப் பெரிய ஹாலிவுட் முதலாளிகள், அபார முயற்சியுடன் விஞ்ஞான விசித்திரக் கதைகளைப் படம் பிடிக்கப்போகிறார்கள். சில உதாரணங்களை இங்கே பார்க்கலாம்.

'உலகம் ஸ்தம்பித்து நின்ற நாள்' (தி டே எர்த் ஸ்டுட் ஸ்டில்) என்ற கதையை ட்வெண்டியத் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியார் சித்திரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தக் கதையில், எங்கேயோ வானத்திலிருந்து இரண்டு ஆசாமிகள் வட்டமான வானவெளிக் கப்பல் ஒன்றில் சவாரி செய்துகொண்டு நமது பூலோகத்துக்கு வந்து இறங்குகிறார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவன் ஒன்பதடி உயரம் இருக்கிறான். மனிதனைப் போல் தத்ரூபமாக இருக்கும்படி 'ரொபாட்' என்ற யந்திர கணிதப் பொம்மை ஒன்றைத்தான் இப்படி ஒன்பதடி உயரம் அமைத்திருக்கிறார்கள். அந்த இரண்டு பேர்களின் வாகனமான கப்பலை அமைப்பதற்கு மட்டும் ஸ்டுடியோவுக்கு ஒரு லட்சம் டாலர் செலவாகிறதாம். நம் பூலோகத்து மனிதர்களைவிட 5000 வருஷகாலம் நாகரிகத்தில் முதிர்ந்த வானவுலகம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் அந்த இரண்டு ஆசாமிகளும் என்பதாகப் பாவனை.

'உலகங்கள் மோதும்போது' (வென் தி வொர்ல்ட்ஸ் கொல்லைட்) என்ற கதையைப் பாரமவுண்ட் கம்பெனியார் படம் பிடிக்கப் போகிறார்கள். இதில் வான மண்டலங்களெல்லாம் திரைக்கு வந்து விடுகின்றன. இதில் நியூ யார்க் நகருக்கு அருகே உள்ள மன்ஹாட்டன் தீவு, கடலின் பேரலையில் மூழ்கி விடுகிறது. அந்தத் தீவின் நாற்பதடுக்கு மாளிகைகளெல்லாம் நீரில் புதைகின்றன. எச். ஜி. வெல்ஸ் எழுதிய 'உலகங்களின் யுத்தம்' (வார் அவ் தி வொர்ல்ட்ஸ்) என்ற நாவலையும் இதே ஸினிமா கம்பெனியார் படம் பிடிக்கப் போகிறார்கள். அதில் நமது பூலோகத்தைச் செவ்வாயுலக மனிதர்கள் வந்து படையெடுக்கிறார்கள்.

ஏற்கனவே, 'அந்தப் பொருள்' (தி திங்) என்ற கதையை ஆர். கே. ஓ. கம்பெனியார் படம் எடுத்து அதில் கொள்ளைப் பணம் சம்பாதித்துவிட்டார்கள். எங்கிருந்தோ ஒரு காய் வந்து கிடைக்கிறது. அது எந்தப் பொருளையும் அடியோடு நாசம் செய்யக்கூடியது. இதை விஷயமாக அமைத்துக்கொண்டு பரபரப்பூட்டும் சம்பவங்களைப் புகுத்தித் தயாரித்தது அந்தப் படம். அதன் வெற்றியால் மகிழ்ந்து, மூன்று விஞ்ஞான விசித்திரக் கதைகளைச் சித்திரிக்க அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அவைகளில் முதல் படத்துக்கு 'கி. பி. 3000' என்று பெயர். அதாவது இன்னும் ஆயிரம் வருஷத்துக்கு அப்பால் வருங்காலத்தைத் தீர்க்க தரிசனம் காண்கிறது அது!

ஸிப்பர்ட் ஸினிமா கம்பெனியார் இதற்கு நேர் மாறாகக் காலக் 'கடிகார'த்தைப் பின்னால் தள்ளி வைக்கப் போகிறார்கள். 'இழந்து போன கண்டம்' (லாஸ்ட் காண்டினன்ட்) என்பது அவர்கள் எடுக்கப் போகிற படம். ஒரு வாணக்குண்டு எங்கேயோ ஓடிக் காணாமற் போகிறது. அதைக் கண்டு பிடிப்பதற்

காக அணுச் சக்தி கமிஷன் அங்கத்தினர் சிலர் புறப்படுகிறார்கள். அவர்கள் அதைத் தேடி ஆராயும் போது எதிர்பாராதபடி தற்செயலாகப் புராதன 'உலகம்' ஒன்றைக் கண்டுபிடிக்கிறார்கள். 16 கோடி வருஷங்களுக்கு முன் பூலோகம் இருந்த நிலையாம் அது. அதில் 'பிராண்டோஸாரஸஸ்', 'டெரோடாக்டில்ஸ்' என்ற பிரம்மாண்டமான மிருகங்கள் வாழ்ந்தனவாம். சில மாதங்களுக்கு முன்பே இந்தப் படத்தைப் பிடிக்கும் வேலை ஆரம்பமாகிவிட்டது. இதில் 100 - அடி நீளமுள்ள சரித்திர காலத்துக்கு முந்திய ராட்சச மிருகங்கள் உயிரோடு உலவும்படி ஏதேதோ தந்திரம் செய்திருக்கிறார்கள்.

இவை தவிர இந்த மாதிரி இன்னும் பல படங்கள் வரப்போகின்றன. விஞ்ஞான விசித்திரப் படங்களை இனிமேல் சர்வசகஜமாக ஓயாமல் எடுப்பார்கள் என்றே தோன்றுகிறது. இந்தப் படங்களில் எப்படிப்பட்ட காட்சிகளை எதிர்பார்க்கலாம் என்பதைக் கோடி காட்டத் தக்க இரண்டு கதைச் சுருக்கங்களை இனிக் கவனிக்கலாம்.

வான மண்டலங்களுக்கு எப்படிப் பிரயாணம் செய்வது? அண்டங்களின் ஆகர்ஷண சக்தியை மீறிச் செல்வதற்கு என்ன உபாயம்? இதுபற்றிய சிக்கலை 'மூன்று அண்டப் பிரச்னை' (த்ரீ பாடி ப்ராப்ளம்) என்று குறிப்பிட்டு, விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். இந்தச் சிக்கலை வெகு சுலபமாகத் தீர்த்து விடுகிறது 'உலகம் ஸ்தம்பித்து நின்ற நாள்' என்ற படம். இறந்தவன் இதில் மீண்டும் உயிர் பெற்று விடுகிறான். சூட்சுமமான மின்காந்தக் கிரணங்களைச் செலுத்திப் பொருள்களையெல்லாம் அழிக்க முடிகிறது. மனிதனைப் போலவே சகல வேலைகளையும் செய்யும் 'ரோபாட்' என்ற யந்திரப் பொம்மை தோன்றுகிறது.

படத்தின் ஆரம்பத்தில், எங்கிருந்தோ ஒரு வஸ்து ஆகாச மார்க்கத்தில் மணிக்கு 4000 மைல் வேகத்தில் பூலோகத்தை நோக்கி வருவதாக இங்குள்ளவர்களுக்குச் செய்தி எட்டுகிறது. பிரம்மாண்டமான சக்கரவளையம்போல் இருக்கிறது அதன் உருவம். அது வாஷிங்டன் நகரில் வந்து இறங்குகிறது. அதில் ஓர் ஆசாமியும் 9 அடி உயரமுள்ள ஒரு யந்திர மனிதனும் இருக்கிறார்கள். யந்திர மனிதன் ஒற்றைக் கண்ணன்; அதுவும் நெற்றிக்கண்ணன். அந்தக் கண்ணிலிருந்து புறப்படும் கிரணங்கள் எந்தப் பொருளையும் அழித்துவிடும். அவைகளில் ஒரே ஒரு கிரணம் பட்டாலே எதுவும் பஸ்மீகரந்தான்.

"ஐக்கிய கிரகங்கள் (யுனைடெட் ப்ளானட்) பிரதிநிதியாகத்தான் நான் பூலோகத்துக்கு வந்திருக்கிறேன். உங்களுக்கு எச்சரிக்கை செய்வதே நான் வந்த காரியம். யுத்தம் புரிவதற்காக நீங்கள் ஏதோ அணுக்குண்டுப் பரீட்சை செய்து வருகிறீர்களே, அது உங்கள் பூலோகத்துக்குமட்டும் அல்ல; கிரகக் கூட்டம் அனைத்துக்குமே அபாயமாகும். சமாதானமாய் வாழுங்கள். அதுதான் நல்லது" என்று அந்தச் சாதாரண மனிதன் எச்சரிக்கிறான். நமது பூலோகத்தை என்ன வேண்டுமானாலும் செய்யக் கூடிய சக்தி தன் கிரகவாசிகளுக்கு உண்டு என்பதற்கு ஒரு ருசு கொடுக்கிறான். பூமி உருளாமல் முப்பது நிமிஷ நேரம் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும்படி செய்கிறான்.

இதைக் கண்டு வாஷிங்டன் நகர வாசிகள் கிலியடைகிறார்கள். அந்தத் தூதனைக் கொன்று விடுகிறார்கள்.

உடனே யந்திர மனிதன் தானாகவே இயங்கி, பூமியில் கொஞ்சம் நாசம் விளைவிப்பதுடன் இறந்த தூதனையும் பிழைப்பூட்டி விடுகிறான். தான் வந்த வேலை முடிந்ததால், தூதன் தன் ஆகாய வெளிக் கப்பலான வட்டத் தட்டில் ஏறி வானத்திலே சென்று மறைகிறான். இதன்பிறகு பூலோக மக்கள் கதிகலங்கி, 'யுத்தம் நேர்ந்தால் என்ன விபரீதங்கள் நேருமோ!' என்று தவித்துக் கொண்டு கிடக்கிறார்கள்.

இந்தப் படம் எடுப்பதற்கு, விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அம்சங்களில் ஆலோசனை கூற ஸாமுவேல் ஹெர்ரிக் என்பவரை நியமித்திருக்கிறார்கள். அவர் லாஸ் ஏஞ்செலஸில் உள்ள கலிபோர்னியா யூனிவர்ஸிடியில் வான சாஸ்திர புரொபஸர். 'ராக்கட்' என்ற வாணத்தை ஆகாயத்தில் கிளப்பி விட்டால், அது பூமியின் ஆகர்ஷண சக்தியை எப்படிக் கடந்து செல்லும் என்ற பிரச்னையைப்பற்றி அவர் வகுப்பிலே இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இங்கே ஸினிமா ஸ்டுடியோவில் வெகு சுலபமாக அவருடைய கதாபாத்திரங்கள் அந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்துவிட்டன. என்றாலும் "ராக்கட் வாணத்தை உண்மையிலேயே ஆகாயத்தில் அப்படிச் செலுத்த முடிந்த பிறகுதான், அந்த வழியை நாம் அறியமுடியும்" என்று அவர் கூறுகிறார். அதற்குரிய திட்டம் எதையும் தாம் இன்னும் தயாரிக்கவில்லை என்றும் சொல்லுகிறார்.

'உலகங்கள் மோதும்போது' என்ற விஞ்ஞானக் கதை வாசகர்களிடம் பெரிதும் செல்வாக்குப் பெற்ற மற்றொரு நாவல். பாரமவுண்ட் பிக்சர் கம்பெனித் தலைவரான ஸெஸில் பி. டிமில்லி, "இந்த நாவலைப் படம் எடுக்க இன்று முடியாது. எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் சாத்தியமாகலாம்" என்று சொல்லி, முன்னே இதைத் தள்ளிவிட்டார். அது 1934-ஆம் வருஷத்தில். இதுவோ 1951-ஆம் வருஷம். இதில் எது வேண்டுமானாலும் சாத்தியமாகும்.

இந்தக் கதையில் ஆகாயத்தை ஒரு வானசாஸ்திரி ஆராய்கிறார். ஒரு நட்சத்திரமும் கிரகமும் நேரே பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் காண்கிறார். அந்த நட்சத்திரம் ஒன்பது மாத காலத்தில் பூமியின்மீது மோதி நாசம் செய்யப்போவதாகக் கணக்கிட்டு விடுகிறார். பூலோக மக்கள் அதற்குமுன் தப்பித்துக்கொண்டு, 'ஜைரா' என்ற ஒரு கிரகத்துக்கு ஓடிப்போக எண்ணி, அதற்காக 'ராக்கட்' என்ற வாணக்கப்பல் ஒன்றைக் கட்டுகிறார்கள். பைபிளில் பிரளயம் வரும்போது நோவா என்ற பக்தன் தப்பித்துக்கொள்ளுகிறானே, அதைப்போல் ஆணும் பெண்ணுமாக நாற்பதுபேர் ஒரு வாணக் கப்பலில் கிளம்புகிறார்கள். நாளைக்கு நட்சத்திரம் மோதப் போகிறது; இன்றே இவர்கள் புறப்பட்டு விடுகிறார்கள். அப்போது நோவாவைப் போலவே பல பிராணிகளை ஒன்றொன்று எடுத்து வைத்துக்கொள்கிறார்கள். பிரயாணம் சௌக்கியமாய் முடிகிறது. பூலோகம் அழிந்து போனபின், அதுபோல் முற்றும்

வசதியான வேறு இடம் கிடைக்குமா? 'ஜைரா' என்ற கிரகம் ஏதோ வாசயோக்கியமாய் இருக்கக் காண்கிறார்கள். அதுவே அதிருஷ்டந்தானே?

தென் கலிபோர்னியாவின் பிரபல விஞ்ஞானிகளெல்லாம் பாரமவுண்ட் ஸ்டுடியோவுக்கு அடிக்கடி விஜயம் செய்தார்கள். அவர்களில் டாக்டர் ராபர்ட் எஸ். ரிச்சார்ட்ஸன் என்பவரும் ஒருவர். உலகத்திலேயே மிகப் பிரசித்தமான 200 அங்குல டெலெஸ்கோப் வைத்திருக்கும் பலோமர் ஆப்ஸெர்வேட்டரியின் அதிகாரியான அவர் எதற்காக வந்தார் தெரியுமோ? அவர் ஏதோ விஞ்ஞானக் கதை எழுதுகிறாராம். அதற்கு விஷயம் தேடிக்கொண்டுதான் வந்தார். ஸ்டுடியோவிலிருந்து அவர் விடை பெற்றுச் செல்லும்போது, "இங்கே நான் சேகரித்துக்கொண்ட விஷயங்கள் எனக்கு ஒரு வருஷத்துக்குப் போதும்" என்றார்.

வண்டிகள் மோத வந்தால்—

ரெயில்வேயில் வண்டிகளுக்குக் கொடி காட்டுவது முதலிய வேலைகள் பார்க்கும் ஸிக்னல்மான் பதவிக்கு ஒரு வாலிபன் மனுச் செய்தான். அவனைப் பரீட்சித்தார் ஸ்டேஷன்-மாஸ்டர்.

"இரண்டு எக்ஸ்பிரஸ் வண்டிகள் ஒரே தண்டவாளத்தில் எதிர் எதிரே வெகு வேகமாக வருவதை நீ பார்ப்பதாக வைத்துக்கொள்ளலாம்; அப்போது என்ன செய்வாய்?"

"உடனே பாயிண்டை அடித்து ஒரு வண்டியை மட்டும் வேறு தண்டவாளத்தில் மாறச் செய்வேன்."

"சரி. ஆனால், பாயிண்ட் பழுதாயிருந்தால் என்ன செய்வாய்?"

"சிவப்புக் கொடியைப் பலமாய் ஆட்டுவேன்."

"இரவு நேரமாயிருந்தால்—?"

"சிவப்பு விளக்கைக் காட்டுவேன்."

"விளக்கில் எண்ணெய் இல்லாவிட்டால்—?"

"கையில் எது அகப்பட்டதோ அதை எடுத்து, தண்டவாளத்தில் போட்டு, அதற்குத் தீ மூட்டி வெளிச்சம் உண்டாக்குவேன்."

"தீக்குச்சி இல்லாவிட்டால்—?"

"டெலிபோனுக்கு ஓடிப்போய் என் தங்கைக்கு டெலிபோன் செய்வேன்."

"உன் தங்கைக்கு டெலிபோன் செய்வாயா! அவளுக்கு எதற்கு?"

"ஏனென்றால், ஸார், அவளுக்கு ரொம்ப நாளாக ஓர் ஆசை இருக்கிறது; இரண்டு ரெயில் வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை. அதை நிறைவேற்றுவதற்காகத்தான்."

—'பாயிண்ட் டி வியூ', பாரி.

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 17-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) இந்தியாவில் பொழுது விடியுமுன் பிரிட்டனில் விடியுமா? பிரிட்டனில் பொழுது விடியுமுன் இந்தியாவில் விடியுமா?

(2) நாக்குக்கடியில் தெர்மா மீட்டரை வைத்து உடம்பின் உஷ்ண அளவை டாக்டர் எடுக்கிறார். அதில் 99.4 பாரன்ஹீட் டிகிரி காண்கிறது. இதுதான் ஆரோக்கிய நிலையில் காணவேண்டிய கணக்கு. ஆனால், இதுவே உடம்பின் உஷ்ணமா? கூடவா? குறைவா?

(3) க்யூரி தம்பதிகள் ரேடியம் கண்டுபிடித்தது எந்த வருஷத்தில்?

(4) மரஞ் செடிகள் சந்ததி விருத்திக்காகத் தங்கள் விதைகளைப் பரவலாகத் தெளிக்கின்றன. பக்கத்தில் தெளித்தால், தங்கள் உணவு குறையும்; முளைக்கும் விதைகளின் உணவும் குறையும். ஆகவே, விதைகள் எட்டிப் போய்விழ இயற்கையாகச் சில முறைகளை மரஞ் செடிகள் கையாள்கின்றன. அந்த முறைகள் எவை என்று உங்களுக்குத் தெரியுமா?

(5) பூமிக்கு ஒரு சந்திரன்; சனிக்கு எத்தனை சந்திரன்கள்?

(6) உடல்புழுங்கி விடாயுற்றிருக்கும்போது, பனிக்கட்டி போட்டு ஜில்லென்று குளிர்ந்திருக்கும் ஜலத்தைக் குடிக்கக்கூடாதென்கிறார்களே; வைத்தியரீதியில் இது சரியா தவறா?

(7) சமுத்திரங்களில் மிகப் பெரியதையும் அதற்கடுத்த மூன்று சமுத்திரங்களையும் வரிசைக் கிரமமாக எழுதுங்கள்; பார்க்கலாம்.

(8) எந்தக் கண்டத்தில் புரேனியம் கனிச்சுரங்கங்கள் அதிகமாயிருக்கின்றன?

(9) நான்கு குமாஸ்தாக்கள் ஓர் ஆபீஸில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கையில் கடிகாரம் கட்டியிருந்தார். ஐந்தாவது நண்பர் ஒருவர் வந்து, "இந்தக் கடிகாரத்தின் விலை என்ன?" என்று கேட்டார்.

கடிகாரம் கட்டியிருந்தவர்: "என் சம்பளத்தில் பாதியும் மற்ற மூவர் சம்பளமும் சேர்ந்தது."

இரண்டாவது குமாஸ்தா: 'என் சம்பளத்தில் மூன்றில் ஒன்றும் மற்ற மூவர் சம்பளமும் சேர்ந்தது."

மூன்றாவது குமாஸ்தா; "என் சம்பளத்தில் நான்கில் ஒன்றும் மற்ற மூவர் சம்பளமும் சேர்ந்தது."

நாலாவது குமாஸ்தா: "என் சம்பளத்தில் ஐந்தில் ஒன்றும் மற்ற மூவர் சம்பளமும் சேர்ந்தது."

யார் சம்பளமும் அறுபதுக்குக் குறைவில்லை; நூறுக்கு மேல் இல்லை இப்படி என்றால் கடிகாரத்தின் விலை என்ன?

அமெரிக்காவை வென்ற மைனா

மலேயாவிலிருந்து போன இந்த மைனா அமெரிக்காவில் திக்விஜயம் செய்து அங்குள்ள மக்களின் மனத்தையெல்லாம் கவர்ந்துவிட்டது. வால்ட் டிஸ்னியின் கௌரவ விருந்தாளியாயிற்று. இதன் வரலாற்றிலே வியப்பும் சிரிப்பும் உருக்கமும் தரத்தக்க நிகழ்ச்சிகள் அடங்கியிருக்கின்றன.

கிளிகள் நம்மைப்போல் பேசும் என்று எல்லாருக்குமே தெரிந்திருக்கும். ஆனால், 'மைனாக்களும் அப்படிப் பேசும்; இன்னும் தெளிவாகவும் பேசும் என்ற விஷயம் அநேகம் பேருக்குத் தெரிந்திராது. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை; சந்தர்ப்பம் அறியாமலும் ஒன்றைச் சொல்லும். ஆனால் மைனாவைக் குஞ்சாக இருக்கும்போதே பழக்கிவிட்டால் புத்தியை உபயோகித்துச் சரியானபடி பேசும்; எந்த விதமான சத்தத்தையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டிவிடும். 1939-இல் கார்வெத் வெல்ஸ் என்ற அமெரிக்கர் மலாயாவுக்குப் போயிருந்தார். அங்கே ஒரு மைனாக் குஞ்சை வளர்த்து வந்தார். அதற்கு ராபிஸ் என்று பெயர் வைத்தார். அதைப்பற்றிய ரசமான விவரங்களை அவரே 'பரேட்' என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறார்:

நானும் என் மனைவி ஜெட்டாவும் மலாயாவிலிருந்து திரும்பும்போது இந்த மைனாவையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டோம். அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்ததும் சுங்க அதிகாரி, "இதென்ன பறவை?" என்று விசாரித்தார்.

"இதை நாங்கள் வளர்த்து வருகிறோம். இது நன்றாகப் பேசும்" என்றாள் ஜெட்டா.

அதிகாரி கடுசடுப்பாக, "கிளியை இங்கே கொண்டு வரவே கூடாது. அதற்கு ஏதாவது வியாதி இருக்கும்; அது இங்கே பரவுமே" என்றார்.

"இது கிளி இல்லை; மைனா" என்றாள் ஜெட்டா. தன் கோட்டு மறைவிலிருந்து அதை எடுத்து விரலில் உட்கார வைத்துக்கொண்டாள். அது சிறகுகளை ஒரு தரம் குலுக்கி அந்த அதிகாரியைப் பார்த்துக் கொஞ்சும் குரலில், "ஹல்லோ, ஜோ!" என்றது. கப்பலில் எங்களிடம் பழகிய ஓர் ஆளின் பெயர் ஜோ. அதிகாரியின் பெயரும் ஜோதான். அவருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

"என் பெயர்கூட இதற்குத் தெரிந்திருக்கிறதே! இது நிச்சயம் கிளி இல்லை. பெரிய ஜோசியர்தான் போல் இருக்கிறது. சரி; போங்கள்" என்று அநுமதி கொடுத்துவிட்டார்.

என் மனைவி என்னைக் கூப்பிடுவது போலவே அதுவும் என்னை, "ஹல்லோ, டார்லிங்!" என்று மூன்றே மாதத்தில் கூப்பிட ஆரம்பித்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம் எங்கள் இருவரையுமே கூடப் பெயரிட்டுக் கூப்பிட ஆரம்பித்து விட்டது. சில சமயம் என் மனைவி தான் கூப்பிடுகிறாள் என்று எண்ணி நான், "ஏன்?" என்று பதில் கொடுப்பேன்.

'மைனாவுக்குப் போய் யோசித்துப் பேசக் கூடிய சக்தி இருக்குமா?' என்று சில பேர் எண்ணலாம். ராபிள்ஸ் வாஸ்தவமாகவே, "திராட்சை வேண்டும்" என்று சொன்னால் சொன்னதுதான். வேறு எதையாவது கொண்டு வந்து காட்டினால் பிடிவாதமாக, "திராட்சை வேண்டும்" என்று கீச்சுக் குரலில் கத்தும்.

டெலிபோன் மணி அடிக்கும் போதெல்லாம் அதுவும், "ஹல்லோ! ஹல்லோ!" என்று பேச ஆரம்பித்துவிடும். ஒரு நாள் ஜெட்டா வெளியிலிருந்து எனக்குப் 'போன்' செய்தாள்; ராபிள்ஸும் கொஞ்ச நேரம் உற்றுக் கேட்டு விட்டு, "ஜெட்டா, ஜெட்டா" என்று அவளைக் கூப்பிட்டது. அவள் வரவில்லை. உடனே கோபத்தோடு ரிஸீவரைக் குத்த ஆரம்பித்துவிட்டது.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலின் மகள் சாரா ஒரு சமயம் எங்கள் வீட்டில் தங்கியிருந்தாள். அப்போது அவளுக்குத் தெரிந்த யாரோ ஒருவர், "உங்கள் புருஷரும் வந்திருக்கிறாரா?" என்று டெலிபோனில் விசாரித்தார். "இல்லை, நான் மட்டுந்தான் வந்திருக்கிறேன்" என்றாள் அவள். அப்போது எங்கள் ராபிள்ஸ் ஆண் குரலில், "ஹல்லோ, டார்லிங்" என்று கொஞ்சுவது போல் சொன்னது அவர் காதில் விழுந்துவிட்டது. அவர், "உங்களோடு யாரோ இருக்கிறார் போல் இருக்கிறதே?" என்று மீண்டும் விசாரித்தார். சாரா, "நான் மட்டுந்தான் இருக்கிறேன். இங்கே மைனா ஒன்று இருக்கிறது; அதுதான் அப்படிப் பேசுகிறது" என்று சொல்லியும் அவருக்கு நம்பிக்கை விழவில்லை. நேரில் வந்து பார்த்துவிட்டுத் தீரத் தெளிந்துகொண்டு போனார்.

ஆறு மாதத்துக்குள்ளேயே அமெரிக்கத் தேசிய கீதத்தின் சில அடிகளை அப்படியே பாட ஆரம்பித்துவிட்டது ராபிள்ஸ். பிறகு அதை ரேடியோ நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைத்தார்கள். அவைகளில் பிரமாதமாகப் பாடிப் பெயர் எடுத்தது. உடனே பல இடங்களிலிருந்து அதற்கு அழைப்பு வந்தது. ஹாலிவுட் சினிமா நட்சத்திரங்கள் அநேகம் பேர் அதைப் பார்க்கக் கூடிவிட்டார்கள். பிரபல டைரக்டரான வால்ட் டிஸ்னி அதைப் பாராட்டி ஒரு விருந்துகூட நடத்தினர். 'டைம்' என்ற பிரபல பத்திரிகை ராபிள்ஸின் புத்தி நுட்பத்தைப் புகழ்ந்து எழுதியது.

பிறகு, ஸான்பிரான்ஸிஸ்கோவில் சங்கீதக்கச்சேரி ஒன்று நடந்தது. எங்கள் ராபிள்ஸையும் அதில் கலந்துகொள்ள அழைத்திருந்தார்கள். 12,000 ஜனங்கள் அதைப் பார்க்கக் கூடியிருந்தார்கள். அப்போது ஜெட்டா தன் மணிக்கட்டில் ராபிள்ஸை வைத்துக்கொண்டு மேடைக்கு வந்தாள். ராபிள்ஸ் இதற்கு முன்னால் இங்கேயுள்ளது போல் விநோதமான வாத்தியக் கருவிகளையெல்லாம் பார்த்ததில்லை.

இதனால் அது பாடாதிருந்துவிடுமோ என்று ஜெட்டா நினைத்தாள். ஆனால் ராபிள்ஸ் ஐந்து நிமிஷநேரம் அபாரமாகப் பாடியதைக் கேட்டு எல்லாருமே அசந்துவிட்டார்கள். கடைசியில் அது தேசிய கீதம் பாடி முடித்ததும் ஜனங்களின் சந்தோஷ ஆரவாரம் காது செவிடுபடும்படி இருந்தது.

1943-இல் அமெரிக்க நாட்டின் தொண்டுக்காகவே ராபிள்ஸை அர்ப்பணம் செய்திருந்தோம். 1 கோடியே 50 லட்சம் டாலர் மதிப்புக்கு யுத்தக் கடன் பத்திரங்களை அது விற்றுக் கொடுத்தது. யுத்தத்தில் காயமடைந்த ஆஸ்பத்திரியில் கிடப்பவர்களெதிரே பாடி அவர்களை மகிழ்வித்தது. ஒரு நாள் அழுது கண் சிவக்க ஒரு பெண்மணி அங்கே வந்தாள். அவள், "என் மகன் சாகக் கிடக்கிறான். நேற்று இந்த ஆஸ்பத்திரிக்கு ராபிள்ஸ் வந்தது என்று கேள்விப்பட்டதும், 'அம்மா, அம்மா, நான் அதைப் பார்க்கவேண்டும்' என்று எவ்வளவோ தரம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். கொஞ்சம் அதை எடுத்து வாருங்களேன்" என்றாள்.

நாங்கள் அப்படியே அந்தப் பையனைப் பார்க்கப் போனோம். அவனுக்கு நினைவு தப்பிவிட்டது என்று தெரிந்ததும் எனக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. பையனின் மூக்கில் ரப்பர்க் குழாய் ஒன்று வைத்திருந்தது. அது அவன் போர்வையின்மேல் சுற்றிக் கிடந்தது. பாம்பைப் பார்க்காத மைனுக்கள்கூடப் பாம்புபோல் ஏதாவது தெரிந்தால் கீசசிட்டுப் பறந்தோடி விடுவது சகஜம். முன்னே ராபிள்ஸும் இப்படிப் பயந்து அலறிக் கொண்டு ஓடியிருக்கிறது; ஆகவே, இப்போதும் அப்படி ஓடிவிடுமோ என்று எனக்குத் திகிலாகத்தான் இருந்தது. ஆனால் அதற்கு என்ன தோன்றியதோ, நேராகப் படுக்கையண்டை போய் அந்தப் பையனின் கையில் உட்கார்ந்து அவன் காதருகில், "ஹல்லோ, டார்லிங் (கண்ணே)" என்று அழைத்தது. பையன் சற்று அசைந்தான். உடனே ஜெட்டா, "தேசியகீதம்" என்றாள். ராபிள்ஸ் அப்படியே பாடத் தொடங்கியது. அங்கிருந்த டாக்டர் இந்தப் பரிதாபமான காட்சியைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார்; நர்ஸுகள் அழுது விட்டார்கள். ஆனால் பெற்ற தாயின் முகத்தைப் பார்க்க வேண்டும்; பையன் புரிந்துகொண்டு சற்றே சிரிப்பதைப் பார்த்ததும் அவளுக்கு உண்டான மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. பையன் அன்று இரவே இறந்து போனான்.

இதற்குக் கொஞ்ச நாளைக்குப் பின் நியூ யார்க்கில் ஓர் ஆஸ்பத்திரியில் இப்படிப் பாடிக்கொண்டிருந்த போது, ராபிள்ஸுக்கு ஜலதோஷம் கண்டது. அன்றிரவெல்லாம் அது இருமிக்கொண்டும் தும்மிக்கொண்டும் இருந்தது. மறுநாள் காலை அதனால் பேசவோ பாடவோ முடியவில்லை; ஆனால், "ஐயோ பாவம், ராபிள்ஸ்!" என்று தொண்டை அடைக்கத் தனக்குள்ளேயே அது மெதுவாகச் சொல்லிக்கொள்வது மட்டும் கேட்டது. ஒரு வாரம் முழுதும் இராப் பகல் விடாமல் அதற்குச் சிகிச்சை செய்து பார்த்தும் பயனில்லை. அது இறந்து போயிற்று. மொத்தம் 8 வருஷம் வாழ்ந்தது ராபிள்ஸ். இப்போது அமெரிக்காவின் பிரபல இயற்கைப் பொருட் காட்சிச் சாலையில் அதன் உடம்பைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

கார்ட்டூன் கதம்பம்



அட்சரேகைகள். —'பமபாய கிராணிக்கிள்'



அம்பேத்கரின் அன்புத் தழுவல்.

—'ப்ரீ இந்தியா'

தேர்தல் மூஸ்தீபு —



கரடியின் காலடியில். —'அமிர்தபஜார் பத்திரிகை'



'உள்ளத்திலே உரம் பெறுங்கள்' என்கிறார் முன்ஷி. —'ப்ளிட்ஸ்'

—பந்தயத்தக்கு முன் தோன்றும் வரிசை. —'சங்கர்ஸ் வீக்லி'

'எங்கும் அவன் அன்றி வேறில்லை' என்ற அத்துவைத தத்துவத்தை எளிதில் விளக்கும் ஒரு சிறு சம்பாஷணை.

தெய்வ அறிவு

பி. தாமோதரம் பிள்ளை

குரு: அப்பா, அந்தச் சுவரில் எழுதியிருக்கும் யானையைப் பார்த்தாயா?

சிஷ்யன்: ஸ்வாமி, பார்த்தேன்.

கு: எதைப் பார்த்தாய்?

சி: சுவரில் யானையின் வடிவத்தில் கோடுகளைப் பார்த்தேன்.

கு: யானையின் வடிவத்தில் கோட்டைமட்டுந்தானே பார்த்தாய்?

சி: ஆமாம்.

கு: அப்படியானல் 'யானை' என்ற அறிவை என்னவென்று சொல்லலாம்?

சி: யானை பற்றிய அறிவு சுவரின் மறைவு என்று சொல்லாம்.

கு: சரி. அப்படியானல் 'அறிவு' என்பது என்ன?

சி: மறைவுதான்.

கு: என்ன? 'அறிவு ஒரு மறைவு' என்று சொல்லுகிருய?

சி: ஆமாம், ஸ்வாமி.

கு: அறிவு எப்படியப்பா மறைவாகும்?

சி: உண்மையாகவே உயிருள்ள ஒரு யானை, இந்தச் சுவரின் பக்கமாக வருவதாய் வைத்துக் கொள்வோம்.

கு: சரி.

சி: அந்த யானை தோன்றும் அளவுக்குச் சுவர் தெரியாது என்பது உண்மைதானே?

கு: ஆமாம்.

சி: ஆகவே, யானை சுவரை மறைப்பது தெளிவாகிறது.

கு: சரி; யானை சுவரை மறைக்கிறது.

சி: அங்கே யானைபற்றிய அறிவு சுவர் பற்றிய அறிவை மறைக்கவில்லையா? ஆனதால் அறிவு ஒரு மறைவு என்றேன்.

கு: இருக்கட்டும். இதிலிருந்து எல்லா அறிவும் மறைவு என்று எப்படிச் சொல்வது?

சி: நாம் ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது மற்ற வஸ்துக்கள் நமக்குத் தெரிவதில்லை.

கு: அப்படியா! இருக்கட்டும். நீ ஈசுவரனைப் பார்க்கிருயா?

சி: இல்லை.

கு: நீ பார்க்காததற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

சி: ஏதோ ஒன்று மறைப்பதால் ஈசவரன் எனக்குத் தெரியாமல் இருக்கலாம்.

கு: அப்படி இல்லை என்று வைத்துக்கொள்.

சி: அப்படி இல்லாவிட்டால் நான் வேறு எதையோ பார்க்கிறேன். அதனல் ஈசுவரன் எனக்கு மறைந்திருக்கிருர் என்று சொல்லவேண்டும்.

கு: நீ 'வேறு எதையோ பார்க்கிருய்' என்ருல், எதை?

சி: பிரபஞ்சத்தை.

மூலம்: கலாநிதி (பூஜா மலர்), மலையாளம்.

கு: சரி, நீ பிரபஞ்சத்தைப் பார்க்கிறாய்; அதனால் என்ன?

சி: அதனால் நான் பகவானைப் பார்ப்பதில்லை.

கு: ஏன்?

சி: பிரபஞ்ச அறிவு தெய்வ அறிவை மறைக்கிறது. அதனால் தான் சுவரைப் பார்க்கவில்லை.

கு: பிரபஞ்ச அறிவு எப்படிப் பகவானை மறைக்கும்?

சி: யானையின் தோற்றம் சுவரை மறைப்பது போலத்தான்.

கு: உன் கருத்தை விளக்கமாகச் சொல்.

சி: சுவரில் யானை இல்லை; இருப்பதாகத் தோன்றுகிறது. யானை வடிவமான கோடுகளினிடையே யானையைப் பார்ப்பதாகவே தோன்றுகிறது.

கு: உம்; அப்புறம்?

சி: அப்படியே பகவானிடத்தில் பிரபஞ்சமில்லை. ஆயினும், நமக்கு அப்படி இருப்பதாகத் தோன்றுகிறது. அப்போது பகவான் மறைகிறார்.

கு: சரி. அப்படியானால் நாம் பார்ப்பதெல்லாம் பகவான் நாராயணன் தான் என்று ஏற்படுகிறதே?

சி: ஆமாம், ஸ்வாமி; பிரபஞ்சம் என்று தோன்றுவதெல்லாம் நாராயணனைத்தவிர வேறில்லை.

கு: அப்பா, நீ தெரிந்துகொள்ள வேண்டியதைத் தெரிந்துகொண்டு விட்டாய். மிகவும் சந்தோஷம்.

சி: பகவானே, தாங்கள் என் கண்ணைத் திறந்தீர்கள். தங்களுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம்.

க்விஸ் விடை

(1) பிரிட்டனில் விடிவதற்கு முன் இந்தியாவில் விடிந்து விடும். (இந்திய ஸ்டாண்டர்டு டயத்துடன் 6½ மணி கூட்டினால் க்ரீன்விச் டயம் கிடைக்கும்.) (2) உடம்பின் உஷ்ணத்தைவிட ஒரு டிகிரி அதிகமாக இருக்கும், நாக்குக்கடியில் உஷ்ணம். ஆரோக்கிய உடம்பின் உஷ்ணம் பொதுவாக 98.4 டிகிரி பாரன்ஹீட்தான். (3) 1903-இல். (4) காற்றிலே சிலவற்றின் விதை பறக்கும்; நீரிலே சிலவற்றின் விதை செல்லும்; பிராணிகள் மூலம் சிலவற்றின் விதை பிரயாணம் செய்யும்; காய் வெடித்துச் சிலவற்றின் விதைகள் அப்பால் போய் விழும். (5) ஒன்பது. (6) சரி. ஏனென்றால், அது குடலுக்கு அதிர்ச்சி கொடுக்கும். ஆனால் சாதாரணமாய்க் குளிர்ந்திருக்கும் பச்சைத் தண்ணீர் நல்லதுதான். (7) பஸிபிக்; அட்லாண்டிக்; இந்தியன்; ஆர்க்டிக். (8) ஆப்பிரிக்காவில். (9) குமாஸ்தாக்கள் சம்பளம் முறையே ரூ. 96, 72, 64, 60. ஆகவே கடிகாரத்தின் விலை ரூ. 244.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: உதயமாகிறது; பிறகு......?

பதில்: வயிறு காலியென்று உணர்கிறாய். அதை நிரப்பவேண்டியிருப்பதனால் போராட்டம் ஆரம்பிக்கிறது. உணவைத் தேடிச் சென்று பல மணிநேரம் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உணவுள்ள இடத்தைக் கண்டு பிடிக்கிறாய்; ஆனால் அதை நீ அடைவதற்குள் வேறு எவனோ அதைப் பற்றிக்கொள்கிறான். அந்த மனிதனும் உன்னைப்போல வாழ்க்கைப் பிரயாணத்தை நடத்துகிறவன்தான்; உன்னைப் போலவே பட்டினியாக இருக்கிறவன்; ஆனால் உதயமாவதற்குச் சிறிதுமுன்பே, நீ எழுவதற்கு முன்னமே எழுந்துவிட்டான். அதுதான் போட்டி. அடுத்தடுத்து உன் கைக்கு எட்டுவது வாய்க்கு எட்டுவதில்லை; உன் வேர்வை நாறுகிறது; வாய் புளிக்கிறது. பசி இப்போது வேதனையாக மாறுகிறது; ஆத்மா கெஞ்சத் தொடங்குகிறது. அதுதான் துரதிருஷ்டம். வானுலகத்தை அண்ணாந்து பார்த்து வைகிறாய்; அங்கிருந்து விடை வருவதில்லை.

கண் சிவப்பேறச் சுற்று முற்றும் பார்க்கிறாய்; மற்றவர்கள் சுகமாகத் தூங்குவதைக் காண்கிறாய். இப்போது நீ நினைக்கிற நினைப்புத்தான் கம்யூனிஸம். ஒரு கத்தியை எடுத்து, தூங்குகிறவர்களைக் கொள்ளையடித்து, பசிவேதனையை ஆற்றிக்கொள்கிறாய். அதுதான் குற்றம். வயிறு நிரம்பிவிடவே நீயும் மற்றவர்களைப்போலவே தூங்குகிறாய்; ஆனால் அடுத்தநாள் காலையில் வெறும் வயிற்றோடு மறுபடியும் போராட்டம் தொடங்குகிறது.

காலையானாலும் சரி, மாலையானாலும் சரி உணவுக்காக வாழ்க்கைப் பிரயாணம் செய்வோரிடையே நடப்பது இது. நெடுங்காலமாக மனிதன் மனிதனைக் கொள்ளையடித்து வாழ்ந்துவருகிறான்; இனியும் அப்படித்தான் வாழப்போகிறான்.

* * *

கே: தென்னாப்பிரிக்காவிலுள்ள வெள்ளைக்காரருக்கு ஆப்பிரிக்கப் பசுவின்பால் என்ன ருசியாக இருக்கும்?

ப: பால் விஷயத்தில் ஒரு நன்மை இருக்கிறது. மாடு எந்த நிறமானாலும் பால் எப்போதும் வெள்ளைதான். வெள்ளைக்காரர்களுக்கு வெள்ளையென்றால் அளவற்ற அபிமானம். வெள்ளையாயிருக்கும் எதையும் அவர்கள் ஆனந்தமாகக் குடிப்பார்கள்.

* * *

கே: பேயை நீங்கள் நேரே பார்த்ததுண்டோ?

ப: சினிமா உலகத்தில் தேவதைகள்தான் நடமாடுகிறார்களே!

கே: 'சுயராஜ்யம் வரட்டும்; ஒருவருக்குக்கூட 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் இராது' என்று காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள்; இப்போது சம்பளப்பணம் நாலு ஸ்தானங்களாக இருக்கிறதே!

ப: மற்றச் சாமான்களுக்கெல்லாம் விலை ஏறியிருக்கிறபோது தேசபக்திக்கும் விலை ஏறிவிட்டது.

* * *

கே: சினிமா நடிகையின் கணவனாக இருப்பதில் என்ன லாபம்?

ப: உத்தியோகம், நடத்தை, கீர்த்தி இவைகளைப்பற்றிய கவலையே இல்லாமல் இருக்கலாம்.

* * *

கே: வேலை செய்துவிட்டு வீட்டுக்கு எப்போதும் கோபமாகவே வரும் புருஷனுக்கு ஏற்ற மருந்து என்ன?

ப: வரும்போது மௌனம்; கேள்விகளுக்குச் சுருக்கமான பதில்; தடபுடல் இல்லாமல் அமைதியாக உணவு பரிமாறுதல். கேள்விகளே கூடாது. அரைமணி கழித்து அந்த முரடன் புன்முறுவலுடன் நல்ல படியாகப் பேசத் தொடங்குவான்.

* * *

கே: மந்திரிகளின் காரில் எப்போதும் ஏன் கொடி இருக்கிறது?

ப: போலீஸ்காரன் கண்டு 'ஸல்யூட்' அடிக்கவும் வழிப்போக்கன் காறித்துப்பவும் உதவும் அடையாளம்.

* * *

கே: ஓர் இந்தியனின் சராசரி வருமானம் என்ன?

ப: வருஷத்துக்கு ரூ. 255; அதாவது மாசத்துக்கு ரூ. 21-4-0. ஒரு நாளைக்குப் பதினோரணாக் கிடைக்காத ஜனங்கள் லட்சம் லட்சமாக இருக்கிறார்கள்.



கே: யார் உத்தமமான கணவன்?

ப: அடுத்த வீட்டுக்காரியின் புருஷன்.

* * *

கே: பெண்களுக்குக் காலேஜ் படிப்பு இருந்தால் அது அவர்கள் புருஷர்களை அடக்கியாள உதவுமா?

ப: சில பேர்களைத் தவிர, பொதுவாகக் காலேஜ்படிப்பு, பெண்களுக்கு நன்மை தந்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்குத் தலைக்கனமும் தங்களைப்பற்றிய தவறான எண்ணங்களும் அதனால் உண்டாகின்றன. அவர்களுடைய பைத்தியக்காரக் கொள்கைகளை உலகம் கவனிப்பதில்லை. அதனால் கணவன்மார் கஷ்டப்பட நேர்கிறது.

* * *

கே: ஸ்ரீமதி இந்திரா காந்தி இன்னும் எவ்வளவு காலம் வேலையில்லாமல் இருப்பாள்?

ப: கல்யாணம் ஆன பெண்ணுக்கு வாழ்க்கை முழுவதும் வேலை உண்டே!

* * *

கே: கடவுளும் இயற்கையும் ஒன்றா?

ப: இயற்கை மனிதனைக் காட்டிலும் கடவுளுக்கு அருகில் இருக்கிறது; ஆனாலும் சிருஷ்டிகர்த்தாவும் சிருஷ்டியும் எப்படி ஒன்றாக இருக்கமுடியும்? ஆயினும் ஒவ்வொரு சிருஷ்டியிலும் அவனுடைய தெய்விக ஒளி வீசுகிறது.

20-லட்ச ரூபாய்ப் பூனை

அமலேந்து ஸேன்

ரத்தினங்கள்தான் மனிதர் மனத்தை என்ன பாடு படுத்தி, சரித்திரப் பிரசித்தி பெறுகின்றன!

ஒரு சாதாரணப் பூனையின் விலை 20 லட்சம் ரூபாய் சொச்சம் என்றால் நம்புவீர்களா? ஆனால் உண்மையாகவே இப்படி ஒரு பூனை இருக்கத்தான் இருக்கிறது. களிமண்ணால் செய்த பொம்மைப் பூனை அது.

இந்தப் பூனைக்குள் இரண்டு அருமையான கெம்புக்கற்களை யாரோ ஒளித்து வைத்திருக்கிறார்கள். இவற்றின் மதிப்பு 23,75,000 ரூபாய். இவை இப்போது எங்கே யாரிடம் இருக்கின்றன என்றே தெரியவில்லை.

18-ஆம் நூற்றாண்டிலேயே இந்த விஷயம் பலருக்குத் தெரியும். கி. பி. 167-இல் செய்த ஒரு கொரிய விக்கிரகத்தின் கண்களில் இவை முதலில் இருந்தன. பின்னால் யாரோ இவைகளைத் திருடிச் சென்றுவிட்டார்கள். 10-ஆம் நூற்றாண்டில் கொரியாவில் நடந்த புரட்சியின்போது இவை பலரிடம் கைமாறி இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

600 வருஷங்களுக்குப் பிறகு இவை எப்படியோ சுலைமான் என்ற துருக்கி சுல்தானுக்குக் கிடைத்தன. சுல்தானுக்கு ஒரு வெள்ளைக்கார அழகியின்மேல் ஆசை. அவளைத் தன் அந்தப்புரத்தில் சேர்த்துக்கொள்வதற்காக இந்தக் கெம்புக்கற்களை அவளுக்குப் பரிசாக அளித்தான். இவை அவளிடம் நீடித்து நிற்கவில்லை. 6 மாதத்துக்குள்ளாகவே யாரோ அவளைக் கொன்றுவிட்டு இவைகளைத் திருடிச் சென்றுவிட்டார்கள்.

பிறகு எப்படி எப்படியோ இவை பலரிடம் கைமாறிக் கடைசியில் பிரான்ஸ் தேசத்தை அடைந்தன. 15-ஆம் லூயி என்னும் பிரெஞ்சு மன்னன் இவைகளை ஏராளமான தொகை கொடுத்து வாங்கி, மாடம் பம்படூர் என்ற தன் காதலியின் கழுத்திலே அணிந்துவிட்டான். அவள் இவைகளை ருஷியப் பிரபு ஒருவருக்கு விற்றுவிட்டாள்.

இதற்குப் பிறகு 130 வருஷங்கள் வரை இவைகளைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. 1894-இல் மீண்டும் இவைகளைப் பற்றிய விவரங்கள் தெரிந்தன. கிளாஸ் கட்டன் என்ற பெரிய நகைத் திருடன் ஒருவனிடம் இந்தக் கெம்புக் கற்கள் இருப்பதாக ஜெர்மன் போலீஸார் அறிந்தார்கள். அவனைப் பிடிக்கத் தீவிர முயற்சியும் செய்தார்கள். ஒரு தடவை அவன் போலீஸாருடன் சண்டையிட்டுத் தப்பி ஓடும்போது போலீஸார் அவனைச் சுட்டுவிட்டார்கள். அவன் உடம்பையும் சொத்துக்

மூலம்: ஓரியெண்ட் (ஆங்கிலம்; 28-10-'51), கல்கத்தா.

களையும் போலீஸார் எவ்வளவு சோதனை செய்தும் அவை அகப்படவில்லை.

மைக்கேல் கிரேவ்ஸ் என்று ஓர் ஆங்கிலேயர் இருந்தார். விலை உயர்ந்த கற்களைச் சேகரிப்பதில் அவருக்கு ஓர் ஆர்வம். அதிகாரிகளின் முயற்சிபலனற்றுப்போகவே கிரேவ்ஸ் தாமே 1897-இல் ஜெர்மனிக்குச் சென்றார். போலீஸார் செய்த சோதனைகளை அவர் தொடர்ந்து செய்தார். பல இடங்களிலும் தேடி அலைந்தார். கசைத் திருடன் கட்டன் வசித்த சுற்றுப்புறங்களில் எல்லாம் நுணுக்கமாக விசாரித்தார்.

கடைசியில் இந்தக் கற்களைப்பற்றிய தகவல்களைப் பொம்மை செய்யும் வியாபாரி ஒருவனிடமிருந்து தெரிந்துகொண்டார்.

யாரோ ஒருவன் 3 வருஷங்களுக்கு முன்பு வியாபாரியிடம் இருந்த களிமண் பூனைப் பொம்மைகளில் ஒன்றை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருந்தானம். அவன் முதலில் கடையில் இருந்த ஈரமான பல களிமண் பொம்மைகளைக் கொஞ்ச நேரம் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தானம். பிறகு அதில் ஒரு பூனைப் பொம்மையை விலைக்கு வாங்கிக்கொள்வதாகச் சொன்னனம். மற்றப் பூனைப் பொம்மைகளிலிருந்து அடையாளம் தெரிந்துகொள்வதற்காக அதன் பின்னல் ஒரு சிலுவை அடையாளம் இட்டானம். பூனைப் பொம்மை காய்ந்து வேலை முழுவதும் முடிந்த பிறகு வாங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டுப் போனனம். பின்னல் என்ன காரணத்தாலோ அவன் வரவேயில்லையாம்.

பொம்மைக்காரன் சொன்ன அடையாளங்களிலிருந்து அந்த மனிதன் நகைத் திருடன் கட்டனே என்று கிரேவ்ஸ் தீர்மானித்தார். இந்தக் கற்களை அந்தப் பூனைப் பொம்மையில் கட்டன் பதித்து ஒளித்திருக்கவேண்டும் என்று ஊகித்து அந்தப் பொம்மையை விலைக்குத் தரச் சொன்னர்.

"அது இப்போது என் கையில் இல்லையே. அதை அவன் பல மாதங்கள் வரை வந்து விலைக்கு வாங்கிச் செல்லவில்லை. இதனல் அமெரிக்காவுக்கு வழக்கமாக அனுப்பும் மற்றப் பொம்மைகளுடன் அதையும் சேர்த்து அனுப்பிவிட்டேன்'' என்றான் பொம்மைக்காரன். 'இனி அந்தக் கெம்புக் கற்கள் கிடைப்பது சிரமம்' என்று தோன்றிவிட்டது கிரேவ்ஸுக்கு. கிரேவ்ஸ் கடல் தாண்டி அமெரிக்காவுக்குச் சென்றும் பூனைப் பொம்மையைத் தேடினர். அவருடைய முயற்சிபலன் தரவில்லை. ஒருவேளை அந்தக் கெம்புக் கற்கள் வேறு யாருக்காவது கிடைத்துவிட்டனவோ என்னவோ, யார் கண்டார்?

ஆனல் சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த ஒரு கொலைக்கும் இந்தக் கற்களுக்கும் சம்பந்தம் இருக்கும் என்று தோன்றுகிறது. செண்டகி மாகாணத்தில் ஒரு சுடுகாட்டுக்கு அருகே யாரோ வெளிநாட்டான் ஒருவன் இறந்து கிடந்தான். அவனுக்கு அருகே ஏதோ ஒரு பூனைப்பொம்மை ஒன்றின் உடைந்த பாகங்கள் சில கிடந்தன. இறந்தவனே, கொலை செய்தவனே யார் என்று இதுவரையில் தெரியவில்லை. ஆனல் உடைந்து கிடந்த பொம்மை, கிரேவ்ஸ் தேடி அலைந்த பொம்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று மட்டும் தோன்றுகிறது.



ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்ம ஞானத்துக்குமுன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

சோதி அவதாரம்: அன்று ஆருத்திரா தரிசனத் திருநாள். சோதிப் பிழம்பாகிய இறைவன் உலகத்தையெல்லாம் தன் திருவருட் சக்தியால் இயக்கி ஐந்தொழிலும் செய்து ஆட்டுவதைத் தன்னுடைய ஆனந்த தாண்டவத்தால் காட்டும் அற்புத நாள். அம்மையையும் அப்பனையும் தரிசித்துக் களியை உண்டு அன்பர் களிக்கும் திருநாள். அன்று ரமண சோதி உலகில் திருவவதாரம் செய்தது.

'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே' என்று நடராஜ மூர்த்தியை வாழ்த்தவர் மாணிக்கவாசகா. உலகமெல்லாம் துயிலும் நள்ளிரவில், தூங்கும் குழந்தையை விழித்திருந்து பாதுகாக்கும் அன்னையைப்போல, ஆனந்த நடராஜப் பெருமான் கூத்து உகந்த அருட் செயலை அவர் குறிக்கிறார்; உலகத்து உயிர்களும் தேவர்களும் ஒடுங்கத் துயிலும் மகாப் பிரளயகாலமாகிய நள்ளிருளில், வேறு ஒருவரும் சாட்சியின்றித் தான் ஒருவனே நடனம் செய்யும் இறைவனுடைய உயர்வைக் குறிப்பதாகவும் கொள்ளலாமே! எப்படியோ, நள்ளிருளிலே சோதி நடமிடுகிறது.

ரமணசோதி உதயமானதும் நள்ளிரவில்தான். 1872-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ஆம் தேதி இரவு ஒரு மணிக்கு அப்பெருமான் அவதாரம் செய்தார். திருச்சுழியல் என்னும் தலத்தில் சுந்தரம் ஐயர் என்ற பெரியாருக்கும் அழகம்மை என்ற அன்னையாருக்கும் இரண்டாம் குமாரராக உதித்தார். சுந்தரம், அழகு என்ற இரண்டு பெயர்களும் ஒரே பொருளையுடைய இரு வேறு சொற்கள். அழகை எந்தப் பாஷையிலே சொன்னால் என்ன? அழகு அழகுதான். இந்த இரட்டை அழகுக்குப் பிறந்த பெருமானுக்கு

வேங்கடராமன் என்ற திருநாமம் இட்டார்கள். வேங்கடரமணன் என்றும் வழங்கினார்கள். அந்தப் பெயரின் பிற்பகுதியே இன்று உலகம் அறியும் பெருமானின் அடையாளத் திருநாமமாகவும், அடியார்களின் அகங்கனிவிக்கும் மந்திரமாகவும் விளங்குகிறது. ஆருயிர்களையெல்லாம் தன்னுடைய அருள் வெள்ளத்தில் தண்மை பெறச் செய்து ரமிக்கச் செய்கிறவன்; உயிர்த் தொகுதிகளுக்கு அருள் வழங்கி அந்த 'ஈத்துவக்கும் இன்பத்'திலே ரமிக்கும் பேரருளாளப்பிரான் - இரண்டு வகையிலும் ரமணன் என்னும் திருநாமம் பொருத்தமாக அமைந்துவிட்டது.



சோதிமலையாகிய அருணாசலம் இன்று உயிரற்ற மலையாக நிற்கிறது. அதன் முடியிலே சோதியை ஏற்றுகிறார்கள். உயிருள்ள சோதியாகத் திகழ்ந்த ரமணபகவான் அந்த மலையின் அடியிலே சோதியாக இருந்தார். அடியும் முடியும் சோதியால் அணிபெற்ற அருணாசலம், புராணத்திலே சொல்லப் பெறாத தனிப் பெருமையைப் பெற்றது.

அத்தகைய சோதி உதயமான போது அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. அழகம்மையார் கருவுயிர்க்கும் காலம் வந்தது. முன்னே ஒரு குழந்தையை ஈன்றிருந்தாலும் இந்தக் குழந்தையைப் பெறுவதற்கு முன்பினும் மிக்க வேதனை உண்டாயிற்று. ஆணோ பெண்ணோ யார் அறிவார்? உலகத்துக்கே ஞானச் செல்வத்தைத் தரும் சோதியை வயிறு வாய்த்த அம்மையார் பெற்ற வேதனை இன்பவேதனை; இன்பமாக முடியும் வேதனை - அன்னைக்கு மட்டும் அல்ல, ஞானத்தாகம் பெற்ற அன்பர் கூட்டம் அனைத்துக்குமே. அப்பொழுது வழக்கம்போல வயது முதிர்ந்த ஒரு கிழவி அம்மையாருக்குத் துணையாக இருந்தாள். கண் ஒளி மழுங்கிய முதியவள் அவள். அம்மையார் ஞானக்குழந்தையை ஈன்றபோது, "இது என்ன இங்கே! பளபளக்கிறதே!" என்று அந்தக் கிழவி பிரமித்தாள். அவளுக்கு ஓர் ஒளி தோன்றியது. ஈன்ற இடத்திலேயே ஒளி காட்டியது, சோதி மலையைச் சார்ந்து ஞானச் சோதியாக விளங்குவதற்கு அறிகுறிபோலும்! (வாழ்வு)

ஆத்மானந்தம்: 'இந்த வாழ்

வில் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகளோடு நான் ஆத்மாவை அறிய முடியுமா?' என்ற சந்தேகம் பலருக்கு வரலாம். இந்தச் சந்தேகத்துக்கே இடம் இல்லை. ஆத்மானந்தத்தை யார் வேண்டுமானாலும் அடையலாம்; எப்பொழுது வேண்டுமானாலும் அடையலாம். அது என்றும் கொள்ளத் தக்கதாய் இருக்கிறது. சிரத்தையோடு அதை நாடவேண்டும். அப்பொழுது அது சித்திக்கும். இந்த வாழ்வில் குறைகளும் தொல்லைகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அவை வெளியிலிருந்து வரவில்லை. எல்லாம் அகத்திலிருந்து வருபவை. நமக்குள் இருக்கும் அகந்தையே எல்லாவற்றுக்கும் காரணம். அற்பமான விஷயங்களைக் கற்பித்துக் கொண்டு அவற்றால் உண்டாகும் தொல்லைகளைக் கடக்க முயல்கிறோம். எல்லாத் துன்பங்களுக்கும் அகந்தையே மூலம். வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களால் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன என்பது போலியுணர்வு. நமக்கு அந்நியமாய் உள்ளவற்றிலிருந்து இன்பமோ துன்பமோ உண்டாவதில்லை. அப்படி அவற்றால் இன்பம் அடைந்தாலும் அது நித்தியமாக இராதே!

அகந்தையை விலக்கி அதனை இல்லாமல் சுட்டெரித்தால் பந்தத்திலிருந்து விடுபடலாம். அகந்தையை ஏற்று அதன் போக்கிலே வாழ்ந்தால் அது பல தளைகளை உண்டாக்கும்; அவற்றை மீறும் பயனற்ற முயற்சிகளையும் உண்டாக்கும். ஜனகராஜாவை அகந்தையென்னும் திருடன் தன் வசப்படுத்திக் கொள்ளையிட முயன்றான். ஆனால் ஜனகரே வென்றார். திருடனுடைய தந்திரம் அவரிடம் பலிக்கவில்லை. (வாக்கு)

நாமஜபம்: நாமஜபம் செய்யும் முறை என்ன?—பக்தி இல்லாமல் மேல் ஒழுந்தவாரியாக நாமத்தைச் சும்மா உச்சரிக்கக் கூடாது. கடவுள் பெயரை உபயோகிப்பதானால், நாம் நம்மை முழுதும் அவருக்கு அர்ப்பணம் செய்து அவரை அழைக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் நாமம் எப்பொழுதும் நம்முடன் இருக்கும். (வாக்கு)

பத்தியம் பூர்த்தி.

லங்காஷயரில் ஒரு பெண்மணி ரொம்பப் பருத்திருந்தாள். அவள் சற்று மெலிவதற்காக, டாக்டர் பத்தியச் சாப்பாடு சாப்பிடச் சொன்னார்.

ஒரு நாள் அவளைப் பார்க்க ஒரு சிநேகிதி வந்தாள். உருளைக்கிழங்கை ஒரு பெரிய தட்டு நிறைய வைத்துக்கொண்டு பருத்தவள் தின்றுகொண்டிருந்தாள்.

"என்ன இது! நீ பத்தியத்தில் இருக்கிறாய் என்றல்லவா எண்ணியிருந்தேன்" என்றாள் சிநேகிதி.

"ஆமாம்; பத்தியத்தில்தான் இருக்கிறேன். முதலில் பத்தியச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டேன். இப்போது என் ஆகாரம் சாப்பிடுகிறேன்" என்றாள் பருத்தவள்.

—'டப்ளின் ஒப்பீனியன்'

குழந்தைக்கு ஓயாமல் நிறைய நிறையப் பால் கொடுப்பது நல்லதா என்ன!

பால் நிறுத்தும் சமயம்

டாக்டர் எஸ். பட்டாசார்ய

குழந்தைக்குப் பால் கொடுப்பதை நிறுத்துவதும் கலப்பு உணவு கொடுப்பதும் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள். நம் நாட்டில் இவற்றைப்பற்றி அலட்சியமாகவே இருக்கிறார்கள்.

இதைப்பற்றி நம் முன்னோர் நன்றாக அறிந்தே ஆறும் மாதத்தில் அன்னப் பிராசனம் செய்யும் வழக்கத்தை வைத்திருந்தார்கள். அது முதல் பசும் பால், பாயசம் போன்றவற்றைச் சற்றுக் கொடுப்பார்கள். இந்தக் காலத்திலும் அன்னப் பிராசனம் செய்யும் வழக்கம் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் குழந்தைக்கு அதனால் ஒரு நன்மையும் உண்டாவதில்லை.

வளரும் குழந்தைகளுக்கு வெறும் பாலை மட்டுமே இப்போதெல்லாம் கொடுத்து வருகிறார்கள். ‘மற்ற எந்த உணவையும் ஜீரணித்துக்கொள்ளக் குழந்தையின் குடலுக்குச் சக்தி இல்லை; வேறு புஷ்டிகரமான ஆகாரங்கள் கொடுத்தால் ஈரல், குலைக்கட்டிகள் வந்துவிடும்’ என்ற பயம் ஒரு காரணம். இதோடு பாலைப் புகட்டுவது சுலபம் என்று நினைப்பதும் ஒரு காரணம். குழந்தைகளுக்கென்று வேறு உணவு தயாரிப்பதைப் பெரும்பாரமாகச் சில பேர் எண்ணுகிறார்கள்; கறிகாய் வேகவைத்த ரசத்தை ஒரு டம்ளர் கொடுப்பது அவர்களுக்கு அதிகப்படி வேலையாகவே தோன்றுகிறது. இத்தகைய மனோபாவத்தை மாற்ற டாக்டர்கள் வெகு சாதுரியமாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பால் புஷ்டி தரும் உணவே என்றாலும் அது ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்குந்தான் பொருந்தும். பின்பு ‘விட்டமின்’ உள்ள கலப்பு உணவு குழந்தைக்கு அவசியம் என்பதைத் தாய்மார் உணர வேண்டும்.

சௌகரியமான நிலைமையில் உள்ள சிலர் தங்களுடைய ஒரு வயதுக் குழந்தை தினந்தோறும் ஒன்றரைப் படி பசும்பாலைக் குடிக்கிறதென்று பெருமைப்பட்டாலும் குழந்தை வளருவதுமில்லை; சுறுசுறுப்பாக இருப்பதுமில்லை. இவர்கள் பாலைக் குறைத்து, கலப்பு உணவு கொடுக்க, டாக்டர் சாதுரியமாக உணவுப் பட்டியல் சொல்ல வேண்டியிருக்கிறது. பணவசதி மிதமிஞ்சியவர்களோ வேளை, போது என்றில்லாமல் கண்ட கண்ட உணவுகளைக் கொடுத்துக் குழந்தையின் ஜீர்ணசக்தியைக் கெடுத்துவிடுகிறார்கள்; குழந்தை இதன் பலனாகக் குடலில் நோயுற்றுப் பல நாட்கள் வறட்டுப் பார்லிக் கஞ்சியை அருந்தி இளைத்து வாடும்படி நேர்கிறது.

மூலம்: தாம்பத்ய ஜீவனம் (கன்னடம்), தொட்டபள்ளாபுரம்.

பொதுவாக, நம் நாட்டில் பொருளாதார நிலைமை காரணமாகப் பல தாய்மார், குழந்தைக்குப் புஷ்டியுள்ள உணவளித்துப் போஷிக்க முடியாததால், தாய்ப்பாலை நிறுத்தாமல் விட்டுவிடுகிறார்கள். குழந்தைக்கு ஜீவசத்தும் இரும்புச்சத்தும் சேரும்பட்சத்தில் தாய்ப்பால் சிறந்தது தான். 11, 12 ராத்தல் நிறை உள்ள ஐந்து அல்லது ஆறுமாதக் குழந்தைக்குச் சரியான போஷாக்கு வேண்டுமென்றால், ஒரு நாளைக்கு 30 அவுன்ஸ் தாய்ப்பால் அருந்தவேண்டும். இது நடக்காத காரியம். ஆறுமாதக் குழந்தைக்கு வேண்டிய உணவுச் சத்து, தாய்ப்பாலில் இல்லை. இந்தச் சமயத்தில் பசும்பாலைச் சேர்த்துக் கொடுப்பது சரியான முறை. ஆனால் பசும்பாலிலும் குழந்தையின் வளர்ச்சிக்கு வேண்டிய அளவு 'விட்டமின்' சத்துக்கள் இல்லை. தாயின் கருவில் குழந்தை வளரும் போது அதற்கு வேண்டிய இரும்புச் சத்துப் பித்தப்பையில் சேர்கிறது. அந்தச் சத்து, குழந்தைக்கு ஐந்தாறு மாதங்கள் வரையில் காணும். பிறகு உணவுகள் மூலமாகவே குழந்தைக்கு இரும்புச் சத்துச் சேரவேண்டும். எந்தப் பாலிலும் இது குறைவே. அதனால் பாலைமட்டும் குழந்தைக்குக் கொடுத்தால் ரத்தக் குறைவு காணுகிறது. ஆகவே, ஆறுமாதக் குழந்தைக்குப் பழம், பழரசம், கறிகாய்களை வேக வைத்த நீர், முட்டை இவற்றைச் சிறிது சேர்த்துவந்தால் வேண்டிய 'விட்டமின்' சத்துக்கள் கிடைத்து விடும். பிராணிகளின் கன்றுகள் இரும்புச் சத்து உள்ள புல்பூண்டையே விரும்புகின்றன. வெகு நாட்கள்வரையில் மனிதக்குழந்தை ஒன்றுதான் பாலை அருந்துகிறது.

ஆறு மாதம் வரைக்கும் வெறும் பாலை அருந்திப் புஷ்டியாய் இருந்த குழந்தை, பிறகு வாடி இளைக்கும்; சுவாசப்பை சம்பந்தமான நோய்களுக்கும் இலக்காகும்.

நாலு மாதம் முதல் பத்து மாதம் வரையில் குழந்தைகள் வாயில் விரலைப் போட்டுக்கொள்ளும். எயிறும் நாக்கும் ஊறுவதாலேயே அவை இப்படிச் செய்கின்றன. புதிய வஸ்துக்களைத் தின்னவேண்டுமென்ற ஆசையே இதன் காரணம். தனக்குக் கிடைக்கும் திரவ ஆகாரமாகிய பாலில்மட்டும் குழந்தை திருப்தி அடைவதில்லை. கண்ட கண்ட பொருள்களை வாயில் போட்டு விழுங்குவதால் குழந்தைக்குப் பேதி தொடங்குகிறது. பல் முளைக்கும் சமயத்தில் பேதியாவதற்குக் காரணம் இதுதான். பல் முளைக்கும் நிகழ்ச்சி இயற்கையானதே; நோயின் ஆரம்பத்துக்கு அது காரணமாகாது. 'பல் முளைக்கிறது; அதற்காகப் பேதியாகிறது' என்ற எண்ணம் நம்மவர் மனத்திலிருந்து போகவேண்டும். ஐந்தாம் மாதம் முதல் தாய்ப்பாலைக் குறைத்து அரிசிக் கஞ்சி, கறிகாய்களை வேக வைத்த நீர், பாலில் வேகவைத்த ரொட்டி முதலியவற்றைக் கொடுக்க ஆரம்பித்தால் குழந்தை கண்டதைப் பொறுக்கித் தின்னும் வழக்கத்தை நிறுத்திவிடும்; பல் முளைக்கும்போது பேதியும் ஆகாது.

வயதுவந்த சில குழந்தைகள் சரியாகச் சாப்பிடுவதில்லையென்று தாய் தந்தையர் கவலைப்படுகிறார்கள். இந்தக் குழந்தைகள் சாப்பிட்டாலும் குறைவாகவே சாப்பிடும். இல்லாவிட்டால் விளையாட்டுப் பராக்கிலே சாப்பிடாமல் பொழுதைக் கழிக்கும். இந்தக் குழந்தைகளின் ஆகாரக் குழாய்

சிறிதாக இருப்பதால் உணவு சரியாகச் செல்லுவதில்லை யென்று பெற்றோர் தப்பபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். விஷயம் வேறு. இந்தக் குழந்தைகளுக்குச் சீக்கிரமே தாய்ப்பாலை நிறுத்தாமல் இருந்திருப்பார்கள். அதுதான் காரணம்.

சிறிது சிறிதாகக் கெட்டி உணவுகளைத் தின்னக் குழந்தைக்குப் பழக்கவேண்டும்; உணவை மென்று தின்னப் பழக்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை வயது வந்தபின்னும் கடினமான உணவுப் பொருள்களைத் தின்ன மறுக்கும். சில சமயங்களில் குழந்தையின் உணவு விஷயத்தில் பெரியவர்கள் அதிகச் சிரத்தை காட்டுவார்கள். சாப்பிடும்படி புத்திமதி சொல்லுவது, பயப்படுத்துவது, தண்டிப்பது எல்லாம் ஒரு நாடகபாணியில் நடக்கும். இதனால் குழந்தை கொஞ்சும்; அழும்; சண்டித்தனம் செய்யும். இது போன்ற சந்தர்ப்பங்களில் குழந்தை உணவை ஏற்காதிருப்பது பெற்றோரால் ஏற்பட்ட தவறுதான். சரியான காலத்தில் தாய்ப்பாலை நிறுத்திக் கலப்பு உணவுகளைக் கொடுக்க முற்பட்டால் இந்த நிலைமை ஏற்படாது.

குழந்தையின் ஐந்து அல்லது ஆறும் மாதத்தில், சுமார் 12 ராத்தல் நிறை இருக்கும்போது தாய்ப்பாலை நிறுத்தவேண்டும். இந்தக் காரியம் வெகு நிதானமாக நடக்க வேண்டும். ஒரே சமயத்தில் பல புதிய உணவுகளைத் திணிக்கக் கூடாது. பாலை நிறுத்திப் புதிய கலப்பு உணவைப் பழக்க மூன்று மாத காலம் பிடிக்கும்.

வெயில் காலத்தில் குழந்தைகளின் வயிறு, குடல் முதலியவை சீக்கிரத்திலேயே நோய்க்கு இலக்காகின்றன. ஆகையால், இந்தச் சமயத்தில் தாய்ப் பாலை நிறுத்திப் புதிய உணவைத் தொடங்கக் கூடாது; இதற்கு முன்னாலேயே தொடங்கவேண்டும். மேல் நாட்டில் தாய்ப்பால் நீடித்துப் போதுமான அளவு இருந்தாலும் முதலிலிருந்தே குழந்தைகளுக்கு 'விட்டமின்' ஆகாரங்களும் பிறகு உப்புச் சத்து உள்ள உணவுகளும் கொடுக்கிறார்கள்.

குழந்தைகளில் ஒவ்வொன்று ஒவ்வோர் உணவை விரும்பும். அது விரும்பும் உணவே அதற்கு ஏற்றதாகும். அநுபவமூலமாய் உணவை வகுக்கும்போது சுருக்கமாகவும் சுலபமாகவும் கொடுக்கக் கூடிய உணவாய்ப் பார்த்துத் தர வேண்டும். முக்கியமான விஷயம் ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். குழந்தை நோயுற்ற சந்தர்ப்பங்களில் தாய்ப் பாலை நிறுத்தி மாற்று உணவு கொடுக்கக் கூடாது.

ஆரோக்கியமான நிலையில் ஒரு குழந்தை தாய்ப்பாலை மட்டும் ஒரு நாளைக்கு ஐந்துமுறை - காலை 6 மணி, 10 மணி, பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி இந்த வேளைகளில் குடிப்பதாக வைத்துக்கொண்டு பின்வரும் உணவு முறையைக் கொடுத்திருக்கிறோம்:

நன்றாய்ப் பழுத்த பழ ரசம், கிச்சிலி, சாத்துக்குடி, சீமைத் தக்காளி, வாழை, பப்பாளி முதலிய வற்றில் எதையாவது மிதமாகக் கொடுக்கலாம். இந்தமாதிரி ஒரு பழத்தைச் சிறு சிறு துண்டாக்கிச் சிறிது சர்க்கரை சேர்த்து, காலை பத்து மணி உணவுக்கு முன்பு கொடுக்கவேண்டும். முதலில் பழ ரசத்தை ½ டீஸ்பூனே ஒரு டீஸ்பூனே கொடுக்கத் தொடங்கி மெது

வாக ஏற்றிக்கொண்டே வந்து எட்டு முதல் பன்னிரண்டு டீஸ்பூன் வரையில் கொடுக்கலாம். பழரசத்தைக் கொடுத்த பின் குழந்தையை உட்கார வைத்து முதுகைத் தடவி ஏப்பம் விடச் செய்யவேண்டும். இதனால், பழரசத்தோடு உள்ளே சென்ற காற்று வெளியே வந்து விடும். உடனே தாய்ப் பாலைக் கொடுக்க வேண்டும். பழரசத்தை அதிகரிக்க அதிகரிக்கப் பாலைக் குறைத்து வரவேண்டும். ஆரோக்கிய நிலையில் உள்ள குழந்தை சிறிய அளவு பழரசத்தை ஜீரணித்துக் கொள்ளும். ஜீரணமானால் அளவை அதிகப் படுத்தவேண்டும்.

குழந்தைக்கு ஆறு மாதம் ஆனபின் கறிகாய்களை வேக வைத்த ரசத்தைப் பகல் இரண்டு மணிக்குக் கொடுக்கவேண்டும். ஒரு சிவப்பு முள்ளங்கி, அரை உருளைக் கிழங்கு, அரை வாழைக்காய், ஒரு வெங்காயம் அல்லது வேறு காய் இவற்றை எல்லாம் நன்றாகக் கழுவிச் சிறிய துண்டுகளாக்கி மட்டமாகத் தண்ணீரை ஊற்றிச் சிறு நெருப்பில் கொதிக்க விட வேண்டும். பாத்திரத்தின் வாயை மூடி நன்றாக வேக வைக்க வேண்டும். பிறகு காய்களை நன்றாகப் பிழிந்து எடுத்த ரசத்தில் ஒரு சிட்டிகை உப்பையும் இரண்டு அவுன்ஸ் பசும்பாலையும் கலந்து கொடுக்க வேண்டும். இதோடு ஒரு டீஸ்பூன் ஆரோரூட் மாவு அல்லது ராகி மாவைக் கலந்து கொதிக்க வைக்கலாம். ஜீரணம் ஆவதைக் கவனித்துக்கொண்டு அதிகமாகக் கொடுக்கலாம். குழந்தைக்குத் தித்திப்பு வேண்டியிருந்தால் உப்புக்குப் பதில் சர்க்கரை சேர்த்துக்கொள்ளலாம். குழந்தை வளர வளரத் தாய்ப் பாலை நிறுத்தி இந்தக் கஞ்சியையே கொடுக்கலாம். பின்பு கஞ்சியோடு காய்கறித் துண்டுகளையும் சிறிது சேர்த்துக் கொடுக்கலாம். பல் முளைத்த பிறகு பகல் இரண்டு மணிக்கு, மேல் சொன்ன உணவோடு கொஞ்சம் சாதமும் கொடுக்கலாம். நம் நாட்டில் சுலபமாகக் கிடைக்கும் தானியம் அரிசி. அரிசியைக் களைந்து வெயிலில் உலர்த்தி மாவாகச் செய்து வைத்துக்கொண்டு 10 அவுன்ஸ் தண்ணீரில் ஒரு ஸ்பூன் மாவைக் கலந்து கஞ்சியாகக் காய்ச்சவேண்டும். முதலில் இப்படி ஓர் அவுன்ஸ் மட்டுமே கொடுத்துப் பழக்க வேண்டும். இது ஒத்துக்கொண்டால் இரண்டு டீஸ்பூன் கொடுக்கலாம். கஞ்சியைக் கொடுத்த பிறகும் குழந்தைக்குப் போதாவிட்டால் தாய்ப் பாலைக் கொடுக்கலாம். அப்புறம் மாலை 6 மணிக்குத் தாய்ப்பாலுடன் கஞ்சியையும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்.

தாய்ப்பால் இல்லாவிட்டால் பசும் பாலையும் கஞ்சியையும் சேர்த்துக் கொடுக்கலாம். முதலிலேயே தாய்ப்பால் இல்லாத குழந்தைக்குப் பசும்பாலைக் கொடுக்கலாம். நல்ல முறையில் பத்திரம் செய்த டப்பிப் (பொடிப்) பால்களை உபயோகிப்பதும் தகுந்த முறையே ஆகும்.

இந்த உணவு முறை சாதாரணமாக எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

விலைகள் அதிவேகமாய் ஏறுவதைப் பார்த்தால், சேமித்த ஒரு ரூபாயில் கால் ரூபாய் நஷ்டம் என்பது நிச்சயம்.

—ஆங்கிலத்திலிருந்து.

வழி வழி வந்த வசனநடை: 21

சீவகாருணியம்

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள். மனத்தை உருக்கும் திருவருட்பாவைப் பாடினவர். அவருடைய வசன நூல்களில் ஒன்றான 'சீவகாருணிய ஒழுக்கம்' என்பதிலிருந்து எடுத்த பகுதி இது.

இராமலிங்க சுவாமிகள் (சீவகாருணிய ஒழுக்கம்): அருள் என்பது கடவுள் தயை, கடவுள் இயற்கை விளக்கம். சீவகாருணியம் என்பது சீவர்கள் தயை, சீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். தயையைக் கொண்டு தயையைப் பெறுதலும் விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலும் கூடும். வேறு ஒன்றினால் பெறக் கூடாமை அனுபவமாதலின், சீவகாருணியத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும். வேறு ஒன்றினாலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென்று அறிய வேண்டும். அருளைப் பெறுவதற்குச் சீவகாருணியமே வழியாதலால், ஞான வழி என்பதும் சன்மார்க்கம் என்பதும் சீவகாருணிய ஒழுக்கம் என்றும், அஞ்ஞான வழி என்பதும் துன்மார்க்கம் என்பதும் சீவகாருணிய ஒழுக்கம் இல்லாமை என்றும் அறியப்படும். சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகார சக்தி விளங்கும்; அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும். சீவகாருணியம் மறையும் போது அறிவும் அன்பும் உடனாக மறையும்; அதனால் உபகார சக்தி மறையும்; அது மறைய எல்லாத் தீமைகளும் தோன்றும்.

ஆகலின், புண்ணியம் என்பது சீவகாருணியம் ஒன்றே என்றும், பாவம் என்பது சீவகாருணியம் இல்லாமை ஒன்றே என்றும் அறியப்படும். சீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும், சீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும், அவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தி அடைந்த சாத்தியர்களே

சீவன்முத்தரென்றும், அவர்களே கடவுளை அறிவால் அறிந்து, கடவுள்மயம் ஆவார்கள் என்றும் சத்தியமாக அறியவேண்டும்.

ஆனால் சீவகாருணிய ஒழுக்கம் என்பது என்னவெனில், சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும். சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகும் என்னில்:-சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அநுபவிக்கக் கண்டபோதாயினும், கேட்டபோதாயினும், இவ்வாறு உண்டாகும் என்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகும் என்று அறியவேண்டும். சீவகாருணியம் உண்டாவதற்கு உரிமை எதுவென்னில்:-சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை யுண்மை ஏகதேசங்களாய்ச் சருவ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஓர் உரிமையுள்ள சகோதரர்களே ஆவர். சகோதரர்களுள் ஒருவர் ஓர் ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவார் என்று அறிந்தபோதும் மற்றொரு சீவனுக்கு உருக்கம் உண்டாவது **பழைய ஆன்ம உரிமை** என்று அறியவேண்டும்.

சீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோதும் சிலர் சீவகாருணியம் இல்லாமல் கடின சித்தர்களாய் இருக்கின்றார்கள். இவர்களுக்குச் சகோதர உரிமை இல்லாமற் போவானேன் என்னில்:- துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும் துக்கப்படுகிறாரென்றும் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கிற கண்ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளி மழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதம் இல்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால், சகோதர உரிமை இருந்தும் சீவகாருணிய முண்டாகாமலிருந்ததென அறிய வேண்டும்.

எத்தனையோ விசித்திரங்கள் உலகத்தில் உண்டு. ஆனால் இந்த விசித்திரம் நிபுணர்களையே கிறுகிறுக்கச் செய்துவிட்டது!

முயல்குட்டி பெற்ற பெண்

★

1726-ஆம் வருஷக் கடைசியில் ஒரு பெண் மகா ஆச்சரியமான மோசடி செய்து எல்லாரையும் ஏமாற்றிவிட்டாள். இங்கிலாந்தில் ஸர்ரி என்னும் ஜில்லாவைச் சேர்ந்த கொடால்மிங் என்ற இடத்தில் மூட்டை சுமந்து விற்ற ஏழை ஜவுளி வியாபாரி ஒருவருக்கு இவள் மனைவி. இவள் பெயர் மேரி டாஃப்ட்ஸ்.

'இவளுடைய உடம்பு ஆரோக்கியமும் வலிமையும் வாய்ந்தது; சின்ன ஆகிருதி; ரங்குள்ள மேனி. இவள் மகா அசடு. சிடு சிடு என்றிருப்பாள். எழுதப் படிக்கத் தெரியாது' என்று வர்ணித்திருக்கிறார்கள். இவள் எவ்வளவு அசடாயிருந்தால் என்ன? பல நாள் வரைக்கும் வெகு சாமர்த்தியமாகத் தன் மோசடியை எல்லாரும் நம்பும்படி ஏமாற்றிவிட்டாள்!

தான் முயல் குட்டிகளைப் பிரசவித்துக்கொண்டிருப்பதாக இவள் பாசாங்கு செய்தாள். "நான் ஒரு நிலத்தில் களை பறித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு முயல் குட்டி என் பக்கத்திலே துள்ளிக் குதித்தது. நான் ஓட்டம் பிடித்தேன். என் அண்டையிலே வேலை செய்துகொண்டிருந்த இன்னொரு பெண்ணும் என்னோடு ஓடி வந்தாள். அப்போது நான் ஐந்து வார கர்ப்பிணி. முயல்குட்டி தின்ன வேண்டும் என்று அன்று முதல் மூன்று மாத காலம் வரைக்கும் எனக்குப் பெருத்த ஆசையாக இருந்தது. நானோ பரம ஏழை. முயல் குட்டி வாங்க முடியவில்லை. என் மசக்கை நிறைவேறாததால், முயல் குட்டிகளே எனக்குப் பிறக்கத் தொடங்கிவிட்டன" என்று இவள் சொன்னாள்.

****

இந்தக் கட்டுரையை லண்டன் 'லிலிபுட்' பத்திரிகை ஒரு பழைய ஆங்கிலப் புஸ்தகத்திலிருந்து எடுத்து வெளியிட்டிருக்கிறது.

****

தனக்குப் பிரசவம் பார்க்க வந்த வைத்தியரையே இவள் ஏமாற்றிவிட்டாள். ஹொவார்டு என்பது அந்த வைத்தியரின் பெயர். நாணயம் பிசகாதவர். முப்பது வருஷமாக வைத்தியம் பார்ப்பவர். அவர் இவளுக்கு ஒரு மாச காலம் பிரசவம் பார்த்தார். அந்த ஒரு மாசத்துக்குள் இவள் முப்பது முயல் குட்டிகளைப் பெற்றெடுக்க அவர் உதவி புரிந்துவிட்டார்! இவளிடம் அவருக்குப் பரிபூர்ண நம்பிக்கை.

இந்த அதிசயப் பிரசவம்பற்றிய செய்தி நாடெங்கும் பரவியது. எத்தனையோ பேர் இதை நம்பினார்கள். முதலாம் ஜார்ஜ் மன்னர் காதுக்கும் இது எட்டியது. உடனே அவர் தம் அரண்மனை ஸர்ஜன் ஆஹ்லர்ஸ் என்பவரை அனுப்பி,

இதை விசாரித்து வரச் சொன்னார். அரண்மனை ஸர்ஜன் அப்படியே இந்தப் பெண் இருக்கும் இடத்துக்கு வந்து விசாரித்தார். முயல் குட்டிப் பிரசவம் முற்றும் உண்மையே என்பதைப் பிரத்தியட்சருசுக்களோடு அறிந்துமுழுத்திருப்தியடைந்தார். மேரி ராணியிடம் சிபாரிசு செய்து இந்தப் பெண்ணுக்குப் பென்ஷன் வாங்கித் தருவதாக வாக்களித்துவிட்டு அவர் திரும்பினார்.

இன்னும் நன்றாய் விசாரித்து வரும்படி ஸெயிண்ட் ஆண்ட்ரி என்ற மற்றொரு ஸர்ஜனை ஒன்றிரண்டு நாளில் மன்னர் அனுப்பினார். அவர் மன்னரின் ஸர்ஜன்; உடற் கூறுகளையெல்லாம் ஆராய்ச்சி செய்த நிபுணர். அவரும் இந்த முயல்குட்டிப் பிரசவ விஷயத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை அடைந்தவராகத் திரும்பினார். இதன் பிறகு இந்தப் பெண்ணின் விசித்திரப் பிரசவத்தை அரசரே நம்பத் தொடங்கிவிட்டார். என்றாலும், ரகசியம் அம்பலமாகிவிடவேண்டிய நிலை எற்பட்டது.

இந்த அற்புதப் பெண்ணை நகரத்துக்கு அழைத்துச் சென்றார்கள். கொடால்மிங் என்ற ஊரில் இவள் எமாற்றியது போல, நகரத்தில் எமாற்ற முடியாதபடி இவளுக்குக் காவல் போட்டுவிட்டார்கள். ஸர் ரிச்சர்டு மான்னிங்ஹாம் என்ற பிரபல வைத்தியரும் வேறு சிலரும் இந்தப் பரிசோதனையில் கலந்துகொண்டார்கள். இவளுடைய தந்திரத்தை அவர் கண்டுபிடித்துவிட்டார்.

அப்போதும் இவள், "நான் முயல் குட்டிதான் போடுகிறேன்" என்று சாதித்தாள்.

"அப்படியானால் உன் வயிற்றில் அபாயமான ஆபரேஷன் ஒன்று செய்து பார்ப்போம்" என்று அவர் மிரட்டினார்.

அதோடு ஒரு மாஜிஸ்திரேட் வந்து, "உன்னைச் சிறைக்கு அனுப்பப் போகிறேன்" என்று பயமுறுத்தினார்.

இவளுடைய தைரியம் கலகலத்தது. தன் மோசடியை ஒப்புக்கொண்டாள். "எனக்கு ஒரு பெண்தான் இந்தத் தந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தாள். நான் இதைப் பின்பற்றினால், முன்போல் பாடுபடாமல் ஜீவிக்க அவள் வழி செய்வதாக வாக்களித்தாள். இதற்கு வேண்டிய முயல் குட்டிகளைத் தட்டில்லாமல் தொடர்ந்து எனக்கு ஸப்ளை செய்வதாக அவள் வாக்களித்தாள். அதற்குப் பர்த்தியாக நான் எனக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு பங்கைத் தனக்குத் தர வேண்டுமென்று கேட்டாள்" என்று இந்தப் பெண் சொன்னாள். இவளுடைய கபட நாடகம் முடிவுற்றது. இவளைச் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

தேர்தல் அறிவு

பொதுஜனங்களுக்கு நிபுணர்களைப்போல் ஞானம் இராது போகலாம்; ஆனால், இரண்டு நிபுணர்களுக்குள்ளே யார் மேலானவர் என்று தேர்ந்தெடுக்கப் போதிய ஞானம் அவர்களுக்கு உண்டு.

—ஸாமுவேல் பட்லர்.

கற்பனை உலகம்: 11

கி. பி. 2000-ஆண்டில்

பெல்லாமியின் தீர்க்க தரிசனம்

> வருங்காலச் சமதர்ம உலகத்தை ஒரு நாவலாசிரியர் கனவு காண்கிறார். அணுக்குண்டால் உலகம் அழியாதிருந்தால் அது ஒரு வேளை பலிக்கலாம். இந்தக் கற்பனை உலக வரிசைகளை விமரிசனம் செய்பவர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

19-ஆம் நூற்றாண்டில் பெல்லாமி (Bellamy), ஹெர்ட்ஸ்கா (Herdzka), வெல்ஸ் (Wells) என்ற மூன்று பெரியோர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய கற்பனைச் சித்திரங்கள் நம் உள்ளங்களைக் கவருமென்பதில் யாதோர் ஐயமுமில்லை. முதலில் பெல்லாமி கண்ட கனவின் நயத்தை ஆராய்வோம்.

இவர் அமெரிக்கா நாட்டு நாவலாசிரியர்சளில் ஒருவர். தம் 'பின் நோக்கு' என்ற நாவலில் ஒரு கற்பனை நாட்டைச் சித்திரித்திருக்கிறார். ஜூலியன் வெஸ்ட் (Julian West) என்பவர் முதலாளிகளின் உன்னத நிலையைக் கண்டு சீற்றங் கொள்கிறார்; ஏழை மக்களின் இன்னல்கள் அவர் உள்ளத்தைத் தொடுகின்றன. சமுதாயத்தை ஒரு பெரிய ரதமாக வெஸ்ட் சித்திரிக்கிறார். அதில் உட்கார்ந்து போகிறவர்கள் பணக்காரர்கள்; ஆனால் அதை இழுத்துச் செல்லுகிறவர்கள் ஏழை மக்களே. தொழிலாளிக்கும் முதலாளிக்கும் அடிக்கடி எழுகிற போராட்டங்களுக்கு முடிவு இல்லை போலத் தோன்றுகிறது. ஆனால் அதற்கும் முடிவுண்டு.

பெல்லாமி படைத்த வெஸ்ட் 1887-ஆம் ஆண்டு போஸ்டன் நகரில் ஒரு தோட்டத்திலுள்ள பாழடைந்த மனையில் ஒரு மந்திர சக்தியால் உறங்கத் தொடங்குகிறார். அவர் விழித்தெழுந்த காலம் 2000-ஆம் ஆண்டாகும். இந்தக் காலத்துக்கிடையே தோன்றிய மாறுதல்களை நோக்கி வெஸ்ட் வியப்படைகிறார். அழகு வாய்ந்த ஒரு பெரிய நகரம் வெஸ்ட் முன்பு விரிகிறது. புகை அடைந்த கோரத் தோற்றம் அளிக்கும் முதலாளி நகரத்தைக் காணவில்லை. அரசியல்வாதிகளின் பொய் பொதிந்த பேர் அரவம் ஓய்ந்து போய்விட்டது; லஞ்சம், சூது, சூழ்ச்சி முதலிய பெரும் பேய்கள் நாட்டைவிட்டு ஓடிவிட்டன. பணித இயல்பு மாறவில்லை. ஆனால் சூழ்நிலை முற்றும் மாறிவிட்டது. தொழிலாளிகள் அடிக்கடி கிளர்ந்தெழக் கூடிய சிக்கலுக்கே அங்கே இடமில்லை. எல்லாச் சொத்தும் சமுதாயத்தைச் சேர்ந்தவிட்டன. மக்களின் நன்மை அனைத்தையும் அரசாங்கமே கவனித்து வந்தது. எல்லா வேலையையும் ஏவுவது அரசாங்கமாய்ப் போகவே, அந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லாரும் வேலையாட்களாய்ப் போய்விட்டார்கள். வேலை செய்வதே மக்களின் இயற்கையாக அமைந்தவிட்டது. இயற்கைக்கு மாறாசப் போனால், தங்களுக்கே அழிவு வரும் என்று உணர்ந்த மக்கள், தாமே தம் தமக்குரிய அலுவல்களில் இறங்கினார்

கள். எல்லாரும் தொழில் செய்தே தீரவேண்டும். 24 வருஷம் உழைக்கும்படி மக்களுக்குக் கட்டளை பிறந்திருக்கிறது. 21-ஆம் வயதில் படிப்பு முடிந்து விடும். 45-ஆம் வயதில் வேலையை விட்டு அகற்றி விடுவார்கள். ஆனால் ஏதாவது நெருக்கடி நிகழுமானால், ஓய்வு பெற்றவர்களை மீண்டும் அரசாங்கம் வேலைக்கு அழைக்கும்.

"எப்படி மக்களைப் பிரிக்க முடியும்?" என்று ஒருவர் கேட்கலாம். உடல் நிலை, மனப்பண்பு இவைகளை அளவுகோலாக வைத்துக்கொண்டு மாந்தர்களைப் பிரித்து விடுகிறார்கள். குழந்தைகளின் இளமைப் பருவத்தைப் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் நோக்குகிறார்கள். எந்தத் துறைகளில் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்களோ, அந்தத் துறைகளில் அவர்களுக்கு வேண்டிய பயிற்சியைத் தருகிறார்கள். எந்தத் தொழில் மனத்துக்கு உவந்ததோ அதையே ஒருவர்மேற்கொள்ளலாம். அறிவால் செய்யக்கூடிய வேலைக்குத் தகுந்த சூழ்நிலையை அமைத்துத் தருகிறார்கள். உடல் நலனும் அறிவு முதிர்ச்சியும் இல்லாத மாந்தர்களுக்குச் சுலபமான வேலையைத் தருகிறார்கள். ஆனால் ஊதியம் எல்லாருக்கும் ஒன்றே. மனிதன் என்ற முறையில் எல்லாரும் சமமே. வேலை செய்யக்கூடியவன் வேலை செய்ய மறுத்தால், ஏதோ ஒரு தனி இடத்தில் அவனை அடைத்து விடுகிறார்கள். அவன் தன் சம்மதத்தைத் தருகிற வரையில் வெறும் ரொட்டியும் தண்ணீரும் அருந்தி அங்கே கிடக்க வேண்டும். எல்லாம் தேச சேவையாக மாறிவிட்டன. எவரும் தமக்கென்று வாழவில்லை. தாங்கள் சமுதாயத்துக்காகவே வாழப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் வேரூன்றியிருக்கிறது.

மனிதனின் உயர்வு அவன் புரியும் தொண்டைப் பொறுத்ததாகும். பெருஞ்செயல் ஆற்றியவர்களுக்குச் சிவப்புப் பரிவட்டம் ஒன்றைத் தருகிறார்கள். அதை எந்தக் காலத்திலும் அணிந்துகொள்ள முடியாது. அதைப் பெறுவதற்கு அநேக ஆடவர்கள் ஆசைப்படுகிறார்கள். தொழிலுக்கேற்றவாறு பத்துப் பாகங்களாக நாட்டை வகுக்கிறார்கள். பத்து விதமான தொழில்களுக்கும் அதிகாரிகள் உண்டு. நாட்டுக்குத் தலைவனை முன்பு வேலை பார்த்த பத்துத் தலைவர்கள்தான் தேர்ந்தெடுப்பார்கள்.

தேசங்களுக்கிடையே அமைதி நிலவும்படி தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். சர்வதேசச் சங்கமொன்று அதற்கான அலுவல்களைக் கவனித்து வந்தது. பணமென்பது ஒரு நாட்டிலும் இல்லை. சுங்கம் இல்லை. நாட்டுக்குத் தேவையான பொருள்கள் தட்டுத்தடங்கலின்றி ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மற்ற நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டார் மற்றொரு நாட்டில் போய்க் குடியேறலாம். இதனால் வரும் லாப நஷ்டங்களுக்குப் பரிகாரம் உண்டு. பணமில்லாத காரணத்தால் பாங்குகளில்லை. சமுதாயம் வகுத்துத் தந்த கடைகளிலே தேவையான சாமான்களைப் பெற முடியும். மக்களின் படிப்பு, வளர்ப்பு எல்லாமே சமுதாயத்தின் அலுவல்கள். (காளிதாசன் இதே நிலையைத் தன் ரகுவம்சத்தில் சித்திரிக்கிறான்). நிலமெல்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த காரணத்தால், தனித்த சொத்துரிமை அந்த நாட்டில் இல்லை. வீட்டுக் காரியமும் சமு

தாயத்தைச் சார்ந்ததாகிவிட்டது. சலவைத் தொழிலையுங்கூடச் சமுதாயம் எடுத்துக்கொண்டுவிட்டது. எங்கே பார்த்தாலும் சமுதாயச் சமையலறைகள்; சமுதாயம் சமைத்த உண்டிதான். எல்லா வேலையும் சமுதாயம் செய்கிற அலுவல்தான். மழைக் காலத்தில், போகிற இடமெல்லாம் தக்கவாறு மூடியிருக்கிறது. பல குடைகள் தேவையில்லை; ஒரே குடைதான். அந்த நாட்டிலே குடைக்கு அவசியமே யில்லை என்று நகைச் சுவை எழ ஆசிரியர் தம் கற்பனை நாட்டின் நிலையைச் சித்திரிக்கிறார்.

சிறைச்சாலைகள் இல்லை குற்றமின்மையால். பணமின்மையால், பணத்தாசையும் வேரோடு வெம்பிப் போயிற்று. வழக்கறிஞர் அந்த நாட்டில் இல்லை. சச்சரவு தோன்றவில்லை. எல்லாருக்கும் கல்வி அளித்தார்கள். நாட்டின் நிலையை உயர்த்துவதற்காகவே கல்வியை நாடெங்கும் பரப்புகிறார்கள்.

பெண்களும் ஆடவர்களுக்குச் சமமானவர்கள்தான். அவர்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். தங்களுக்கு உவந்த அலுவல்களில் அவர்கள் இறங்கலாம். பெண்கள் கணவர் கையை எதிர் பார்க்க வேண்டியதில்லை; மக்களும் பெற்றோர்களை நாட வேண்டியதில்லை. பணத்துக்காக மணமன்று; எல்லாம் காதல் மணந்தான். அறிவு, ஆற்றல், அழகு - இவைதான் தக்க இடம் பெறுகின்றன. இவைகள்தான் நாட்டின் செல்வங்கள். டெலிபோன் மூலம் சங்கீதத்தை நுகர்கிறார்கள். பாதிரிமார்கள் அதன் மூலமாய்த் தங்கள் சொற்பொழிவுகளைப் பரப்புகிறார்கள். விஞ்ஞானம், கலைப் பண்பு, அறிவு வளர்ச்சி, சங்கீதப் பயிற்சி இவைகளிலெல்லாம் - சுருங்கக் கூறுமிடத்து, எல்லாத் துறைகளிலுமே- மனிதன் உயர்ந்துகொண்டே போகிறான். உடல்நலத்தைப் பேணுகிறார்கள். அக வனப்பும், புற அழகும் ஒன்றாய்க் கரைந்து போயின. எங்கும் அமைதி நிலவுகிறது. இந்த அமைதியில்தான் உயர்ந்த நாகரிகம் தழைத்தோங்கும் என்பதில் ஐயம் உண்டோ? இந்தக் கனவு உருவாக எத்தனை நூற்றாண்டுகள் தேய வேண்டுமோ, அறியோம்; ஆனால் இந்தக் கனவின் பேரொளி சேணில் நின்று நம்மை 'வா' என்று அழைக்காமல் போகுமோ ?

பெண்ணை அறிந்தவர்

மணமானவர்களைவிடப் பிரம்மசாரிகள் பெண்களைப்பற்றி அதிகமாய் அறிந்தவர்கள். இல்லாவிட்டால்தான் அவர்களும் பெண்களை மணந்துகொண்டிருப்பார்களே.

—எச். எல். மென்கென்

வாழ்க்கை நோக்கங்கள்

வாழ்க்கையிலே இரண்டு நோக்கங்கள் வேண்டும்; முதலாவது, விரும்பியதைப் பெறுவது; இரண்டாவது, பெற்றதை அநுபவிப்பது. மகாபுத்திமான்கள்தான் இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வார்கள்.

—லோகன் பீர்ஸால் ஸ்மித்

கள்ளமார்க்கெட் மோசடியைவிட 'வெள்ளை மார்க்கெட்' மோசடி பல சமயம் இன்னும் மோசமாயிருக்கிறது!

பஞ்சு படும் பாடு

அப்ஸர்வர்

தென்னிந்தியாவில் பருத்தி மார்க்கெட்டின் நிலை இன்று ஒரே குழப்பமாக இருக்கிறது. இந்திய சர்க்கார் இதற்காகக் கண்ட்ரோல் முறையை அமலுக்குக் கொண்டுவந்து நிலைமையைச் சீர்திருத்த முயலும்போதெல்லாம் அதை எந்த எந்த விதத்தில் மீறமுடியும் என்றுதான் இந்த வியாபாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பார்க்கிறார்கள். இந்திய சர்க்காரின் வர்த்தக மந்திரியான மகதாபும் மற்ற மந்திரிகளும் சேர்ந்தே இந்தக் கண்ட்ரோலைக் கொண்டு வந்தார்கள்; அவர்களே இப்போது என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து நிற்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

ஜப்பான் பத்து ஆண்டுகளுக்கு முன் போரில் இறங்கியதும் இந்தியப் பருத்தி மார்க்கெட்டில் விலைவாசி விர்ரென்று ஏறிவிட்டது. இதுதான் சமயமென்று அநேகம் பேர் இந்த பேரத்தில் ஈடுபட்டு ஏராளமாகப் பணங் குவித்துவிட்டார்கள். இந்திய சர்க்கார் 1943-இல் இதற்குக் கண்ட்ரோலை விதித்தது. அதிவிருந்து ஐந்து ஆண்டுகள் வரை இந்தக் கண்ட்ரோல் நீடித்தது. பிறகு இதை எடுத்துவிடவேண்டும் என்று கிளர்ச்சி ஏற்பட்டது. சர்க்காரும் கண்ட்ரோலை நீக்கிவிட்டார்கள். உடனே பழைய ஆசாமிகள் மறுபடியும் இந்த பேரத்தில் ஈடுபட்டுப் பருத்தி மார்க்கெட் நிலையையே சீர்குலைத்துவிட்டார்கள். அதனால் செப்டம்பர் 1948-இல் மீண்டும் கண்ட்ரோலை விதிக்கவேண்டியதாயிற்று.

19-ஆம் நூற்றாண்டின் பாதியில் இங்கே பஞ்சாலைத் தொழில் தொடங்கியது. அதனால் மக்களுக்குத் துணிப்பஞ்சமே இராதபடி சுபிட்சம் ஏற்பட்டது. 3 லட்சம் கதிர்களுடன் தொடங்கிய இந்தத் தொழில் இப்போது எவ்வளவு அபிவிருத்தி அடைந்துவிட்டது தெரியுமா? ஒரு கோடி கதிர்கள் இன்று நம் ஆலைகளிலே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தத் தொழிலுக்குப் போதுமான அளவு பருத்தி இங்கே கிடைத்தும் வந்தது. இந்தியப் பிரிவினைக்கு முன் இந்தியாவில் 45 லட்சம் பேல் பருத்தி விளைந்தது. சுமார் 600 ராத்தல் கொண்டது ஒரு பேல். நம் ஆலைகளே அவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு ஒரு பகுதியை ஜப்பானுக்கும் ஏற்றுமதி செய்து வந்தன. பிரிவினை ஆன கையோடு பருத்தி உற்பத்தியில் 30 லட்சம் பேல் குறைந்துவிட்டது. செப்டம்பர் 1949-இல் ரூபாயின் மதிப்பைக் குறைத்ததும் பாகிஸ்தானி

காப்பிரைட்: ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 14-10-'51), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

விருந்து பருத்தி இறக்குமதி செய்வது பின்னும் சங்கடமாகி விட்டது.

1948 செப்டம்பரில் கண்ட்ரோலை மறுபடி விதித்ததும் புதுப் புதுச் சிக்கல்கள் தோன்றலாயின. இவ்வளவு விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருந்தும் வியாபாரிகள் கொழுத்த லாபம் பெறவேண்டும் என்ற பேராசையில் இந்த உத்தரவை மீறிவந்தார்கள். கொட்டை எடுக்காத பருத்தி, கொட்டை எடுத்த பருத்தி என்று இரண்டு உண்டு. கொட்டை எடுத்த பருத்தி தான் பஞ்சு. இதற்கு மட்டுமே கண்ட்ரோல் விதித்திருந்தார்கள். இப்படி ஒன்றை மட்டும் விட்டு விட்டு அதோடு சம்பந்தப்பட்ட மற்றொன்றுக்குத் தடை விதிப்பது சரியா என்று எல்லாருக்கும் தோன்றுவது சகஜந்தானே! சர்க்கார், 'கொட்டையோடு கூடிய பருத்திக்கு அதிக விலை கொடுக்காதீர்கள்' என்று வியாபாரிகளுக்கு எச்சரிக்கை செய்திருந்தும் அதைக் கவனிப்பார் இல்லை.

ஏதாவது ஒரு சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் எந்த எந்த வழியில் போனால் சட்ட விதிகளிலிருந்து தப்ப முடியும் என்று சில ஆசாமிகள் பார்க்கிறார்கள். பருத்தி வியாபாரிகள் யார்? பருத்தி உற்பத்தி செய்பவருக்கும் அதை வாங்குவோருக்கும் நடுவில் இருந்து கொண்டு பேரமாடுகிறவர்கள் தான். அவர்கள் என்ன செய்கிறார்கள்? அதிக விலை கொடுத்தால் தான் தம் கையிலுள்ள பொருளை விற்கிறார்கள்; இதைத் தவிரப் போதுமான பருத்தியும் இங்கே கிடைப்பதில்லை. இரண்டும் சேரவே நிலைமை மோசமாகிவிட்டது.

அதிக லாபம் அடிக்க இந்த வியாபாரிகள் ஒரு புதிய வழி கண்டு பிடித்தார்கள். நேர்மையான விலைக்குப் பருத்தியை விற்பதாக உலகத்துக்குக் காட்டிக் கொள்ள வேண்டாமா? அதற்காகப் 'பில்' போடும்போது சில தந்திரங்களைக் கையாண்டார்கள். கொட்டை எடுக்காத பருத்திக்குப் பெயருக்கு ஒரு விலை நிர்ணயம் செய்துவிட்டுப் பஞ்சு ஆலைக்காரர் கேட்டுக்கொண்டபடி அதைக் கொட்டை நீக்கிக் கொடுப்பதாகக் காட்டி அதற்கென்று தனிக் கட்டணம் வசூலித்து வந்தார்கள். உண்மையைச் சொல்லப் போனால் வியாபாரிகள் ஒன்றுமே செய்யவில்லை. சும்மா கண் துடைப்புக்குத் தான் இப்படிப் போட்டு வைத்தார்கள். கொட்டை நீக்கியதற்கென்று போட்ட தொகை வேறொன்றுமில்லை; கள்ள மார்க்கெட்டில் கிடைத்த கொள்ளை லாபந் தான். இப்படி 'பில்'லில் 'கொட்டை நீக்கியது' முதலிய காரியங்களுக்காகப் போட்ட தொகைக்கு விற்பனை வரி விதிக்கச் சட்டத்தில் எந்த விதமான உபவிதிகளும் இராததால் அது வேறு லாபம். இந்த யுக்தியினால் சர்க்காருக்கு லட்சக் கணக்கில் விற்பனை வரி வருமானம் நஷ்டமாயிற்று.

1950 பிப்ரவரியில் இந்திய சர்க்கார் பருத்தி விலையைத் தங்களால் முடிந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப் பார்த்தார்கள். ஆலை முதலாளிகளுக்கும் சொல்லிப் பார்த்தார்கள். பிறகு விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைக்கப் பரஸ்பரம் விட்டுக் கொடுத்துக் கௌரவமான முறையில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதன்படி விலைவாசி இவ்வளவுதான் என்று நிர்ணயம் செய்

தார்கள். ஆலை முதலாளிகள் தாங்கள் வாங்கும் பருத்திக்கு அவ்வளவு தொகை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. பிறகு பருத்தி சப்ளை குறையவே, நூலுக்குத் திண்டாட்டமாகிவிடப் போகிறதே என்று ஆலை முதலாளிகள் அதைக் கள்ள மார்க்கெட்டில் வாங்கிச் சேமிக்கத் தொடங்கினார்கள். தெற்கே ஆலை நடத்தும் அந்நிய நாட்டுப் பிரமுகர் ஒருவர், “இதைக் கௌரவமான ஒப்பந்தம் என்பதைவிடச் சோதாக்களின் ஒப்பந்தம் என்று சொன்னால் தகும்” என்று அப்போது பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டார். இப்படி 1950 ஜூலையிலேயே அந்த ஒப்பந்தம் சீந்துவாரற்றுப் போய்விட்டது.

இந்தக் குழப்பமெல்லாம் ஏற்பட்டபின் இந்திய சர்க்கார் கண்ட்ரோல் முறை எப்படியாவது சரிவர நடப்பதற்குத் தம்மால் ஆன முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். 1950 அக்டோபரில் இதற்கென்று மத்தியப் பருத்தி ஆலோசனை போர்டு என்று ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார்கள். அதில் பருத்தித் தொழில் சம்பந்தப்பட்ட பலர் கௌரவ அங்கத்தினர்களாக இருந்தார்கள். இவர்கள் ஜவுளி கண்ட்ரோலருக்கு அவ்வப்போது ஆலோசனை கூறி வர வேண்டும். பின்னால் இந்த போர்டாரின் ஆதரவில் அங்கங்கே பிரதேசக் கமிட்டிகளை ஏற்படுத்தினார்கள். அவைகளில் இந்தத் துறையில் அநுபவமுள்ள பலரை நியமித்தார்கள். தென்னிந்தியாவில் இந்தக் கமிட்டிகள் பிப்ரவரி மாதத்தில் வேலை செய்யத் தொடங்கின. அப்போது இருந்த நிலைமை இதுதான்: கள்ள மார்க்கெட்டில் பருத்தி வாங்க மறுத்த ஆலைகளுக்கெல்லாம் பருத்தியே கிடைக்காமல் போய்விட்டது!

பிறகு இந்திய சர்க்கார் ‘நாமினி முறை’ என்ற இன்னொரு திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். தெற்கே பருத்தித் தொழிலில் ஈடுபட்ட சில பிரமுகர்களை அழைத்து, பருத்தியை வாங்கி ஆலைகளுக்கு விற்க அவர்களுக்கு உரிமை அளித்தார்கள். இதற்காக ஏதோ கொஞ்சம் கமிஷனும் கொடுத்து வந்தார்கள். ‘நாமினி முறை’யை அமலுக்குக் கொண்டு வரத் தென்னிந்தியாவை மூன்று பகுதிகளாகப் பிரித்தார்கள். ஏ-பகுதியில் ராயலசீமை ஜில்லாக்களும், பி-1 பகுதியில் கோயில்பட்டி, ராஜபாளையம் ஜில்லாக்களும், பி-2 பகுதியில் கோயம்புத்தூரும் அடங்கியிருந்தன. ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனி ரகம் பருத்தி பயிரிட்டு வந்தார்கள். கோயம்புத்தூரில் கருங்கண்ணி வகையும், ராஜபாளையத்தில் ஆப்பிரிகாவிலிருந்து வந்த உகாண்டா என்ற உயர்ந்த வகையும் பயிராகின்றன.

நாமினி முறை அமலுக்கு வந்தவுடன் பருத்தி வியாபாரிகளும் சரி, ஆலை முதலாளிகளும் சரி நாமினிகளின் மூலமாகவே விற்கவும் வாங்கவும் வேண்டியிருந்தது. பம்பாய் ராஜ்யத்தில் பருத்தி விளையும் ஜில்லாவான புரோச்சில் இந்த முறை சரிவர நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஆலைகள் சிரமமில்லாமல் நியாயமான விலைக்குப் பருத்தி வாங்க முடிந்தது. அதேமாதிரி பருத்தி வியாபாரிகளும் நாமினிகளிடமிருந்து சுலபமாகவே பணம் பெற்று வந்தார்கள்; முன்னெல்லாம் தெற்கே பழைய பாக்கிக்காக

வியாபாரிகள் நடையாய் நடப்பார்கள். பருத்தி உற்பத்தி செய்பவர்கள், அதை வாங்கி உபயோகிப்பவர் இந்த இரண்டு சாராருக்கும் இப்போது சௌகரியந்தான். இருந்தாலும் கட்டுப்பாடு, ஒழுங்கு எல்லாம் சில பேர்வழிகளுக்கு வேப்பங்காயாக இருக்கிறது! 'நேர்மையாகவோ அநியாயமாகவோ எப்படியாவது தாங்கள் வியாபாரம் செய்ய முடியவில்லையே; பல தடவை நடையாக நடந்தாலும் பரவாயில்லை. கள்ள மார்க்கெட் அளவு தொகை கிடைக்கவில்லையே' என்று இவர்களுக்கு ஆத்திரம். நாமினி முறையை நீக்கிவிட வேண்டும் என்று இவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். இந்தக் கிளர்ச்சியை முன் நின்று நடத்தினவர் ராயலசீமையைச் சேர்ந்த தர்மா ரெட்டி என்பவர்தான். இவர் பெல்லாரி பருத்தி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர். மத்தியப் பருத்தி ஆலோசனை போர்டில் வேறே அங்கத்தினராக இருந்தார். இவர் ஊர் ஊராகப் போய் "நாமினி முறை ஒழியவேண்டும்; இப்படி விற்றால் உற்பத்தியாளர்களுக்கு எப்படிக் கட்டுப்படியாகும்?" என்று தாம் சொல்வது நியாயம் என்று நாலு பேருக்குத் தோன்றும்படி பிரமாதமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அதே சமயம் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த சில பருத்தி வியாபாரிகள் 'நாமினி முறை' சம்பந்தமாக ஜவுளி கண்ட்ரோலர் போட்ட உத்தரவை எதிர்த்துச் சென்னை ஹைகோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள். சென்னை ஹைகோர்ட்டும் ஆகஸ்ட் 31-ஆம் தேதி அந்த உத்தரவு செல்லாது என்று தீர்மானித்துவிட்டது. நாமினி முறையே சென்ற ஜூனில்தான் அமலுக்கு வந்தது. ஆனால் கோர்ட்டின் தீர்ப்புக் காரணமாகத் தென்னிந்தியாவில் செப்டம்பர் 1-ஆந் தேதி முதல் அது ரத்தாகிவிட்டது. இருந்தாலும் சுப்ரீம் கோர்ட்டில், இந்த விஷயம் மறுபடியும் அடிபடும் என்று தெரிகிறது.

இது சம்பந்தமாக இந்திய சர்க்காரின் வர்த்தக மந்திரி மகதாபைப் பலர், "இனி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று சரமாரியாய்க் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். தெளிவான ஒரு முடிவுக்கும் வர இயலாமல் இந்திய சர்க்கார் திக்கு முக்காடி வருகிறது. இந்த நிலையிலே, "பம்பாய் ஜவுளி கண்ட்ரோலருக்கு இப்படி அதிகாரம் கொடுத்திருப்பது சரியில்லை" என்று பருத்தித் தொழிலில் ஈடுபட்டவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார்கள். 'பிரதேசவாரியாக இதைக் கவனித்துப் பருத்தி கண்ட்ரோல் முறையைச் சீர்படுத்த வேண்டும்' என்பது வேறு சிலருடைய அபிப்பிராயம்.

அபாயமான முயற்சி

"யாரப்பா நீ? இது வெடி மருந்து தொழிற்சாலையாயிற்றே. பல மணி நேரமாய் நீ என் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறாய்?"

"ஒன்றுமில்லீங்க. சிகரெட் குடிப்பதை நிறுத்த முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேனுங்க."

—'பெர்லின்ங்கே டிடென்டே'

ராமனின் தாபம்

சீதையை ராவணன் எடுத்துச் சென்றதை அறியாமல் ராமன் சீதையைக் காண ஆவலுடன் ஆசிரமம் திரும்பினான். வரும் வழியில் பல கெட்ட சகுனங்கள் ஏற்பட்டன. சீதைக்கு ஒரு கெடுதலும் வராமல் இருக்க வேண்டுமே என்று கவலையுடன் வரும்பொழுது, ராபன் வழியில் லட்சுமணனைக் கண்டான். சீதையைத் தனிமையில் விட்டு விட்டு வந்ததற்காக அவனைப் பலவாறு கடிந்துகொண்டான். கவலையோடு ஆசிரமத்துக்கு ஓடி வந்து பார்த்தபொழுது சீதையைக் காணவில்லை. பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டான். பல இடங்களில் பலவாறு தேடிப் பார்த்தான். பலவாறு புலம்பினான். பிறகு கோபமுற்று உலகையே அழித்து விடுவேன் என்று கிளம்பினான். லட்சுமணன் ஒருவாறு அவனைச் சமாதானம் செய்தான்.

பிறகு இருவரும் ஜனஸ்தானத்தைச் சுற்றி வந்து சீதையைத் தேடிப் பார்த்தார்கள். அங்கே மலை போல் விழுந்து கிடக்கும் ஜடாயுவைக் கண்டார்கள். ராவணன் சீதையை எடுத்துச் சென்றதையும், தான் அவனோடு போரிட்டதையும், தனக்கு அதனால் ஏற்பட்ட நிலையையும் சொல்லி ஜடாயு உயிர் துறந்தது. ராமன் தந்தையைப்போல் அதைக் கருதி அதற்கு ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தான்.

பிறகு சீதையைத் தேடிக்கொண்டு மேற்குத் திசையை நோக்கி வந்துகொண்டிருந்த ராமனும் லட்சுமணனும் கபந்தன் என்ற அரக்கனின் கையில் சிக்குண்டு வேறு வழியின்றி அவன் கைகளை

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.



வெட்டினார்கள். உடனே கபந்தன் தன் வரலாற்றையும் சாபத்தையும் அவர்களிடம் சொல்லித் தன் சரீரத்தை எரிக்கும்படி வேண்டிக் கொண்டான். அவர்கள் அப்படியே செய்தார்கள். அப்போது அவன் சுயரூபத்தை எடுத்துக்கொண்டு சுக்கிரீவனின் வரலாற்றைச் சொன்னான். பிறகு, "அவன் உங்களுக்கு உதவி புரிவான்" என்று சொல்லிச் சுக்கிரீவன் வாழும் ரிச்யமூக பர்வதத்துக்குப் போகும் வழியையும் காட்டினான்; பிறகு தன் இருப்பிடம் சென்றான்.

ராமன் லட்சுமணனோடு ரிச்யமூகத்துக்குப் போகும் வழியில் சபரியைக் கண்டு அவள் செய்த உபசாரத்தைப் பெற்றுக்கொண்டு அவளைச் சொர்க்கத்துக்கு அனுப்பினான். பிறகு இருவரும் ரிச்யமூக மலையின் அருகில் இருக்கும் பம்பை என்னும் ஏரியின் கரையை அடைந்தார்கள். ராமன் தாமரை, சௌகந்திகம் முதலிய மலர்கள் அடர்ந்த அந்தப் பம்பையைப் பார்த்துச் சொல்லலானான்: "லட்சுமணா, இதன் கரையில்தான் அழகிய ரிச்யமூகம் இருக்கிறது. இதன் உச்சியில் வானர அரசன் சுக்கிரீவன் வசிக்கிறான். நீ அவனிடம் போய் நான் வந்திருப்பதாகச் சொல்லு" என்றான். பிறகு, "ராஜ்யத்தை இழந்தேன்; இனிச் சீதை இல்லாமல் எவ்விதம் வாழ்வேன்?" என்று புலம்பினான்.

"வைடூரியம்போல் தெளிந்த ஏரி ஜலத்தைப் பார். அதில் தாமரைகளும் ஆம்பல்களும் நிறைந்திருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது. சீதையைப் பறி கொடுத்துக் கவலையுற்றிருக்கும் எனக்குக்கூட இந்தப் பம்பை இன்பமூட்டுகிறது?

"லட்சுமணா, இந்த வசந்தம் பல புள்ளினங்களின் குரல்களால் என்னை அழைப்பதுபோல் இருக்கிறது. இதோ மலையருவியில் தாத்யூகம் என்ற பறவையைக் காணும்போது என் வருத்தம் அதிகமாகிறது. என் அன்பான சீதை ஒரு சமயம் என்னை அழைத்து அது கூவுவதைக் காட்டினாள். அசோகின் சிவந்த பூங்கொத்தாகிய தணலும் தளிர்களாகிய ஜ்வாலையும் கலந்த இந்த வசந்த அக்கினி என்னை நிச்சயம் எரித்துவிடும் போல் இருக்கிறது. மெல்லிய இமையும் அழகிய கூந்தலும் இனிய குரலுமுடைய என் அன்பான சீதை இல்லாமல் வாழ்ந்து என்ன பயன்?

"இங்கே பார், லட்சுமணா! ஆண் மயில்கள் பெண் மயில்களுடன் கூடித் தோகை விரித்தாடுகின்றன. பெண்மயிலும் இதைக் கண்டு உவகை பொங்கச் சிறகை விரித்து ஆடுகிறது. அதைப் பார்த்த ஆண் மயில் அதனருகில் ஓடிவருகிறது. இந்த மயிலின் அன்பை அரக்கன் அபகரிக்கவில்லை போல் இருக்கிறது! சீதை மட்டும் இங்கிருந்தால் இப்பொழுது என் அருகே வரமாட்டாளா? லட்சுமணா, இங்கே வசந்தம் இருப்பது போல் சீதை இருக்கும் இடத்திலும் இருக்குமோ இல்லையோ? என்னைப் போல் அவளும் வருந்துவாளே! ஒருவேளை அவள் இருக்குமிடத்தில் வசந்தம் இராதோ? இந்தச் சமயத்தில் நான் இராமல் அவள் எப்படி உயிர் தரிப்பாள்? அவள் இருக்கும் பொழுது இன்பமளித்த இந்தக் காற்றே இப்போது எனக்கு நெருப்புப்போல் இருக்கிறது.

"இதோ மஞ்சாடி மரத்தின் பூங்கொத்தைக் காற்று அசைக்கிறது. காதலன் மதமுற்ற காதலியை நெருங்குவதுபோல் அந்தப் பூங்கொத்தை உலுக்குகிறது. அடர்ந்த மலர்களை உடைய இந்த மாமரங்கள் அழகிய ஆடைகளை அணிந்து சந்தனம் பூசிய மாந்தர்களைப்போல் விளங்குகின்றன. இதோ பம்பையின் ஒரு பக்கம் யானைகள் இறங்கி ஜலம் குடிக்கின்றன. மற்றொரு புறம் சக்ரவாகங்கள் குதித்து விளையாடுகின்றன. காற்றடித்து அலைகள் வேறு கிளம்புகின்றன. அலைகளில் மிதக்கும் இந்தத் தாமரை மலர்கள் மனத்தைக் கவருகின்றன. தாமரை இதழ் போன்ற கண்களை உடைய சீதைக்கு இதனிடம் மிகவும் பிரியம். அவளில்லாமல் இதைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. காமன் மிகவும் கொடியவன். என்னை விட்டுச் சென்ற சீதையை நினைவூட்டித் துன்புறுத்துகிறானே! காம வேதனையையாவது ஓரளவு பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த வசந்த காலம் என்னைப் பன்மடங்கு துன்புறுத்துகிறதே! அவளிருக்கும்போது எனக்கு இன்பம் அளித்தவை யாவும் இப்போது எனக்குத் துன்பத்தையே கொடுக்கின்றன. தாமரையோடையில் தவழ்ந்து வரும் இனிய மணமுடைய இந்தக் காற்று அவளுடைய மூச்சுக் காற்றை நினைவூட்டுகிறது.

"மழைக் காற்று அழகிய செங்கற் பொடியை வாரி வீசுகிறது. பலாச மரங்கள் இலைகளே இல்லாமல் சிவந்த பூக்களடர்ந்து தீ எரிவது போல் காட்சியளிக்கின்றன. மல்லிகை, முல்லை, தாழை முதலிய செடி கொடிகள் இந்த ஏரியின் அழகைப் பன்மடங்கு எடுத்துக் காட்டுகின்றன. மலரடர்ந்த மரங்களைப் பூச்செறிந்த கொடிகள் சுற்றி அணைத்துக்கொண்டிருக்கின்றன. காற்

றடித்து மரங்களில் சாயும் கொடிகள், மதமுற்ற பெண்கள் கணவர்களைத் தழுவிக்கொள்வதுபோல் இருக்கின்றன. மலர்களின் ரசத்தை உண்பதில் ஆவல் கொண்டதுபோல் காற்று மரத்திலிருந்து மரத்துக்கு தாவிச் செல்லுகிறது. வண்டுகள், 'இது நன்ருக இல்லை. இது ருசியாக இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டு பூவுக்குப் பூ தாவிச் செல்கின்றன.

"கீழே பூக்கள் உதிர்ந்து அழகிய படுக்கை விரித்ததுபோல் காட்சியளிக்கின்றன. பனிக்காலத்தில் பூத்த மரங்களுடன் போட்டியிடுவது போல் இப்பொழுது மற்ற மரங்கள் பூத்திருக்கின்றன. 'காரண்டவம்' என்ற நீர்ப்பறவை பேடையோடு கூடி விளையாடி என் காமத்தை வளர்க்கிறது. இப்போது சீதை கிடைத்துவிட்டால் போதும்; சுகமாக இங்கே வாழ்ந்திருப்பேன். இந்திர பதவியும் வேண்டேன் என்ருல், அப்புறம் அயோத்தி ஏன்? அதுவும் வேண்டாம். அழகிய இலைகளும் பூக்களும் அடர்ந்த இந்த மரங்களைப் பார்க்கப் பார்க்கப் பைத்தியம் பிடிக்கும்போல் இருக்கிறது எனக்கு. இதோ மான்கள் பேடைகளோடு இன்புற்றுத் திரிகின்றன. நான் மருண்ட மானின் கண்களையுடைய சீதை இல்லாமல் தனித்திருக்கிறேன். மதமுள்ள புள்ளினங்கள் துள்ளிக் மதிக்கும் இந்த மலைச்சாரல் என் குணத்தைப் புண்படுத்துகிறதே!

"ஜனக மகாராஜா ஜனங்கள் எதிரில் சீதையைப்பற்றி என்னிடம் கேட்டால் என்ன பதில் சொல்வேன்? என்னைத் தொடர்ந்து சீதை காட்டுக்கு வந்தாள். அவளை நான் காப்பாற்றவில்லை. அவள் முகத்தைக் காணுமல் என் மனம் சோர்வுற்றிருக்கிறதே! நான் அவள் பேசி எப்போது கேட்கப் போகிறேன்? மருமகள் எங்கே என்று கேட்கும் என் தாய் கௌசல்யைக்கு என்ன பதில் சொல்லப் போகிறேன்? பரதனுக்குத்தான் என்ன பதில் சொல்வது! அவளில்லாமல் நான் உயிர்வைத்திரேன்."

இப்படிப் புலம்பும் ராமனைப் பார்த்து லட்சுமணன், "மனத்தைத் தேற்றிக்கொள்ளுங்கள். உங்களைப் போன்றவர்கள் வருந்துவது கூடாது. சீதையின் பிரிவால் ஏற்படும் கஷ்டத்தை எண்ணியாவது அதிகப் பற்றுதலை விட்டுவிடுங்கள். திரி ஈரமாக இருந்தாலும்எண்ணெய் அதிகம் இருந்தால் நெருப்புப் பற்றிவிடுமல்லவா? ராவணனைக் கண்டு பிடிக்க முயற்சி எடுத்துக்கொள்வோம். ஊக்கமிருந்தால் எல்லாம் சாத்தியம்" என்று பலவாருகத் தேற்றினன். ராமன் அதைக் கேட்டுத் தைரியமடைந்து பம்பையைத் தாண்டி ரிச்யமூகத்தை நோக்கிப் புறப்பட்டான்.

கற்பனை மிகுந்த கருணை

"இதோ பாருங்கள், இந்த உடுப்பை. இது எவ்வளவு அபூர்வமாயிருக்கிறது! இதன் கம்பளி ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தது. அதை ஓர் ஆங்கிலேய வியாபாரி, ஒரு பெல்ஜியத் தொழிற்சாலைக்கு விற்றிருக்கிருர். அதை வாங்கி ஓர் இதாலியத் தையற்காரர் இதைத் தைத்திருக்கிருர். அவர்களெல்லாரும் எப்படித்தான் ஜீவிக்கிருர்களோ, பாவம்! ஏனென்ருல், இதை நான் கடனுக்கு வாங்கினேன்; இன்னும் பணங் கொடுக்கவில்லை."

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

அருமையான பொருளைக் கண்ணைப்போல் காக்கவேண்டும் என்றால், கண்ணையே காப்பது எவ்வளவு அவசியம்!

கண் விஷயம்

★

மூக்குக் கண்ணாடியே கூடாது என்று ஒரு கட்சி உண்டு. போடலசம் என்ற கட்சியைச் சேர்ந்தவர் சொல்லும் இந்த விவரம் லண்டன் 'விஷன்' என்ற பத்திரிகையில் உள்ளது.

மூக்குக் கண்ணாடி எத்தனை பேருக்கு அவசியம்?

உலகத்தில் மொத்தம் 40 சத விகிதம் பேர் மூக்குக் கண்ணாடி அணிந்துகொள்கிறார்கள். அதுவும் இவர்களில் முக்கால்வாசிப் பேருக்குக் கிட்டக் கவனித்து வேலை செய்யும்போதுதான் கண்ணாடி தேவையாக இருக்கும்.

குழந்தைகளின் கண் ஏன் முதலில் நீலமாக இருந்து பிறகு நிறம் மாறிவிடுகிறது?

பிறந்த புதிதில் குழந்தைகளின் கண் பாப்பாவைச் சுற்றியுள்ள கருவட்டத்தின் பின்புறத்தில் மட்டுமே கரு நிறப் 'பிக்மெண்ட்' என்ற பொருள் பரவியிருக்கிறது. வட்டத்தின் வெளிப்பகுதி மட்டும் எவ்வித நிறமுமின்றிப் பளிங்குபோல் இருக்கும். உள்ளே படிந்திருக்கும் 'பிக்மெண்ட்' இதன் மூலம் தெரியும்போது வட்டம் மொத்தத்தில் நீலமாகக் காட்சியளிக்கிறது.

கருவட்டம் இளவயதில் வளர்ச்சி அடையும்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னால் இருந்த நிறம் முன்னே படிந்து வருகிறது. அப்படி அது அதிகமாகப் படியாத பட்சத்தில் வட்டம் பழுப்பாகத் தோன்றும். ஆகவே, முழுதும் வளர்ச்சி பெற்ற பிறகு, முன்னால் உள்ள 'பிக்மெண்டு'ம் வட்டத்தின் வெளிப் பகுதி நிறமும் கலந்து தோற்றமளிக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

மூக்குக் கண்ணாடி அணிவதால் கண்ணுக்குக் கெடுதலா?

பார்வையைத் திருத்திக் கண்ணுக்கு அதிகச் சிரமம் நேராதபடி செய்வதால் கண்ணைக் கெடுக்கவே கெடுக்காது. ஒருவன் மூக்குக் கண்ணாடி போட்டுப் பழகிவிட்டால் அது இல்லாமல் காலந் தள்ளுவது சிரமந்தான். நாற்பத்தைந்து வயதுக்குமேல், படிக்கும்போது உபயோகிக்கும் கண்ணாடியை இரண்டு மூன்று வருஷத்துக்கு ஒரு தரமாவது மாற்ற வேண்டியிருக்கும். கண்ணிமையிலுள்ள தசைநார் பலவீனம் அடைந்துவருவதுதான் இதற்குக் காரணம். கண்ணாடி போட்டுக்கொண்டிருந்தாலும் சரி, போடாதிருந்தாலும் சரி இப்படி நேரத்தான் நேரும்; உடற் பயிற்சியோ சிகிச்சையோ செய்தாலும் ஒரு பலனும் இராது.

ஆகவே, ஒன்று: படிக்கும்போதும் உற்று வேலை செய்யும்போதும் கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், கண்ணுக்கு வீண் சிரமங்கொடுத்து, படிக்கவோ உற்று

வேலை செய்யவோ முடியாமல் திண்டாட வேண்டியதுதான்.

ஆண் பெண் இருவருக்குள் யாருக்குக் கண் அதிகக் கூர்மை?

சமீபத்தில் நடந்த ஓர் ஆராய்ச்சியிலிருந்து பெண்களைவிட ஆண்களுக்குக் கண் கூர்மை என்று தெரிந்தது. ஆனால் காரணம் என்னவென்று மட்டும் தெரியவில்லை.

கண்ணைக் குடைந்தெடுத்துத் துடைத்து வைக்க முடியுமா?

இப்படி ஒரு விநோதமான எண்ணம் பல பேருக்கு இருப்பது சகஜந்தான். சிலர், "எங்கள் சொந்த அநுபவத்திலே இப்படி நடந்து பார்த்திருக்கிறோமே?" என்று சொல்கிறார்கள். இருந்தாலும் கண்ணை எடுப்பதென்னவோ சாத்தியமில்லை. கண் ஆபரேஷன் செய்யும்போது சில சமயம் டாக்டர்கள் வைத்திருக்கும் கருவி ஏதாவது கன்னத்தில் சில்லென்று பட்டிருக்கும். இதிலிருந்து இப்படி ஓர் அத்தைப் பாட்டிக் கதை கிளம்பிவிட்டது.

ஒற்றைக் கண் பார்வைமட்டும் இருந்தால் வெகு சீக்கிரம் கண் கெட்டுவிடும் என்பது உண்மையா?

ஏன் கெட வேண்டும்? ஒற்றைக் கண் பார்வை உள்ளவனுக்கும் இரண்டு கண்ணும் சரியாக இருப்பவனுக்கும் வித்தியாசம் இதுதான்: முதல் ஆசாமிக்குக் குறிப்பிட்ட ஓர் அளவுக்குமேல் பார்வை எட்டாது; இருப்பது ஒரே கண் ஆனதால் அதற்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால் கண் பார்வையே போய்விடும்.

சில பேருக்குச் சில நிறம் கண்ணுக்குச் சரியாகத் தெரியாது. இந்தக் குறையை நிவர்த்திக்க முடியுமா, முடியாதா?

இது பிறவியிலேயே ஏற்பட்ட ஒரு குறை. இதை நிவர்த்திக்கவே முடியாது. ஆனால் நடுத்தர வயதில் ஏதாவது நோய் காரணமாக இப்படி ஏற்பட்டால் சிகிச்சை செய்தால் பழையபடி பார்வை சீர்படலாம்.

உலகம் சுற்றியவர் பெருமை

ஓர் அமெரிக்க முதலாளி உலகெங்கும் சுற்றியவர். அங்கங்கே பெரிய மனிதர்களைச் சண்டு சர்வசகஜமாகத் தாம் பழகியதாக இவர் பெருமை அடித்துக்கொள்வது வழக்கம்.

சமீபத்தில் ஐரோப்பாவுக்கு வந்து ஓர் ஓட்டலில் இவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, பக்கத்தில் இருந்த ஒரு நண்பர் இவருடைய பிரதாபங்களையெல்லாம் அசிரத்தையாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

முதலாளிக்கோ அதைக் கண்டு ஆத்திரம் வந்தது. "நான் ரோம் நகரில் போப்பாண்டவரைப் பேட்டி கண்டேன்..." என்று மேலும் ஏதோ பெருமையுடன் சொல்ல வந்தார்.

"ஓ! தெரியும், தெரியும்; அது தெரியும் எனக்கு. அவரே என்னிடம் சொன்னார்" என்று வெகு அலட்சியமாகக் கூறினார் நண்பர்.

—டேவிட் கார்டன்

உல்லாச ராஜதானி

மாலதி லேலே

> ஈரான் எண்ணெய் விவகாரம் எப்படிப் போனாலும் சரி; அந்த நாட்டு மக்களையும் காட்சிகளையும் பற்றிக் கேட்கும்போது என்ன சந்தோஷம் உண்டாகிறது! இந்திய சர்க்காரின் வெளிநாட்டுத் தூதர் காரியாலயத்தைச் சேர்ந்த ஒருவரின் மனைவி இந்தக் கட்டுரையாளர்.

ஸாஹிதான் என்பது சிறிய ஊர். ஜனத்தொகை பத்தாயிரத்துக்கு இருக்கும். பார்க்கத் தகுந்த இடம் எதுவும் இல்லை. ஆனால் பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், ஈரான் என்ற மூன்று நாடுகளுக்கும் எல்லையில் இருப்பதால் இந்த ஊர் ராணுவப் பெருமை வாய்ந்தது.

இங்கே சுமார் முந்நூறு இந்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் சீக்கியர்கள்; வியாபாரம் செய்கிறார்கள். சில குடும்பங்கள் இங்கு நிலைத்து முப்பது வருஷங்கள் ஆகிவிட்டன. ஈரானிய ராணுவப்படை இருப்பதால் ஆபீசர்களும் வேலைக்காரர்களும் சில பலூசியர்களும் இங்கு வசிக்கிறார்கள். பாகிஸ்தானி வியாபாரிகளுக்கும் குறைவில்லை.

கடல்மட்டத்துக்கு 4,500 அடிக்கு மேல் இருப்பதால் இந்த ஊரில் குளிர் அதிகம். வருஷத்துக்கு இரண்டரை அங்குலம் மழை பெய்தால் அதிகம். சுற்றுப்புறமெங்கும் ஒரே பாலை. கறிகாய், பழம், தானியம் எல்லாம் வெளியிலிருந்துதான் வரவேண்டும். பனி ஏராளமாகப் பெய்வதால் சில சமயம் பஸ்கள் நின்றுவிடும். அப்போது சில நாளைக்கு உணவுப்பொருள் கிடைப்பதே அருமை. பொழுதுபோக்குக்குச் சினிமாவோ கிளப்போ ஏதுமில்லை. டெஹரானிலிருந்து பம்பாய்க்கு ஆகாயவிமானம் போகும்போதும் வரும்போதும் இங்கே தங்கும். வாரத்துக்கு ஒரு முறை குவெட்டாவிலிருந்து தபால் வண்டி வருகிறது. அப்போதுதான் இந்தியாவிலிருந்து எங்களுக்குத் தபால் கிடைக்கும்.

இந்தப் பாழாய்ப்போன ஊருக்கு நான் வந்து ஒரு வருஷம் ஆகிறது. டெஹரானைப்பற்றிய வர்ணனைகளைக் கேட்டதும் என்றைக்காவது அங்கே போக மாட்டோமா என்று தோன்றும். அந்த நாளும் வந்தது. திடீரென்று ஒரு நாள் ஆபீஸ் வேலையாக இவர் டெஹரானுக்குப் புறப்படவேண்டியிருந்தது. நானும் மூட்டை கட்டினேன்.

ஒரு நாள் பகல் பன்னிரண்டரை மணிக்கு எங்கள் விமானம் வந்தது. இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் வந்தவர்களுடைய பயணச் சீட்டைப் பார்த்துச் சுங்கப் பரிசோதனைகள் முடிந்தபிறகு இரண்டு மணிக்கு எங்கள் விமானம் புறப்பட்டது. வழியில் எங்கும் பசுமையே கண்ணுக்குத் தென்படவில்லை.

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: நவம்பர் ’51), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

காலவரை மணிக்குச் சில சிறு வீடுகளும் வயல்களும் தென்பட்டன. விமானம் கெர்மான் என்ற அந்த ஊரில் தபால் எடுத்துக்கொள்ளவும், பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளவும் இறங்கியது. விமான நிலயத்தில் இறங்கும்போதே படீரென்று டயர் வெடித்தது. சக்கரங்களும் கெட்டுப் போயின. ஆதலால் இரவு அங்கே தங்கவேண்டியதாயிற்று.

ஒரு பஸ்ஸில் நாங்கள் ஊருக்குள் போனோம். அந்த ஊரில் ஒரே ஒரு ஹோட்டல்தான். ஆனால் அது மிகவும் அழகாக இருந்தது. சுற்றுப்புறம் சோலை; நீந்துவதற்கு ஒரு குளம்; நிறையத் திறந்த வெளி. பால் இல்லாத டீதான் ஈரானில் கிடைக்கும். 'காவா' என்ற அந்த டீயைக் கஷாயம்போலக் குடித்துவிட்டு, ஊர் சுற்றினோம். தெருவில் எல்லாரும் என் புடைவையை ஆவலோடு பார்த்தார்கள். விவசாயமும், ரத்தினக்கம்பளம் நெய்வதுமே அந்த ஊர் மக்களின் தொழில்.

மறுநாள் காலையில் டெஹரானிலிருந்து வந்த வேறு விமானத்தில் புறப்பட்டுப் பன்னிரண்டு மணிக்கு யஸ்த் என்ற ஊர் போய்ச் சேர்ந்தோம். இது பார்ஸிகளின் முக்கிய நகரம். ஈரானில் ஜாரதுஷ்டிர மதத்தைச் சார்ந்தவர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்தியாவுக்கு வந்து ஈரானி ஹோட்டல் நடத்துபவர்களில் பெரும்பாலோர் இந்த ஊரிலிருந்து வந்தவர்களே. பார்ஸிகளின் பழைய ஊரும் இதுதான். அராபியர்கள் அவர்களைத் துன்புறுத்தியதனால் அவர்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். சிலர் இங்கேயே தங்கி, தங்கள் மதத்தையும் பாதுகாத்திருக்கிறார்கள். இந்த ஊரில் பட்டுச்சேலை நெசவு சிறப்பாக நடைபெறுகிறது.

ஒரு மணிக்கு நாங்கள் இஸ்பஹானில் இறங்கினோம். பட்டிக்காட்டானை நடுவழியில் இறக்கிவிட்டுப் பஸ் போவதுபோல, எங்களை ஒரு நடுப்பாலையில் இறக்கிவிட்டு விமானம் பறந்துபோயிற்று. நாங்கள் தங்குவதாக இருந்த ஹோட்டலிலிருந்து வந்த வண்டி அங்கிருந்து எங்களை ஊருக்குள் அழைத்துச் சென்றது. பெரிய தார் ரோடும் இருபுறமும் வரிசையாக மரங்களும் பார்க்க அழகாக இருந்தன. நாற்சந்திகளில் மலர்ச் செடிகள் வைத்து வட்டமாக அலங்கரித்திருந்தது. ஹோட்டலுக்குப் போனதும் நாங்கள் பம்பாயில் இருப்பதுபோலவே தோன்றிற்று.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஈரானுக்கு இஸ்பஹான் ராஜதானியாக இருந்ததாம். இதன் ஜனத்தொகை நான்கு லட்சம். 16,000 அடி உயரத்தில் இந்த ஊர் இருப்பதால் குளிர் அதிகம். இங்கே பழங்கள் மிகவும் மலிவு. ஏழைகள் பழம் தின்றே வயிற்றை நிரப்புகிறார்கள். பெட்ரோல் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைப்பதால் சாதாரண மக்கள் கூட டாக்ஸியில்தான் போகிறார்கள். சித்திரவேலை செய்த ஜமுக்காளங்களும் கம்பளங்களும் மேஜை விரிப்புக்களும் திரைகளும் அழகாக இருக்கின்றன. வெள்ளியிலும் பித்தளையிலும் அழகிய பாத்திரங்கள் இங்கே கிடைக்கின்றன. விலையைப் பார்த்தாலோ எதையுமே வாங்கவேண்டாமென்று தோன்றுகிறது.

மறுநாள் பஸ்ஸில் நாங்கள் டெஹரான் போய்ச் சேர்ந்தோம். 'ரேஸா ஷா அரண்மனை' என்ற மியூசியம் பார்க்கத் தகுந்தது. நாம் சரித்திர வாயிலாக அறிந்த பிரசித்தி பெற்ற மயில் சிம்மாசனம்

இப்போது அங்கேதான் இருக்கிறது. மாணிக்கமும் மரகதமும் இழைத்த அந்தச் சிம்மாசனத்தைப் பார்த்தாலே கண் கூசுகிறது. முத்தினுல் சித்திரவேலை செய்த நேர்த்தியான ரத்தினக்கம்பளம் ஒன்று இருக்கிறது. பச்சையும் கெம்பும் வைரமும் நீலமும் இழைத்த சலவைக்கல் பாண்டங்கள் வெகு அழகாக இருக்கின்றன. ஈரானிய மன்னனுக்குப் பரிசாக இந்த வனப்புமிக்க பாண்டங்களை நெப்போலியன் அனுப்பினுனும்.

பர்சியச் சிற்பிகள் செய்த மெழுகுச் சிலைகளை ஒரு நாள் பார்க்கப் போனேம். வாசலில் ராணுவ உடையில் ஒரு சிப்பாய் நின்ருன். அவனிடம் டிக்கட்டைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக் கை நீட்டியபோது அது சிலை என்று தெரிந்தது. ஒரு சிலையை நான் உற்றுப் பார்த்தபோது அது உண்மையான மனிதன் என்று அறிந்து எனக்கு வெட்கமாகப் போயிற்று. பல ஓவியர்களின் அழகிய வர்ண சித்திரங்களும் அங்கே இருக்கின்றன.

ஈரானிய மக்கள் உல்லாசமாய்ப் பொழுது போக்குகிருர்கள். அவர்கள் சிறு குளங்களில் படகுகளில் ஒய்யாரமாகச் செல்வதும், குதிரைப் பந்தயத்துக்குப் போவதும், சினிமாப் படங்கள் பார்ப்பதுமாக இருக்கிருர்கள். நாட்டியக் கச்சேரிகளில் நேரம் போவதே தெரியாது.

டெஹரான் ராஜதானியாதலால் விலைவாசிகள் சொல்லி முடியாது. மூன்று அறைகள், ஒரு சமையலறை, தனியாக ஸ்நான அறை, கக்கூசு-இவ்வளவு இடத்துக்கு என்ன வாடகை இருக்குமென்று நினைக்கிறீர்கள்? நானூற்றுக்குக் குறைந்து இந்த இடம் கிடைக்காது. வேலைக்காரர்கள் கிடைப்பதோ இன்னும் கஷ்டம். பாத்திரம் கழுவவும், வீடு பெருக்கவும், சமையல் செய்யவும், துணி துவைக்கவும் தனித் தனி வேலைக்காரர்கள் வைக்கவேண்டும். சமையற்காரி நம் ஊரைப் போலப் பாத்திரம் கழுவவோ வீடு பெருக்கவோ மாட்டாள். எந்த வேலைக்கும் நூறு ரூபாய்க்குக் குறைந்து ஆள் கிடைப்பதில்லை. சாதாரண வேலைக்காரனுக்குக்கூடச் சாப்பாடும் துணியும் கொடுத்து எழுபதோ எண்பதோ சம்பளம் கொடுக்கவேண்டும். வேலைக்காரர்கள் வெளியே போவதென்ருல் ஷோக்கான உடை அணிவார்கள். எவ்வளவு ஏழையும் ஒய்யார வாழ்க்கை நடத்துவான். வேலைக்காரன் நம் வீட்டுவாசலில் பஸ்ஸில் வந்துதான் இறங்குவான். பஸ் கிடைக்காவிட்டால் டாக்ஸி வைத்துக்கொள்வான். அந்த ஊரில் என் தோழியின் வீட்டுக்கு ஒரு நாள் பட்டு நிஜாரும், நேர்த்தியான செருப்பும், ரோல்டு கோல்டு கைக்கடிகாரமும், கழுத்தில் முத்து மாலையும், காதில் ரத்தினக் சம்மலும் அணிந்த ஒரு பெண்மணி வந்தாள். அவள் துடைப்பத்தை எடுத்து வீட்டைப் பெருக்கியபோது தான் வேலைக்காரி என்று தெரிந்தது.

திரும்பி வந்தபோது நாங்கள் வந்த பஸ்ஸில் கூட்டம் சகிக்கவில்லை. காலையில் வெயில் கொளுத்துமாதலால் பஸ் மாலை ஐந்து மணிக்கு மேல் புறப்பட்டு இரவு முழுவதும் ஓடும். மூன்று நாள் எனக்கு வழியில் தூக்கமே இல்லை. 1,200-மைல் சுற்றிவிட்டு வீடு வந்ததும் அப்பாடா என்று இருந்தது. இனி ஒரு வருஷத்துக்கு ஸாஹிதானை விட்டு எங்கும் கிளம்பப் போவதில்லை என்று இருக்கிறேன்.

கவி போதனா

'சாஸ்திரி'

நாடெங்கும் கீர்த்திபெற்ற ஆந்திரக் கவிஞர்களுள் ஒருவர் போதனா. அவரைப்பற்றிய இந்த வரலாறு, கர்ணபரம்பரையாக வழங்குகிறது. கர்ணபரம்பரையானது என்றாலே, அதில் உண்மையும் கற்பனையும் கலந்துதானே இருக்கும்!

ஆந்திர தேசத்தில் சிறந்த கவிகளாகவும் மந்திரிகளாகவும், தளபதிகளாகவுங்கூடப் பதவி வகித்தவர்கள் நியோகிப் பிராம்மணர்கள். இவர்களுக்கு 'அமாத்தியர்' என்ற பட்டம் பரம்பரை பரம்பரையாக வரும். கேஸனா மந்திரி என்பவருடைய பிள்ளை போதனா. இவருடைய குடும்பப் பெயர் 'பம்மெர' என்பார்கள்.

இவர் ஏகசிலாநகரம் என்ற ஓரங்கல்லில் வசித்து வந்தார். இது பிரதாப ருத்திர தேவனுடைய ராஜ்யத்துக்குத் தலைநகரம்.

இவர் எல்லாரையும்போல் குருவிடம் வித்தை கற்கவில்லை என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். இவரே தாம் எழுதிய அருமையான பாகவதத்தின் கடைசியில், "சகஜ பாண்டித்திய போதனாமாத்திய" என்று முத்திரை இடுவதால் இது நம்பத் தகுந்ததாகவே தோன்றுகிறது.

இதற்கு எதிரிடையான மற்றொரு கதையும் வழங்குகிறது. சிறு வயதில் இவர் தம் ஊரையடுத்த காட்டில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தாராம். சிதானந்தர் என்ற யோகி ஒருவர் இவருக்கு ராம மந்திரத்தை உபதேசித்தாராம். அதுமுதல் இவருக்கு அகண்ட பாண்டித்தியம் உண்டாயிற்றாம். எப்படிப் பார்த்தாலும் இவருக்குத் தெய்விக அருள் மூலமே கவிதா ஞானம் ஏற்பட்டதென்று தெரிகிறது.

இவர் வறுமையிலேயே பிறந்து வறுமையிலேயே வாழ்ந்தவர். அந்தக் காலத்துக் கவிகள் ஒரு ராஜாவையோ பிரபுவையோ அண்டி வறுமையை ஒழித்தார்கள். இவருடைய சமகாலக் கவியும் 'சிருங்கார நைஷதம்' என்ற நூலின் ஆசிரியரும் இவருடைய மைத்துனருமான ஸ்ரீநாதர் தம் காவியங்களைப் பல பிரபுக்களுக்கு அர்ப்பணம் செய்து பணத்திலேயே புரண்டார். போதனாமட்டும் யார் என்ன சொல்லியும் கேட்காமல், "என் கவிதை ஈசுவரார்ப்பணம்" என்று சொல்லித் தம் பாகவதத்தை ஸ்ரீ ராமபிரானுக்குச் சமர்ப்பித்திருக்கிறார். கொஞ்சம் நிலபுலம் உண்டு. அதில் கிடைத்ததைக் கொண்டு திருப்தியாக வாழ்ந்தார். "நரனைப் பாடமாட்டேன்" என்ற பிடிவாதத்துடன் இவர் பாடிய பாடல் ஒன்று இவருடைய மனநிலையைத் தெளிவாக்குகிறது.

அதன் கருத்து: "இந்த அதமர்களாகிய அரசர்களை அண்டி அவர்களுக்குக் காவியங்களைச் சமர்ப்பித்து ஊர்களையும் வாகனங்களையும்

மூலம்: பாகவதம் (தெலுங்கு நூல்).

பொன்னையும் பெற்று மயங்கி உடலை நீத்தபின் எமன்கைச் சம்மட்டியால் அடி பெறாமல், இந்தப் பம்மெர போதராஜு ஒருவனே ஹரியைத் தலைவனாக வைத்து உலகத்துக்கு இதமாகப் பாகவதத்தைப் பாடிச் சமர்ப்பித்தான்.'' இது பாகவதத்தின் முதல் ஸ்கந்தத்தில் இருக்கிறது.

போதனா வறுமையில் உழல்வதைக் கண்டு சகியாத ஸ்ரீநாத கவி, போதனாவின் பாகவத காவியத்தைக் கர்நாடக அரசனுக்குச் சமர்ப்பணம் செய்யும்படி தூண்டலாமென்ற நினைவுடன் போதனாவிடம் வந்தார். அப்போது போதனா தம் மகன் மல்லனாவுடன் இருந்துகொண்டு நிலத்தை உழச் செய்துகொண்டிருந்தார். ஸ்ரீநாதர் தம் பெருமையை அவர்களுக்குக் காட்டும் நோக்கத்துடன் தம் பல்லக்கின் ஒரு புறத்து ஆட்களைத் தண்டை விடும்படி சொன்னார். ஒரு புறம் ஆள் சுமக்காமலே பல்லக்கு முன்னேறியது. மல்லனா தன் தந்தைக்கு அந்த அதிசயத்தைச் சுட்டிக் காட்டினான். உடனே போதனா, ஏரின் ஒரு பக்கத்து மாட்டை அவிழ்த்து விடும்படி மல்லனாவுக்கு உத்தரவிட்டார். அவன் அப்படியே செய்தான். ஒரு பக்கத்து மாடு இல்லாமலே ஏர் ஓடியது. இதைக் கண்ட ஸ்ரீநாத கவி தம் பல்லக்கின் மறுபுறத்தைத் தாங்கும் ஆட்களையும் பல்லக்கை விட்டுவிடும்படி சொன்னார். அவர்கள் விட்டார்கள். அதற்குப் பிறகும் பல்லக்கு முன்போலவே போய்க்கொண்டிருந்தது. போதனா ஏரின் மறு பக்கத்து மாட்டையும் அவிழ்த்துவிடும்படி மல்லனாவிடம் சொன்னார். அப்போதும் முன்போலவே ஏர் ஓடியது.

இந்தச் சம்பவத்தால் தமக்கு உள்ள சாமர்த்தியம் போதனாவிடமும் இருக்கிறதென்று கண்ட ஸ்ரீநாதர், "உழவரே, சௌக்கியமா?'' என்று போதனாவைக் கேலியாகக் கேட்டார். அதற்குப் போதனா 'பத்தியம்' என்ற செய்யுளாகவே பதில் சொன்னார்.

"இளம் மாந்தர்கள் நிறைந்த (நவரசத்தை உள்ளடக்கிய) மென்மை வாய்ந்த கன்னிகையை நீசர்களுக்கு அடிமைப்படுத்தி அந்த வேசித் தொழிலால் வந்த சோற்றைத் தின்று பிழைப்பதைவிடச் சிறந்த கவி ஓர் உழவனாயிருந்தால் என்ன, சொந்த மனைவி மக்களைப் போஷிக்கக் காட்டில் கந்தமூலங்களைப் பறித்துத் தின்றாலென்ன?''

இந்தப் பதில் ஸ்ரீநாத கவிக்குச் சுறுக்கென்று தைத்தது. உடனே போதனாவை இறுகக் கட்டியணைத்து, "பாவா! வேடிக்கையாகச் சொன்னால் கோபித்துக்கொள்ளலாமா?'' என்று சமாதானம் சொன்னார். பின்பு, "மணம் பொருந்திய உன் காவியத்தை யாரேனும் ஓர் அரசனுக்குச் சமர்ப்பித்தால் ஆயிரக் கணக்காகப் பொன் கொடுப்பானே! உன்னைப் போன்ற மகாத்மாக்கள் ஏன் கலப்பை பிடித்து உழவேண்டும்?'' என்று தம் யோசனைக்குப் பூர்வாங்கமாக அவரைத் தூண்டினார். போதனா பதில் சொல்லவில்லை. அரண்மனை ஆட்களுடன் வந்த கவி மைத்துனனுக்கு விருந்து தயாரிக்க முனைந்தார். வீட்டில் உப்போடு கருப்பூரம் வரையில் பூஜ்யம். கடன் பெயரவில்லை. தைரியமாக வந்தவர்கள் எல்லாரையும் சாப்பிட வரச் சொல்லிவிட்டுக் கலைமகளைத் தியானித்தார் போதனா. அந்தத் தேவி உடனே பிரசன்னமாகி அடுக்களைப்புறம்

ஒரு திரை கட்டச் சொல்லி அதன் பின்புறத்தில் பஞ்சபட்சிய பரமான்னத்துடன் விருந்து தயாரித்தாள். சரசுவதி தேவியின் கையிலிருந்து போதனுவின் மனைவி வாங்கி வாங்கி வந்தவர்களுக்குத் திருப்தியாகப் . பரிமாறினுள். 'கலப்பை பிடித்த ஏழைப் பிராம்மணன், இத்தனை பேருக்கும் எங்கிருந்து போடப் போகிறுன்' என்று நினைத்த ஸ்ரீநாதர் முதலியவர்கள் அதிசயத்தில் ஆழ்ந்தார்கள்.

விருந்து முடிந்தபின் ஸ்ரீநாதர் போதனுவைப் பார்த்து, "கவி ரத்தினமாகிய நீ என் இப்படி வறுமையால் வாடவேண்டும்? நீ எழுதிக்கொண்டிருக்கும் பாகவதத்தை யாராவது ஓர் அரசனுக்குச் சமர்ப்பணம் செய்தால் ஐசுவரியத்தில் புரளலாமே! மறுமைக்கு ஆசைப்பட்டு இம்மையில் நரக வேதனை அநுபவிப்பது நியாயமா?" என்று போதனுவின் மனத்தைக் கலைத்தார்.

அவர் சம்மதிப்பதற்கு முன் சுரசுவதி தேவி கண்களில் நீர் சோர எதிரே வந்து நின்றுள். அவள் கருத்தை அறிந்த போதனு, "கைடபன் என்னும் அசுரனைக் கொன்ற மாயனின் மருமகளே! பொன்தாமரையில் அமர்ந்த பிரமனின் ராணியே! மைக்கண்ணீர் மார்புக் கச்சை நனைக்க ஏன் இப்படி அழுகிறுய்? என் தாயாகிய உன்னை வயிற்றுப் பிழைப்புக்காக அரசர்களுக்கு விற்க மாட்டேன். திரிகரணசுத்தியாகச் சொல்கிறேன், பாரதியே. என்னை நம்பு" என்ற கருத்தில் 'உத்பலமாலை' பாடினுர். வந்த ஸ்ரீநாதர் வெறுங் கையுடன் திரும்பினுர்.

இந்தச் செய்தியைக் கேட்ட சர்வக்ஞ சிங்கராஜன் போதனுவைத் தன் சபைக்கு வரவழைத்தான். "பாகவதத்துக்கு என்னைத் தலைவனுக்கிப் பாடும்" என்றுன். போதனு, "நரனைப் பாடேன்" என்று சொல்லிவிட்டார். அரசன் ஆத்திரம் மிகுந்து பாகவதத்தைப் பூமியில் குழிதோண்டிப் புதைத்துவிட்டான். அரசனுடைய மனைவியின் கனவில் ஸ்ரீ ராமபிரான் தோன்றிப் பாகவதத்தை விடுவித்து உலகில் பரப்பவேண்டுமென்று உத்தரவிட்டார். பாகவதம் வெளியில் வரும்போது சில பாகங்களைச் செல் அரித்துவிட்டது. ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் கடைசியில் சில பாகங்களைக் கங்கனு, நாரனு, சிங்கனு என்னும் அவருடைய சிஷ்யர்கள் நிரப்பியிருக்கிறுர்கள். இவர் பிரௌட தேவராயர் காலமாகிய 15-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

பொய்யிலே வெற்றி

வெற்றிகரமாய்ப் பொய்சொல்ல அபார ஞாபகசக்திவேண்டும்; அவ்வளவு ஞாபகசக்தியுள்ள மனிதன் எவனுமே இல்லை.

—ஆப்ரகாம் லிங்கன்

இன்பம் எங்கே ?

இன்பத்தை நம் உள்ளத்துக்குள்ளே கண்டுகொள்வது சுலபம் இல்லை; வெளியே கண்டுகொள்வதோ சாத்தியமே இல்லை.

—ஆக்னிஸ் ரெப்ளீஸ்

குடிகார டிரைவர்

★

★★★

"எவ்வளவு குடித்தாலும் எனக்கு நிதானம் தவறாது" என்று பெருமையடித்துக்கொள்ளும் பல குடிகாரர் உண்டு. பிறர் உயிரைப்பற்றிய — ஏன், தங்கள் உயிரைப் பற்றியுந்தான்— கவலையில்லாமல், குடிமயக்கத்தோடு கார் ஓட்டவும் அவர்கள் தொடங்கிவிடுகிறார்கள். அவர்களைப் பிடித்துக் கோர்ட்டிலே கொண்டுபோய் நிறுத்த ஒரு நூதனக் கருவி அமெரிக்காவில் தோன்றியிருக்கிறது. அதுபற்றிய இந்த விவரம் 'பாப்புலர் ஸயின்ஸ்' கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டது.

★★★

குடித்துவிட்டுக் கார் ஓட்டியதாக ஒரு டிரைவர்மீது வழக்கு நடக்கிறது.

டிரைவரைக் கைது செய்த போலீஸ் ஜவானை விசாரிக்கிறார்கள்.

"விபத்து நடந்தவுடனே, டிரைவரின் மூச்சைக் கவனித்தீரா? விஸ்கீ நாற்றம் வீசியதா?"

"கவனித்தேன். தெரியவில்லை. ஏனென்றால், அப்போது அவர் ஸிகரெட் குடித்துக்கொண்டிருந்தார்."

"அவர் தள்ளாடித் தள்ளாடி நடந்தாரா?"

"அப்படிச் சொல்ல முடியாது."

"தடுமாறாமல் தெளிவாய்ப் பேசினாரா?"

"தெளிவாய்த்தான் பேசினார்."

டிரைவர்பாடு குஷிதான். தம் மீது 'கேஸ்' ருசு ஆகவில்லை என்று அவர் சந்தோஷப்படுகிறார். எவ்விதத் தண்டனையும் இல்லாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்று தைரியமடைகிறார்.

இந்தச் சமயத்தில் பழுப்புநிறமுள்ள ஒரு பெட்டியைப் போலீஸ்காரர்கள் உள்ளே கொண்டுவருகிறார்கள். அது ஒரு ஸூட்கேஸ் அளவு இருக்கிறது. ஒரு ரேடியோவைப் போடுவதுபோல், எலெக்டிரிக் சப்ளையில் அதை 'ப்ளக்' செய்து பொருத்துகிறார்கள். நீலநிறமான ஒரு திராவகம் அடங்கிய சீசாவை எடுத்து, அந்தப் பெட்டியில் செருகுகிறார்கள். பெட்டியின் 'டயல்'மீது சிவப்பு வர்ண அடையாளம் போட்டிருக்கும் பக்கமாக அதில் உள்ள முள் திரும்புகிறது. பிராஸிகியூட்டர் அதை உற்றுப் பார்க்கிறார். பிறகு ஜட்ஜியை நோக்கித் திரும்புகிறார்.

"யுவர் ஆனர், எதிரியின் மூச்சை இதில் எடுத்திருக்கிறோம். நான் இந்த 'ஸாம்பிள்' சீசாவைச் சாட்சியமாகத் தாக்கல் செய்கிறேன். இதை இந்த யந்திரப் பெட்டியில் செருகிவிட்டால், எதிரி இதில் மூச்சுவிட்ட சமயம் அவன் ரத்தத்தில் எவ்வளவு போதைப்பொருள் இருந்தது என்பதைக் காணலாம். இப்போது அப்படித்தான் செருகியிருக்கிறேன். எதிரியின் ரத்தத்

தில் ஆயிரத்தில் இரண்டுகூறு போதைப் பொருள் இருந்ததாக இது காட்டுகிறது" என்கிறார் பிராஸிகியூட்டர்.

இந்தச் சாட்சியத்தை மறுக்க முடியாமல், எதிரி தம் குற்றத்தை ஒப்புக்கொள்கிறார்.

இப்படி ஒரு வழக்கு நடந்த விவரங்களைக் கேட்கும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால், இது வெறும் கட்டுக் கதை அல்ல. அமெரிக்காவில் இப்படி ஒரு புதுமையான முறையைக் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள்.

இங்கே குறித்த நூதனக் கருவிக்கு 'ஆல்கோமீட்டர்' என்று பெயர். இந்தக் கருவியை இப்போதே இருபது ஜில்லாக்களில் உபயோகித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் இன்னும் பல இடங்களுக்கும் இது பரவிவிடும் என்கிறார்கள்.

யேல் யூனிவர்ஸிடியில் உடற்கூறு சாஸ்திரப் புரொபஸரான டாக்டர் லியான் ஏ. கிரீன்பெர்க் என்பவர் பதினொரு வருஷங்களாக ஆராய்ச்சிசெய்து இந்தக் கருவியைப் பக்குவமாக அமைத்திருக்கிறார். ஒரு மனிதன் குடித்திருக்கிறானா இல்லையா என்பதை இந்தக் கருவி நிச்சயமாகக் கண்டுபிடித்துச் சொல்லிவிடுகிறது. அதுவும் எவ்வளவு மதுவை அவன் குடித்திருக்கிறான் என்ற கணக்கையும் தெரிவிக்கிறது; அதாவது அவன் ரத்தத்தில் எவ்வளவு சதம் போதைப் பொருள் இருக்கிறது என்பதை இதைக் கொண்டு அறிந்துவிடலாம்.

இந்தக் கருவியை உபயோகிக்கும் போலீஸ்காரனுக்கு,



குடிகார டிரைவர் ஒருவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய், அதிகாரி பரீட்சிக்கிறார். 'ஆல்கோமீட்டர்' என்ற மது அளவுக் கருவிக்குள் அவனை மூச்சு விடச் சொல்லுகிறார். அவன் விடும் மூச்சு, கருவிக்குள் போய்ச் சேர்கிறது.



கருவியைப் பிறகு மின்சார சப்ளையோடு அதிகாரி இணைத்துவிடுகிறார். 'போட்டோ எலெக்ட்ரிக் ஸெல்' என்ற மின்சாரக் கண்ணின் உதவியால் கருவியின் முள் அசைந்து, 0·2 சதம் மது அந்த மூச்சுக் காற்றில் அடங்கியிருப்பதைக் காட்டுகிறது.

பௌதிகம், ரசாயனம், யந்திரம் முதலியவைபற்றிய சாஸ்திரம் ஒன்றும் தெரிந்திருக்கவேண்டியதில்லை. வெகு சுலபமாக இதை அவன் கையாளலாம்.

போலீஸ்காரனுக்கு ஓர் ஆசாமி குடித்திருப்பதாகச் சந்தேகம் ஏற்படுவதாக வைத்துக்கொள்ளலாம். அந்த ஆசாமியை இந்தக் கருவி இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்லவேண்டியது. இதிலிருந்து ஒரு குழாய் வெளியே நீண்டிருக்கும். அதில் அவனை மூச்சு விடச் சொல்லவேண்டும். இப்படி விடும் மூச்சு, இந்தக் கருவிக்குள் வைத்திருக்கும் ஒரு சீசாவுக்குள் போய்ச் சேர்கிறது. 'அயொடின் பென்டாக்ஸைடு' என்ற திராவகம் அடங்கியது அந்தச் சீசா. இந்த மூச்சுக் காற்றுப் பட்டதும் அதிலிருந்து சுத்த 'அயொடின்' ஆவி கிளம்பி மற்றொரு சீசாவுக்குள் போய் அடைகிறது. ஒரு சத விகிதம் 'ஸ்டார்ச்' கரைத்த திரவத்தை அந்தச் சீசாவில் ஊற்றியிருப்பார்கள். அதில் இந்த ஆவி போய்ச் சேர்ந்ததும், அந்தத் திரவம் நீல நிறமாக மாறிவிடும். மின்சாரக் கண் என்று சொல்லத் தக்க 'போட்டோ எலெக்ட்ரிக் ஸெல்' ஒன்றையும் இந்தக் கருவியில் பொருத்தியிருக்கிறார்கள். எலெக்ட்ரிக் கரண்டில் அதை இணைத்தால், அது இந்தத் திரவத்தின்மீது ஒளி வீசி, அதில் எத்தனை சதம் போதைப் பொருள் இருக்கிறது என்பதை 'டயல்' மூலம் வெளியே காட்டி விடுகிறது. மூச்சில் எந்த விகிதத்தில் போதைப் பொருள் இருக்கிறதோ அதை அநுசரித்தே ரத்தத்திலும் போதைப் பொருள் இருக்கும். அதனால்தான் இந்த முறை சாத்தியப்படுகிறது.

அமெரிக்க மெடிக்கல் அஸோஸியேஷன் நிபுணர்களின் அபிப்பிராயப்படி, ஒருவனுடைய ரத்தத்தில் ·15 சத விகிதம் போதைப் பொருள் இருந்தால், அவன் குடித்திருந்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆயிரம் சொட்டு ரத்தத்தில் ஒன்றரைச் சொட்டு மது ஏறியிருப்பதாக இதற்கு அர்த்தம். ·1 சதவிகிதம் மது இருந்தால் அதை நிச்சயமான சாட்சியமாகக் கொள்ள முடியாது; ·05 சத விகிதம் இருந்தால் அது சாட்சியமே அல்ல.

ஆனால், இந்தச் சதவிகிதங்களைப் போலீஸ் இலாகாதாருக்கு ஒரு வழிகாட்டியாகவே குறித்திருக்கிறார்கள். உண்மையில் பலரைப் பரிசோதித்துப் பார்த்ததில் இந்தக் கருவி ·5 சத விகிதம் காட்டியவருள் 100-க்கு 11 பேரும், ·15 முதல் ·3 சதவிகிதம் காட்டியவருள் 100-க்கு 80 பேரும், ·45 சத விகிதம் காட்டிய அத்தனை பேரும் நன்றாகக் குடித்திருந்தார்கள்.

மதுபானத்தின் வேகம் படிப்படியாக மனிதனிடம் ஏறுகிறது. முதல் முதலில் அவன் புத்தி தடுமாறுகிறது. தன்மயக்கம் அடைகிறான். அவனுக்கு உசிதானுசிதம் தெரியாமல் போகிறது. மனத்தின் 'பிரேக்'-கட்டுப்பாடு-போய் விடுகிறது. அதனால்தான் அவன் உரக்கப் பேசுகிறான்; சிரிக்கிறான்; எல்லாரிடமும் விழுந்தடித்துக்கொண்டு குலாவுகிறான். புத்தி தடுமாறிய பிறகு அடுத்தபடியாகக் கண் மங்குகிறது; நாவு குழறுகிறது; தசைநார்கள் விலவிலத்துப் போகின்றன. கடைசியாக இருதயத்துடிப்பு, ஜீர்ண சக்தி, சுவாசம் இவையெல்லாம் குளறிப் போகின்றன.

குடிகாரன்,

● ஒரு விஷயத்தைத் தீர்மானிக்க 9·7 சதவிகிதம் அதிக நேரம் பிடிக்கிறது.

● தசை இயங்கிக் கை காலை அசைக்க 17.4 சதவிகிதம் அதிக நேரம் பிடிக்கிறது.

● அவதான சக்தியை இழப்பதால் 35.3 சத விகிதம் அதிகப் பிசகு செய்கிறுன்.

● தசைநார்கள் தளர்வதால் 59.7 சதவிகிதம் அதிகப் பிசகு செய்கிறுன்.

மதுபானத்தால் இந்தக் கோளாறெல்லாம் ஏற்படுவதற்குக் காரணம் இதுதான்: ஒருவனுடைய உடலில் அது சட்டென்று போய்க் கலந்து விடுகிறது; ஆனுல், சீக்கிரம் எரிந்து ஜீர்ணமாவதில்லை. மதுபானம் செய்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அதில் சிறிது அளவை ரத்தத்தில் நாம் காண முடிகிறது. ஆனுல், ஓர் அவுன்ஸ் விஸ்கீ உடலுக்குள் போய் முற்றும் எரிந்து போகக் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது ஆகிறது.

இதையெல்லாம் பார்க்கும்போது குடிகாரனிடம் இரண்டு அம்சங்களைத்தான் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது; ஒன்று, அவன் எவ்வளவு மதுவைக் குடித்தான் என்பது; இரண்டு, அதை எவ்வளவு நேரத்துக்கு முன்பு குடித்தான் என்பது. மதுவைக் கட்டோடு ஒழிப்பது தான் நல்லது. அது முடியாதவன் குடித்து விட்டே மோட்டார்க் கார் ஓட்ட வேண்டுமென்று நினைத்தால், தான் குடித்த மது ஜீர்ணமாகி ரத்தத்தோடு ரத்தமாய்க் கலக்க எத்தனை நேரம் ஆகுமென்பதையாவது கணக்கிட்டு அதன் பிறகே ஓட்டவேண்டும். சில பேருக்குப் பிறர் உயிரைப்பற்றி லட்சியமே இல்லை. அவர்கள் எவ்விதத்திலும் தப்பித்துக்கொள்ள முடியாதபடி அவர்களைப் பிடித்துக் கொடுக்க உதவுவது 'ஆல்கோமீட்டர்' என்ற மதுபான அளவெடுக்கும் அதிசயக் கருவி.

சந்தேகம் தீர்ந்தது

குழாய் பழுது பார்க்கும் கம்பெனியிலிருந்து ஆள் வந்து, ஒரு வீட்டுக் கதவை இடித்து, "இந்த வீட்டுக் குழாய்தான் பழுதா?" என்று கேட்டான்.

வீட்டுக்காரி கோபமாய் கதவைத் திறந்துகொண்டே "இப்போதாவது வந்து சேர்ந்தாயே, அப்பா. நேற்று முன் தினம் - பத்தாந்தேதி - டெலிபோன் செய்தேன். இன்றுதான் வருகிறுய்" என்ருள்.

"அப்படியா, அம்மா! அப்படியென்ருல் நான் வந்தது இந்த வீட்டுக்கு அல்ல. அந்த வீட்டுக்கார அம்மாள் ஒன்பதாந் தேதியே டெலிபோன் செய்தாள். அதை விசாரித்துப் பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஆள் கிளம்பி விட்டான்.

—பிரான்ஸிஸ் ராட்மான்.

உலகின் உன்னத புருஷர்

இதோ பூர்த்தியான அரை நூற்றுண்டிலே உலகத்துக்கே மகோன்னதமான பெரியார் யார்? "அவர் எந்தத் தேசத்தினராயிருந்தாலும் சரி; மற்ற எல்லாரையும் விட்டு, ஒரே ஒரு பெயரைக் குறிப்பிட வேண்டும்" என்று பிற்காலச் சந்ததிகளைக் கேட்டால், அவர்கள் சொல்லக்கூடிய பெயர் ஒன்றே ஒன்றுதான். அதை இன்று கேட்டால், ஒரு வேளை நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அந்தப் பெயர் இதுவே: காந்தி.

எவ்வளவு பிரம்மாண்டமான துறையில் காந்தி உழைத்தார் என்பதைக் கவனித்துப் பாருங்கள். உலகத்து மக்களில் ஏறக்குறைய ஐந்திலொரு பங்கு, அவர் நாட்டின் ஜனத் தொகை. அதில் ஏற்படும் சம்பவங்கள் ஆசியா முழுவதையும் பாதிக்கக் கூடியவை. அவருடைய லட்சியம் எவ்வளவு உன்னதமானது என்பதைக் கவனியுங்கள். தம் நாட்டு மக்களுக்குச் சுதந்தரம் சம்பாதிக்க வேண்டும்; அவர்களுடைய வறுமை, அறியாமை இரண்டையும் களைய வேண்டும்; பெண்களுக்கு விடுதலை தேடவேண்டும்; தீண்டாத மக்களை விடுவித்துப் பாதுகாக்க வேண்டும். இந்த லட்சியங்களையெல்லாம் பலாத்காரம் பிரயோகிக்காமலே அடைய வேண்டும் என்று அவர் சலியாத உறுதியுடன் இருந்ததை நினைவு கூருங்கள். ஆயுதந்தாங்கிய புரட்சியிலோ யுத்தத்திலோ அவர் இறங்கவில்லை; ஆத்ம த்யாகம் என்ற ஆயுதத்தைக் கொண்டே அவர் போரிட்டார். பிற்போக்கான வெறியன் ஒருவன் கையால் வீரமரணம் அடைவதற்கு முன்பு, அவர் எவ்வளவு ஆச்சரியமான காரியங்களைச் சாதித்து விட்டார் என்பதைக் கணித்துப் பாருங்கள்.

இந்த அம்சங்கள் எல்லாவற்றையும் ஒன்று கூட்டிக் கவனித்து மதிப்பிடுங்கள். பிறகு, காந்தியைவிடப் பெரியவர் நம் காலத்திலே யார் உண்டு என்று தேடிப் பாருங்கள். வருங்காலச் சந்ததிகள் வணங்கிப் போற்றக் கூடிய பெருமை, அவரைவிட நம் காலத்தைச் சேர்ந்த வேறு யாருக்கு உண்டு?

—லார்டு ஸாமுவேல். (பி. பி. ஸி. பேச்சு.)

கிருஷ்ணதேவ ராயர்

விக்டர் ஹரி

தென்னாடு முழுவதற்குமே
பெருமை தேடித் தந்தவர்
இந்தப் பழைய வீரர்.

இன்று தாழ்மையுற்றிருக்கும் மக்கள், தங்கள் பழம் பெருமைகளைப்பற்றி நினைப்பது இயல்பு. விஜயநகர ராஜ்யத்தின் தலைநகராக இருந்த ஹம்பியின் சிதைந்த பாகங்களை, ஹேமகூட பர்வதத்தின் மேலிருந்து, பார்க்கும் போது யாரும் கண் கலங்குவது சகஜம்.

செறிந்து வளர்ந்து கிடக்கும் காட்டுப் புதர்களுக்கிடையே சிற்பங்கள் நிறைந்த கோவில்களும் அரண்மனைகளும் கடை வீதிகளும் மாளிகைகளும், அழிந்துபோன விஜயநகர சாம்ராஜ்யத்தின் நாகரிகத்துக்கு அறிகுறியாக இன்றும் திகழ்கின்றன. விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் யார், அது எப்படித் தோன்றிற்று என்பவை போன்ற வரலாறுகள் இன்னும் நமக்குச் சரியாகத் தெரியவில்லை. இதைப்பற்றிச் சரித்திர ஆசிரியர்கள்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். எது எப்படி இருந்த போதிலும், கிருஷ்ணதேவ ராயரின் ஆட்சியின்போதுதான் அந்தச் சாம்ராஜ்யம் பல வகையிலும் சிறப்புடன் விளங்கியது; நாடு முழுவதும் சுபிட்சம் நிரம்பி இருந்தது. விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆண்ட மூன்றாவது வம்ச மன்னர்களில் சிறந்தவர் கிருஷ்ணதேவ ராயர்.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் ஆட்சி செலுத்தி வந்த ஹிந்து மன்னர்களுக்கிடையே ஒற்றுமை சிறிதும் இல்லை. இதனால் முஸ்லிம்கள் தென் இந்தியாவின்மேல் படையெடுத்து எளிதில் பல வெற்றிகள் பெற முடிந்தது. இந்த முஸ்லிம் படையெடுப்பைத் தடுக்கவே சுமார் கி. பி. 1336-இல் விஜயநகர ராஜ்யம் தோன்றியது. கிருஷ்ணதேவராயர் பதவிக்கு வந்தபோது ராஜ்யத்தின் நிலைமை சிறிது மோசமாக இருந்தது.

1509-இல் கிருஷ்ணதேவ ராயர் விஜயநகர மன்னரானார். அப்போது அவருக்கு வயது 20. அவர் காலத்தில் வாழ்ந்த சில இந்தி

ப்ளிட்ஸ் (ஆங்கிலம்: 20-10-'51), பம்பாய்.

யரும் டொமிங்கோ பேஸ் போன்ற வெளிநாட்டு யாத்திரிகர்களும் அவரைப்பற்றிப் பல விவரங்களை எழுதியிருக்கிறார்கள். கிருஷ்ணதேவ ராயர் நல்ல தேகக் கட்டு வாய்ந்தவர். பாண்டவர்களில் ஒருவரான நகுலனைப்போல் குதிரை சவாரி செய்வதில் வல்லவர். குஸ்திச் சண்டையில் சமர்த்தர். விடிகாலையில் எழுந்து தேகப்பயிற்சி செய்வது கிருஷ்ணதேவ ராயரின் தினசரிக் கடமைகளில் ஒன்று. இதைப் பற்றி டொமிங்கோ பேஸ், "சூரியோதயத்துக்கு முன்பே மன்னர் எழுந்துவிடுவார். நிறைய நல்லெண்ணெயைக் குடிப்பார்; தேகம் முழுவதும் நன்றாகத் தடவிக் கொள்வார். பிறகு மிகுந்த பாரமுள்ள பொருள்களைத் தூக்கித் தோள்மேல் நெடுநேரம் வைத்துக் கொள்வார். இதன் பின்னர் கத்தியை எடுத்துக்கொண்டு, தம் உடம்பில் உள்ள எண்ணெய் முழுவதும் வறண்டு போகும்வரையில் பயிற்சி செய்வார். கத்திச் சண்டைப் பயிற்சி முடிந்ததும் தம் அரண்மனைக் குள்திப் பயில்வானுடன் குஸ்தி பிடிப்பார். இவையெல்லாம் முடிந்த பிறகு சூரியன் உதயமாகும் வரையில் தம் குதிரையில் வெகு வேகமாக இங்கும் அங்கும் சவாரி செய்வார்" என்று எழுதியிருக்கிறார்.

விஜயநகர சாம்ராஜ்யம் மிகவும் விஸ்தீரணமுள்ளது. இதன் பல பகுதிகள் மிகுந்த அதிகாரம் பெற்ற ராஜப்பிரதிநிதிகளின் ஆட்சியின் கீழ் இருக்க நேரிட்டது. இந்த ராஜப்பிரதிநிதிகளின் விசுவாசத்தைப் பொறுத்துத்தான் சாம்ராஜ்யம் வெளிநாட்டுப் படையெடுப்பைச் சமாளிக்க வேண்டும். இதை இளவயதிலேயே உணர்ந்த கிருஷ்ணதேவ ராயர் பதவிக்கு வந்ததும் திறமை மிக்க சிறிய படையொன்றுடன் தம் ராஜ்யம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். கிளர்ச்சி செய்து வந்த சில ராஜப்பிரதிநிதிகளைப் பணிய வைத்தார். உள்நாட்டு நிலைமையை ஒருவிதக் கட்டுபாட்டுக்குக் கொண்டு வந்தபின் ராஜ்யத்தின் எல்லைப் பிரதேசங்களைக் கவனித்தார். விஜயநகர ராஜ்யத்தை ஒட்டி இருந்த தக்காண முஸ்லிம் ராஜ்யங்களின் எல்லையில் தம் படைகளை நிறுத்தி வைத்தார்.

ஒரிஸ்ஸா மன்னனான பிரதாபருத்திரன், விஜயநகர சாம்ராஜ்யத்தின் செழிப்பான பிரதேசம் ஒன்றைத் தன் ராஜ்யத்துடன் இணைத்துக்கொண்டான். அதை மீட்பதற்காகக் கிருஷ்ணதேவ ராயர் நடத்திய போர் மிகப் பிரசித்தமானது. 1513-இல் விஜயநகரப் படைகள் ஒரிஸ்ஸாவின்மேல் படையெடுத்தன. எதிரியின் கோட்டைகளில் சிறந்த உதயகிரி, விஜயநகரப் படைகள் வசம் சிக்கியது. இரண்டு வருஷங்கள் வரைக்கும் போர் நீடித்தது. கடைசியில் கிருஷ்ணதேவ ராயருடன் பிரதாபருத்திரன் சமாதானம் செய்துகொண்டான். கொண்டவீடு என்பதைப் போன்ற பல முக்கியமான கோட்டைகள் கிருஷ்ணதேவ ராயருக்குக் கிடைத்தன.

கிருஷ்ணதேவ ராயரின் மனோதைரியம், பிறரை ஆகர்ஷிக்கும் சக்தி, போர் புரியும் ஆற்றல் இவைகளைப்பற்றிப் பெர்னவோ நூனிஸ் என்னும் போர்த்துக்கீசிய யாத்திரிகர் எழுதியிருக்கிறார். கிருஷ்ணதேவ ராயர் நடத்திய சரித்திரப் பிரசித்தி பெற்ற ராய்ச்சூர்ச் சண்

டையைப்பற்றி இவர் வெகு விரிவாக எழுதியிருக்கிறார்.

விஜயநகர ராஜ்யத்தின் எல்லையில் தோவாப் என்ற ஒரு பிரதேசம் சம்பந்தமாக முஸ்லிம் ராஜ்யங்களுக்கும் விஜயநகர ராஜ்யத்துக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவது உண்டு. ஒரு சமயம் இந்தப் பிரதேசம் விஜயநகர ராஜ்யத்தின் ஆதிக்கத்தில் இருக்கும்; மறு சமயம் முகம்மதிய சுல்தான்கள் வசம் சென்றுவிடும். கிருஷ்ணதேவ ராயர் மன்னரானதும் இந்தப் பிரதேசத்தை விஜயநகர ராஜ்யத்துடன் சேர்த்துவிடுவதென்று தீர்மானித்தார். பெரிய படையொன்றைத் திரட்டி ராய்ச்சூர் என்னுமிடத்தில் பிஜாபூர் சுல்தானுடன் போரிட்டார். முதலில் பிஜாபூர் சுல்தானின் குதிரைப் படை விஜயநகரப் படைகளைக் கலக்கிவிட்டது. தம் படைகள் அதை எதிர்க்க முடியவில்லை என்று உணர்ந்த கிருஷ்ணதேவ ராயர் தாமே குதிரையில் ஏறி வீரர்களை உற்சாகப்படுத்தினர். இதனால் விஜயநகர வீரர்கள் கடுமையாகச் சண்டை செய்தார்கள். இதைச் சமாளிக்க முடியாமல் பிஜாபூர் படைவீரர்கள் பயந்து பின்வாங்கினர்கள். உயிர் தப்புவதற்காகக் கிருஷ்ணா நதியைத் தாண்டி ஓடவும் முயன்றார்கள். அவ்வளவு பேரையும் கிருஷ்ணதேவ ராயர் அழித்திருக்க முடியும். ஆனால் தம் சேனைத் தலைவர்களின் ஆலோசனையைக்கூடப் புறக்கணித்து, "முஸ்லிம் வீரர்களைத் துரத்திச் செல்ல வேண்டாம்" என்று தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டார். கருணைமிக்க கிருஷ்ணதேவ ராயரின் இந்தச் செயலால் ஏராளமான முஸ்லிம் வீரர்கள் உயிர் தப்பினர்கள்.

கிருஷ்ணதேவ ராயர் நடத்திய போர்களில் எல்லாம் வெற்றியே பெற்றார். வடக்கே ராய்ச்சூரிலிருந்து தெற்கே கிருஷ்ணா நதியின் தொடக்கம் வரை மலையாளக் கரையைத் தவிரத் தென் இந்தியாவின் மற்றப் பாகம் முழுவதிலும் இவர் ஆட்சி பரவி இருந்தது.

போர்வலிமையால் மட்டும் கிருஷ்ணதேவ ராயர் கீர்த்தி பெறவில்லை. இவர் ஆட்சியில்தான் விஜயநகர சாம்ராஜ்யத்தில் இலக்கியம், சிற்பம், சங்கீதம் முதலிய பல கலைகளும் மறுமலர்ச்சி பெற்றிருந்தன. நாடு செழிப்புற்று மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

கிருஷ்ணதேவ ராயர் சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அற்புதமாகக் கவிதைகள் இயற்றுவார். தெலுங்கு, சம்ஸ்கிருதம், கன்னடம், தமிழ் ஆகிய பாஷைகள் கிருஷ்ணதேவ ராயரின் ஆதரவு பெற்று நன்கு வளர்ந்தன. வாழ்க்கையை ஒட்டிய சித்திரங்களைப் பல ஓவியர்கள் தீட்டினர்கள். இங்கிலாந்தில் விக்டோரியா ராணியின் காலத்திலும் இன்றைய ருஷியாவிலும் இதைப் போன்ற முறையில்தான் சித்திரங்கள் தீட்டியிருக்கிறார்கள். நாடு நல்ல சுபிட்ச நிலையில் இருக்கும்போதுதான் இந்த மாதிரி ஓவியக்கலை மேம்பாடடையும்.

இவர் காலத்தில் கட்டிடக் கலையும் உன்னத நிலையைப் பெற்றது. கிருஷ்ணதேவ ராயருக்குச் சங்கீதத்தில் மிகுந்த பிரியம். நன்றாகப் பாடுவார். எனவே, சங்கீதமும் இவர் ஆட்சியில் நல்ல நிலையைப் பெற்றது. இவர் ஆட்சியின்போது விஜயநகரத்தில் நாடகங்களை அரங்கேற்றுவதற்கான அரங்கம் ஒன்றும் இருந்தது. நாடகங்களைப் பார்க்க ஏராளமான

மக்கள் கூடுவார்கள். கிருஷ்ண தேவ ராயரும் சில நாடகங்களை எழுதி இந்த அரங்கங்களில் நடிக்கச் செய்திருக்கிறார்.

கிருஷ்ணதேவ ராயர் நடனக் கலையையும் நன்றாக ஆதரித்தார். பிரம்மீசுவரர் கோவிலில் இருந்த நட்டுவனார் ஒருவருக்கு இவர் இரண்டு கிராமங்களை மானியமாகத் தந்தார். "நாட்டியம் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அங்கே அரச குலத்தைச் சேர்ந்த பெண்களும் நாட்டியம் கற்றார்கள்" என்று பேஸ் எழுதியிருக்கிறார்.

இந்தியர்களும் வெளிநாட்டினரும் ஒருங்கே கிருஷ்ணதேவ ராயரைப் பாராட்டுகிறார்கள். இன்று தமிழர்களும் தெலுங்கர்களும் அவர் தங்களைச் சேர்ந்தவர்தான் என்று சொல்லி ஒருவரோடு ஒருவர் போட்டியிடுகிறார்கள். தென் இந்தியாவுக்கே பெரும் புகழைத் தந்தார் கிருஷ்ணதேவ ராயர்.

இவர் இறந்து 40 வருஷங்களுக்குள்ளாகவே தலைக்கோட்டையில் (1565-இல்) பாமினி சுல்தான்களுக்கும் விஜயநகர மன்னர்களுக்கும் சண்டை ஒன்று நடந்தது. இதில் விஜயநகரப் படை தோல்வியடைந்தது. அதோடு அந்தச் சாம்ராஜ்யமும் அழிந்தது.

தமிழில் பேசி நிறவெறியை முறியடித்த இந்தியர்!

அமெரிக்காவில் ஜியார்ஜியா மாகாணத்தில் வேற்றுமை அதிகமாகப் பாராட்டுவார்கள். ஐ. நா. பொதுச்சபைக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்ற 'ஹிதவாதா' பத்திரிகை ஆசிரியர் ஏ. டி. மணி அந்த மாகாணத்திலுள்ள அட்லாண்டா நகருக்குப் போயிருந்தார். அப்போது தமக்கு ஏற்பட்ட அநுபவத்தைப் பற்றி அவரே எழுதியிருக்கிறார்.

"வெள்ளையர் ஹோட்டல்களில் கறுப்பர்களை அநுமதிக்க மாட்டார்களென்று முன்னாலேயே எனக்குச் சிலபேர் எச்சரிக்கை செய்திருந்தார்கள்.

"அட்லாண்டா நகருக்கு மாலைநேரத்தில் நான் போய்ச் சேர்ந்தேன். எந்த ஹோட்டலுக்குச் சென்றாலும், 'வெள்ளையருக்கு மட்டும்' என்ற போர்டு வெளியே தொங்கவிட்டிருப்பதைக் கண்டேன். ஆகவே, அன்று இரவு பட்டினி கிடக்க நேரிட்டது.

"பசிக்கொடுமையால் என் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஒரு வழி கண்டுபிடித்தேன். மறுநாள் காலை வெள்ளையர் ஹோட்டலுக்குள் தைரியமாக நுழைந்தேன். 'எனக்கு ஏதாவது சாப்பிடத் தாருங்கள்' என்று தமிழில் கேட்டேன்.

நான் சொன்னது எவருக்குமே புரியவில்லை. ஆகவே, என்னை அயல் தேசக்காரர் என்று தெரிந்துகொண்டார்கள். என்னை வெளியே போகச் சொல்லாமல் எனக்கு வேண்டிய உணவைப் பரிமாறினார்கள். அந்த நகரில் அந்த ஹோட்டலிலேயே தங்கினேன்.

கொடி

மூலம்: கே. ஏ. அப்பாஸ்

மொழிபெயர்ப்பு: கே. கணேஷ்

ஆங்கிலத்தில் சிறுகதைகளும் அரசியல் கட்டுரைகளும் எழுதிப் பிரபலம் பெற்ற மிகச் சில முற்போக்கு எழுத்தாளர்களுள் ஒருவர் அப்பாஸ். ஏழை மக்களின் துயரத்தைப் பிரத்தியட்ச வாழ்க்கையில் காண்பதை ஒட்டி அப்படியே சித்திரிப்பதில் வல்லவர்.

"எஜமான், நீங்கள் ரொம்ப நாள் வாழணும். கடவுள் உங்களை லட்சாதிபதிபாக ஆக்கணும், எஜமான்! என் மனைவிக்கும் மகளுக்கும் உரிய பங்கையும் கொடுத்தால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. அவர்களும் உங்களை எப்பொழுதும் வாழ்த்திக் கொண்டிருப்பார்களே, எஜமான்!"

"போடா, புளுகுணிப் பயலே! உனக்குப் பெண்டாட்டியும் பிள்ளையும் இருந்தால், அவர்களே இங்கே வந்து தங்கள் பங்கை வாங்கிச் செல்வதற்கென்ன?"

ராமு ஒரு மானி. அவன் தனக்குக் கிடைத்த தன்னுடைய பங்கான நான்கு பூரிகளையும் இரண்டு லட்டுகளையும் வாங்கிக்கொண்டு திரும்பினான். தன் மனைவியும் மகளும் உடுக்க உடை இல்லாததால் கந்தலை உடுத்து உடலை அரைகுறையாக மறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது; அதனால் தான் மட்டுமே வர முடிந்தது என்பதை அவன் அவர்களிடம் கூறவில்லை. இந்த மூன்று பேருக்கும் உள்ளது ஒரே துணிதான். அதையும், வேலை தேடுவதற்காக வெளியே கிளம்பும்பொழுது அவன் தானே உடுத்துக்கொள்வான். பல மாதங்களுக்கு முன்னால் ஒரு சம்பள தினத்தன்று, தன் மனைவிக்கும் மகளுக்கும் எப்படியாவது ரூபாய் பத்து ஆனாலும் ஒரு ஜோடி துணி வாங்கிவிடுவது என்று உறுதி கொண்டு டில்லி முழுவதும் சுற்றியது ஞாபகம் வந்தது. ஆயினும், ஒரு துணி இருபது ரூபாய்க்குக் கிடைப்பதே கஷ்டமாக இருந்தது. சாந்த்னி சவுக்கிலுள்ள சின்னக் கடைகள், பெரிய கடைகள் என்ற எல்லாக் கடைகளையும் சுற்றியும் அவனுக்குக் கிடைத்த ஒரே பதில் "துணி ஸ்டாக் கிடையாது" என்பதுதான். ஆனால், ஒரு கடையில் மட்டும் ஒரு வியாபாரி காதோடு காதாக, "உனக்கு அவசியமாகத் தேவையானால் ஒரு ஜோடி வாங்கித் தருகிறேன். அது ஐம்பது ரூபாய் ஆகும்' என்றான். ஐம்பது ரூபாய்! ஆனால் அவன் காலை முதல் மாலை வரை ஒரு மாதம் செங்கல் சுமந்து சம்பாதித்தது இருபத்தைந்து ரூபாய்க்கு ஐம்பது ரூபாய்களுக்கு அவன் எங்கே போவது?

அதற்கப்புறம் அவனுக்கு வேலையும் போய்விட்டது. அமெரிக்க

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்) சென்னை.

ராணுவஸ்தர்களுக்குக் கட்டிடம் கட்டும் வேலையில்தான் அவன் ஈடுபட்டிருந்தான். அந்த அமெரிக்கர்களும் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிப் போய்விட்டதால் அந்த வேலையும் நின்றுவிட்டது. அவர்களுக்காக அவசரம் அவசரமாகக் கட்டிய கட்டிடங்களையும் தகர்த்தாயிற்று. கட்டிடச் சாமான்கள்மீது கடுமையான கட்டுப்பாடு இருந்ததால் பட்டணத்திலுள்ள தனிப்பட்ட நபர்களும் கட்டிடங்கள் எழுப்பவில்லை. கடந்த பல மாதங்களாக ராமு வேலையில்லாதிருந்தான். வேலைக்காகத் தெருத் தெருவாக அலைந்தான். ஆனால் வேலை மட்டும் கிட்டவில்லை. பஞ்சாபிலிருந்து அகதிகள் வந்து கூடிய பிறகு, வாழ்க்கை அவனுக்கு இன்னும் மோசமாகிவிட்டது. இரண்டு நாளாக அவனோ, அவன் மனைவியோ, மகளோ ஒரு கவளம் உணவாவது உண்ணவில்லை. தெருவிலே பிச்சை எடுப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழி இல்லை. ஆம், கௌரவமுள்ள தச்சனை ராமு பிச்சை எடுத்துத்தான் ஆக வேண்டும். என், செய்தால் என்ன? அகதிகளில் பல பெரிய மனுஷர்கள் கூட இப்படி வாழவில்லையா?

அன்று காலை தன்னுடைய புதுத் தொழிலான பிச்சைத் தொழிலைத் தொடங்குவது என்று திடங்கொண்டு எழுந்தான் ராமு. ஆனால் பகவானின் கிருபையால் அவன் மானம் தப்பியது. சாரக்கீனும், மசிதாவும் விடியற்காலையே அவனைத் தேடி வந்து சேட் குல்ஜாரிலால் பூரிகளும் லட்டுகளும் விநியோகிக்கும் சந்தோஷச் செய்தியைச் சொன்னார்கள். தேசத்துக்குச் 'சுதந்தரம்' கொடுத்திருப்பதாகவும், பெரிய பெரிய தலைவர்களின் நண்பரான சேட் அந்தச் சந்தர்ப்பத்தைக் கொண்டாடுவதற்காக ஏழைகளுக்கு உணவு அளிப்பதாகவும் கேள்விப்பட்டான். இந்த விசேஷ நாளை முன்னிட்டு ரேஷன் கட்டுப்பாடுகளைக்கூடத் தளர்த்திவிட்டார்கள் எல்லாருக்கும் தலைக்கு நான்கு பூரிகளும் இரண்டு லட்டுகளும் கிடைத்தன. இரண்டு நாளாகப் பட்டினி கிடந்த மூன்று ஆத்மாக்களுக்கு இது எம்மாத்திரம்? தன்னுடைய மனைவி, மகள் ஆகியவர்களுடைய பங்கும் கிடைத்தால் நல்லது; ஆனால் அவர்கள் நேரில் வந்தாலொழிய அதெல்லாம் கிடைக்காது. உடலை மூடித் தங்கள் மானத்தைக் காக்கத் துணியே இல்லாதிருக்கும்போது அவர்கள் தங்கள் குடிசையைவிட்டு எப்படித்தான் கிளம்புவது? பகவான் அவர்களுக்குச் சில கஜம் துணிக்குக் கிருபை செய்தால்...?

அந்தச் சமயத்தில் பகவானும் அபூர்வமாகக் கிருபை புரிந்தார். ராமு கன்னட் பிளேஸின் நடைபாதைக்குக் குறுக்கே செல்லும்பொழுது சிவப்பு, வெள்ளை, பச்சைக் கோடிட்டு மத்தியில் நீல நிறச் சக்கரம் பொறித்த ஒரு துணியைக் கிருபாமூர்த்தி அவனுக்கு அளித்தார். ஆகாயத்திலே அது பறந்து வந்து நேரே ராமுவின் தலைக்கு மேல் விழுந்தது. மேலே அவன் நோக்கியபொழுது அதே போன்ற பல துணிகள் மாடிமீது காற்றிலே அசைந்தாடிக்கொண்டும், தூண்களில் சுற்றியும் கிடந்தன. கடைகளுக்கும் ஹோட்டல்களுக்கும் முன் அதே மாதிரி சில துணிகள் தொங்கிக்கொண்டிருந்தன. கிடைக்கும் எந்தப் பொருளையும், அதுவும் பகவானின் பரிசை - யார்தான் வேண்டாமென்பார்கள்!

கூட்டத்தில் ஒருவராவது இதைக் கவனிக்கவில்லை. ராமு அவசர அவசரமாக இந்தச் சிவப்பு, வெள்ளை, பச்சை நிறங்கொண்ட துணியை மடித்து வேட்டியில் மறைவாகச் செருகி வீட்டுக்கு எடுத்துச் சென்ருன். இனிமேல் அவன் மனைவியும் மகளும் தங்கள் பங்கான பூரிகளையும் லட்டுகளையும் சேட் எஜமான் வீட்டுச்குப் போய் வாங்கி வரலாமல்லவா?

முன் அவள் சேலையாக உபயோகித்த தன் வேஷ்டியை அவளுக்குக் கொடுத்தான். அவளோ தான் உடுத்திருந்த கந்தலைத் தன் மகளின் யௌவன உடலை அரைகுறையாக மூடிக்கொள்ளக் கொடுத்தாள். அவன் சிவப்பு, வெள்ளை, பச்சை கலந்த அந்தத் துணியை இடையில் சுற்றிக்கொண்டான். அவனுடைய பகட்டுத்தோற்றத்தைக் கண்ட மனைவிக்குச் சிரிப்பு வந்தது. பல நாட்களுக்குப் பிறகு அவள் சிரிப்பதைக் காண அவனுக்கும் மகிழ்ச்சி. இப்படி அவர்கள் சேட்டின் மாளிகையை நோக்கிச் சென்ருர்கள். அங்கே இன்னும் சிலர் தங்கள் பங்கைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். பூரி சில்விட்டும் லட்டு உதிர்ந்து பொடியாகியுங்கூட ராமுவின் குடும்பத்தாருக்கு அவை பெருவிருந்தாக இருந்தன. நிம்மதியுடன் அவர்கள் வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

மீண்டும் அவர்கள் கன்ணுட் பிளேஸ் வழியாகச் செல்லும் பொழுது ஒரு கடைக்காரன் ராமுவை நோக்கிக் கூவினன்.

"டேய் பயலே, இந்தக் கொடியை எங்கே திருடினய்?"

"கொடியா? கொடிகளைப்பற்றி எனக்கு என்ன தெரியும்?"

"ஓகோ, கொடியைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதோ? உன் இடையில் சுற்றியிருப்பது என்னவாம்?"

"ஓ இதுவா!..."—ராமுவுக்குத் திடீரென்று பயம் தோன்றவே, அவனல் பேச முடியவில்லை. அவனைச் சுற்றிக் கூடிய கூட்டத்தோடு இன்னும்பல பேர் கூடினர்கள்.

"அடே! இது நம் கடையில் இருந்த கொடியாகத்தான் இருக்க வேண்டும். மணிக்கணக்காக நாங்கள் இதைத் தேடிக்கொண்டிருக்கிருேமே!"

"இந்தத் திருட்டுப் பயலைப் பாருங்கடா—பெரிய கௌரவமாகக் கொடியை உடுத்துக்கொண்டு திரிகிருனே!"

"அந்த அயோக்கியப் பயலிடமிருந்து அதைப் பிடுங்குங்கள்."

"திருடனை நன்ருக உதையுங்கள்!"

"போலீஸ்காரனைக் கூப்பிடு."

"போலீஸ்கார ஐயா, இங்கே வாருங்கள். உங்களுக்கு இதோ நல்ல வேட்டை!"

ராமுவின் மனைவி கூச்சலிட்டாள். மகள் தன் தகப்பனின் அவமானத்தைக் காண விரும்பாமல் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

"ஹஹ்ஹஹ்!! ஹா!!! ஹி! ஹிஹ்!!ஹீ!!!—" கூட்டத்தினரின் சிரிப்போசை ராமுவின் நிர்வாண உடலில் கூரிய கற்களை வீசியது போல் அவன் காதில் தாக்கியது. தன் காலடிக்குக் கீழுள்ள பூமி பிளந்து தன்னையும் தன் மானத்தையும் விழுங்கினல் தேவலையே என்று எண்ணினன்.

மற்றவர்களைவிடச் சிறிது மனிதத் தன்மை கொண்ட ஒரு

வழிப்போக்கன் தன்னுடைய மேல் துண்டை ராமுவுக்கு அளித்தான். முடிவில் ஒருவகையாகத் தன்மேல் பாய்ந்தவர்களை நோக்கித் தலை நிமிர அவனால் முடிந்தது. அவன் கண்களில் நீர் துளித்தது. தன்னைக் கைது செய்வதையோ, அல்லது தன் கைகளில் விலங்கிடுவதையோ அவன் லட்சியம் செய்யவில்லை. எப்படியாவது இந்த மானங்கெட்ட நிலைமையிலிருந்து அப்புறப்படுத்தினால் போதுமென்று எண்ணினான்.

"அந்த அயோக்கியக் கொடித் திருடன் பிடிபட்டான்!"

"ஏன்? அவன் என்ன செய்தான்?—"

கூட்டத்தினர் பின் தொடர ராமுவை இழுத்துச் சென்ற போலீஸ்காரனை நோக்கி விஷயம் அறியாத ஒரு புதியவன் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

கிரிமினல் சட்ட ஞானத்தில் தேர்ந்தவன் ஒருவன் அவனுக்குப் பதில் கூறினான்.

"அவன் ஒரு குற்றமல்ல, மூன்று குற்றங்கள் செய்திருக்கிறான்."

"மூன்று குற்றங்களா? அவை என்ன என்ன!"

"முதலாவது குற்றம் - திருட்டு."

"இரண்டாவது?"

"தேசியக் கொடியை அவமதித்தது."

"மூன்றாவது?"

"பொதுஜன நடைபாதையில் நிர்வாணமாக இருந்தது: அதுவும் சட்ட விரோதம், தெரியுமா?"

மேலே நூற்றுக்கணக்கான கொடிகள் இந்த விசித்திர சம்பவத்தைக் கண்டு சந்தோஷமில்லாமலே வறட்டுப் புன்னகை புரிவதைப்போல் காற்றிலே தவழ்ந்து ஆடிக்கொண்டிருந்தன.

எல்லாரும் ஒன்று?

தம் பாட்டியான விக்டோரியா ராணியைப்பற்றி விண்ட்ஸர் டியூக்குக்கு மகா உன்னதமான மதிப்பு. 'ராணி என்றால் அவள்தான் ராணி' என்று குழந்தை முதலே அவர் மனத்தில் அபிப்பிராயம் விழுந்திருந்தது.

அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, வாத்தியாரை ஒரு நாள், "சொர்க்கத்தில் ஜனங்கள் எப்படி வாழ்கிறார்கள்?" என்று அவர் கேட்டார்.

"சொர்க்கத்தில் எல்லாரும் சமம்."

"எல்லாருமா?"

"ஆமாம்."

"எங்கள் பாட்டிகூடவா?"

"அவளும் மற்றவர் மாதிரியேதான் இருப்பாள்; சந்தேகம் இல்லாமல்."

"ஓஹோ! அப்படியா? அது எங்கள் பாட்டிக்குத் துளிகூடப் பிடிக்காதே; அவள் கஷ்டப்படுவாளே!" என்று பெருமூச்சு விட்டார் இன்று விண்ட்ஸர் டியூக் ஆக இருக்கும் எட்வர்டு.

—'மகளிர் டைஜெஸ்ட்'

கோபாலகிருஷ்ண பாரதியார்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை தமிழ் இசைப் பாடல்களில் இணையற்ற ஸ்தானத்தை வகிக்கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் அந்தக் கீர்த்தனையை விரும்பிப் படிக்கிறார்கள். பக்தர்களும், பஜனைக் கோஷ்டியினரும், கதை செய்பவர்களும், கச்சேரி செய்கிறவர்களும், நடனமாடுபவர்களும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனங்களை உபயோகிக்கிறார்கள். இந்த அற்புதமான இசைநூலை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியாரின் சரித்திரத்தை ஸ்ரீ ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் பாரதியாரிடம் நேரில் பழகிச் சில காலம் சிட்சை சொல்லிக்கொண்டவர்கள். பல அழகிய சம்பவங்களின் கோவையாக இந்த வரலாறு இருக்கிறது.

காப்பிரைட்: மானேஜர், தியாகராஜ விலாசம், பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி. விலை அணா 12.

கோபாலகிருஷ்ண பாரதியார்

கோபாலகிருஷ்ண பாரதியார் ஏறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு, நாகபட்டினத்துக்கு அருகிலுள்ள நரிமணம் என்னும் ஊரிலே பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் ராமசுவாமி பாரதியென்பது. இவர் அந்தண வருணத்தில் வடமர் என்னும் வகுப்பினர். இவருடைய முன்னோர்கள் சங்கீதப் பயிற்சி உடையவர்கள்.

இளமையில் இவர் வடமொழியை முறையாகப் பயின்று காவிய நாடகங்களைக் கற்றார்; அன்றியும் அத்துவைத நூல்களிற் சிலவற்றையும் படித்தார். பிரமசரிய நெறி தவறாமல் ஒழுகி உச்சிக்காலத்தில் பிக்ஷாடனம் செய்து உண்டு வந்தார். அக்காலத்தில் மாயூரத்தில் கோவிந்த சிவமென்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவரிடம் வேதாந்த நூல்களையும் யோக சாஸ்திரங்களையும் இவர் பயின்றார்.

நல்லோர் இணக்கத்தாலும் சிவ பக்திப் பெருக்காலும் இவருக்கு இல்லற வாழ்வில் வெறுப்பு உண்டாயிற்று. அதனால் பிரமசாரியாகவே இருந்து காலங் கழிக்க வேண்டுமென்று இவர் தீர்மானம் செய்துகொண்டார்.

ஆனதாண்டவபுரத்தில் சில காலம் இருந்தார். அப்போது இவர் அடிக்கடி மாயூரஞ்சென்று அங்கேயுள்ள சங்கீத வித்துவான்களோடு பழகியும் அவர்களுடைய ஆதரவைப் பெற்றும் சிலகாலம் அங்கே இருந்து வந்தார். தமிழிலும் பாரதியாருக்கு ஒருவகையான பழக்கம் இருந்தது. கைவல்ய நவநீதம், பிரபோத சந்திரோதயம், தத்துவ ராயர் பாடுதுறை, தாயுமானவர் பாடல் முதலியவற்றைப் படித்தமையாலும் பல தமிழ்க் கீர்த்தனைகளைப் பாடிப் பாடிப் பழகியதனாலும் தமிழறிவு இவருக்கு விருத்தியுற்றது. கீர்த்தனைகளை ஆராய்ந்து அவற்றின் அமைப்பு முறையை அறிநதுகொண்டு தாமே புதிய கீர்த்தனங்களை இயற்றத் தொடங்கினார். அக்காலத்தில் திருவிடைமருதூரில் அமரசிம்ம மகாராஜாவால் ஆதரிக்கப்பெற்று ராமதாஸ் என்னும் ஒரு பெரிய சங்கீத வித்துவான் இருந்து வந்தார். அவர் இந்துஸ்தான மார்க்கத்திலே சிறந்த திறமையுடையவர். அவரைப்பற்றிக் கேள்வியுற்ற பாரதியார் அவரிடம் அந்த மார்க்கத்தைக் கற்றுக்கொள்ள விரும்பித் திருவிடைமருதூர் சென்று அவரை அடைந்து பணிந்து தொண்டு செய்து கற்றுக்கொள்ளலானார். அப்பெரியார் மனமுவந்து இவருக்கு இந்துஸ்தான மார்க்கத்தைக் கற்பித்தார். இவர் அவ்வகையிலுள்ள அருமையான முறைகளையும் சாகித்திய விசித்திரங்களையும் மகாராஷ்டிரம் முதலிய பாஷையிலுள்ள இசைப்பாட்டுக்களின் போக்கையும் உணர்ந்துகொண்டார்.

திருவிடைமருதூரில் சில வருஷங்கள் இருந்த பிறகு ஸ்ரீராமதாஸ் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் மாயூரத்திற்கு வந்து தங்குவாராயினர். நாளாக நாளாக இவருடைய சங்கீத சாகித்தியச் சிறப்பை யாவரும் மேன்மேலும் பாராட்டி வந்தார்

கள். இவரிடம் ஜனங்களுக்குள்ள நன்மதிப்பும் உயர்ந்து வந்தது. இவரை யாவரும் பாரதிகளென்றே வழங்கலாயினர்.

நாளடைவில் இவர் அத்துவைதக் கருத்துக்களடங்கிய பல கீர்த்தனங்களை இயற்றினர். அவற்றை மாயூரத்திலும் அதன் அருகிலும் உள்ள வித்துவான்களும் மற்றவர்களும் மனனஞ் செய்து பாடத் தொடங்கினர்கள். எங்கெங்கே வினிகைகள் நடக்குமோ அங்கங்கெல்லாம் இவருடைய கீர்த்தனங்களைப் பாடும்படி சபையினர் விரும்புவதும் பாடகர்கள் அவற்றைப் பாடுவதும் வழக்கமாயின.

திருவையாற்றில் அக்காலத்தில் இருந்த ஸ்ரீ தியாகையருடைய கீர்த்தனங்களும் அவருடைய ராம பக்தியின் சிறப்பும் எங்கும் பரவியிருந்தலை இவர் பலரால் அறிந்து வந்தார். அப்பெரியாரை எவ்வாறேனும் தரிசித்து வரவேண்டுமென்று இவர் எண்ணினர். அதனல் ஒரு நாள் இவர் திருவையாறு சென்று ஸ்ரீ தியாகையரை அவர் வீட்டிலேயே தரிசித்தார். அவர் இவரை முன்பு பாராதவராதலால் இவரை நோக்கியவுடன், "எந்த ஊர்?" என்று விசாரித்தார். இவர், "தாஸன் மாயூரம்" என்ருர்.

தியாகையர்: அங்கே கோபால கிருஷ்ண பாரதியாரென்ற ஒரு சங்கீத வித்துவான் இருக்கிருராமே; தெரியுமா? அவர் சௌக்கியமாக இருக்கிருரா?

பாரதியார்: தாஸன் தான்.

இங்ஙனம் பணிவுடன் இவர் கூறியதைக் கேட்ட ஸ்ரீ தியாகையர் இவருடைய அடக்கத்தை யறிந்து மிகவும் வியப்புற்ருர். அப்பொழுது அங்கே அவருடைய மாணக்கர்கள், ஆபோகி யென்னும் இராகத்தில் அவர் இயற்றிய ஒரு கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அதனைப் பாடி முடித்த பிறகு ஸ்ரீ தியாகையர் பாரதியாரை நோக்கி, "நீங்கள் இந்த ராகத்தில் ஏதேனும் கீர்த்தனம் செய்திருக்கிறீர்களா?" என்று வினவினர். இவர் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாக இருந்தார். பின்பு மாணக்கர்கள் வேறு பல கீர்த்தனங்களைப் பாடினர்கள்.

அன்று மாலையில் பாரதியார் ஸ்ரீ தியாகையரிடம் விடை பெற்றுக்கொண்டு ஆலயஞ் சென்று ஸ்ரீ பிரணதார்த்திஹரரையும் ஸ்ரீ தருமசம்வர்த்தினியையும் தரிசித்து இன்புற்ருர். தியாகையர் ஆபோகியில் ஏதாவது கீர்த்தனம் செய்ததுண்டாவென்று வினவியது இவருடைய மனத்திலேயே இருந்து வந்தது. ஆதலின் தியாகையர் வீட்டில் அவர் மாணக்கர்கள் பாடிய கீர்த்தனத்தை அடியொற்றி இவர் அன்றிரவே ஒரு கீர்த்தனத்தை இயற்றி முடித்தார்.

மறுநாள் பாரதியார் ஸ்ரீ தியாகையருடைய வீடு சென்று பேசிக்கொண்டிருக்கையில், "தாஸன் இயற்றிய கீர்த்தனமொன்றை இப்பொழுது சொல்லிக் காட்டலாமா?" என்று விநயத்தோடு கேட்டார். "அப்படியே; நன்ருகச் சொல்லலாமே. முன்பு சிலர் உங்களுடைய கீர்த்தனங்களைப் பாடக் கேட்டிருக்கிறேன். ஆயினும் உங்களுடைய கீர்த்தனத்தை நீங்களே பாடக்கேட்பது ஒரு விசேஷமல்லவா?" என்ருர்.

உடனே பாரதியார் தாம் புதிதாக இயற்றிய, "சபாபதிக்கு வேறு தெய்வம்" என்ற கீர்த்தனத்தைப் பாடிக் காட்டினர்.

அதைக் கேட்ட தியாகையர்,

"நேற்று நான் கேட்டபொழுது ஒன்றும் சொல்லவில்லையே!" என்றார். இவர், "இதற்கு முன் ஆபோகியில் ஒன்றும் செய்யவில்லை. நேற்று இங்கிருந்து போன பிறகு தான் ராத்திரி யோசித்துச் செய்தேன். எல்லாம் அவ்விடத்து ஆசீர்வாத விசேஷமே; குற்றமிருந்தால் க்ஷமிக்க வேண்டும்" என்றார். தியாகையர் இவருடைய சாகித்திய சக்தியையும், சங்கீத ஞானத்தையும், நடராஜ பக்தியையும் உணர்ந்து மகிழ்ந்து பாராட்டி ஆசீர்வாதம் செய்தனர்.

பாரதியார் அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் திவ்ய தரிசனம் செய்து சில கீர்த்தனங்களை இயற்றி அம்மூர்த்திக்குச் சூட்டி வருவார்; அப் பழக்கம் இவருக்கு வரவர அதிகரித்தது. சிதம்பரத்திலேயே இவர் சில மாதங்கள் தங்கியிருப்பதுண்டு.

சிதம்பரத்தில் இருக்குங் காலங்களில் இவர் ஆலயம் சென்று, பொன்னம்பலத்தக்குத் தெற்கேயுள்ளதும் கிழக்கு நோக்கி ஊர்த்துவ தாண்டவமூர்த்தி எழுந்தருளியிருப்பதுமாகிய நிருத்த சபையின் வெளி மண்டபத்தில் ஜபம் செய்வார்; சில சமயங்களில் அதன் தெற்குச் சுவரோரமாக உள்ள நந்தனார் உருவத்துக்கு அருகில் இருந்து பாடிக்கொண்டிருப்பார். நடராஜ மூர்த்திக்கு நேரே அம்மூர்த்தியைத் தரிசித்தவண்ணமாக அத் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வுருவத்தின் கையில் கடப்பாரையும் தோளில் மண்வெட்டியும் உள்ளன. பாரதியார் நந்தனாருடைய சிறந்த பக்தியை நினைந்து நினைந்து உருகுவதற்கு அந்த உருவம் ஒரு தூண்டுகோலாக இருந்தது. இவர் அடிக்கடி நந்தனாரைப்பற்றி வியந்து பாராட்டி உரைப்பார். ஒரு சமயம் இவர் அங்கிருந்து பாடிக்கொண்டிருந்தபோது உடனிருந்த அன்பர்கள் சிலர், "இந்தச் சந்நிதியிலேயே இருந்து தாம் தரிசனம் செய்ய வேண்டுமென்று நந்தனார் பிரார்த்திப்பதாக ஒரு கீர்த்தனம் இயற்றித் தரவேண்டும்" என்று வேண்டினார்கள். அவர்கள் விரும்பியபடியே இவர், "எந்நேரமும் உன்றன் சந்நிதியில் நான் இருக்கவேண்டுமையா" என்னும் பல்லவியையுடைய கீர்த்தனமொன்றை இயற்றினார். அக் கீர்த்தனம் ஆரபி ராகத்தில் அமைந்துள்ளது. இங்ஙனமே சில பெண்கள் விரும்பியபடி சிதம்பரக்கும்மி என்ற ஒன்றை இயற்றினார்.

நிராசையுள்ளவராதலின் பாரதியார் செல்வர்களிடத்தில் வலியச் சென்று பழகுவதில்லை. அதனால் இவர் அதிக சௌக்கியமான நிலையில் அக்காலத்தில் இருக்க இயலவில்லை. ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலில் வேலையாக இருந்தவர்களுடைய பரம்பரையிற் பிறந்தவராகிய இராமசாமி ஐயரென்னும் மாணாக்கர் இவரைத் தந்தையிலும் அதிகமாக மதித்துத் தொண்டு பூண்டு கவனித்து வந்தார்.

நாகபட்டினத்திலே கப்பல் வியாபாரியும் சிவபக்திச் செல்வருமாக இருந்த கந்தப்ப செட்டியாரென்னும் பிரபுவின் வீட்டுக் கல்யாணத்திற்கு அவர் விருப்பத்தின்படி ஒரு சமயம் இவர் போயிருந்தார். அங்கே சில தினம் இவர் சில சிவகதைகளைப் பிரசங்கம் செய்தார். பிறகு அப்பிரபு இவரிடம், "ஒரு நாயனார் சரித்திரத்தை நீங்கள் கீர்த்தன ரூபமாக இயற்ற வேண்டும்; இந்த விருப்பம் எனக்கு

நெடுநாளாக உண்டு; உங்களுடைய புகழைக் கேட்ட காலமுதல் இந்த எண்ணம் எனக்குத் தோன்றி வளர்ந்து வருகிறது; நீங்கள் இங்கே இப்பொழுது செய்து வரும் சிவகதைகளைக் கேட்ட பிறகு அந்த எண்ணம் பின்னும் அதிகரித்துள்ளது; உங்கள் திருவாக்கால் அப்படி ஒரு சரித்திரம் வெளிவருமாயின் என்னால் இயன்ற உதவியை நான் செய்கிறேன்; என்னுடைய நண்பர்கள் சிலரிடமும் சொல்லி அந்தச் சரித்திரத்தை எங்கும் பரவும்படி செய்வேன்; சிவபெருமானது புகழையும் சிவபக்தர்களுடைய சிறப்பையும் அறிந்த நீங்கள் சாதாரண ஜனங்களும் கேட்டு உருகும்வண்ணம் செய்யக் கூடுமென்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உறுதியாக இருக்கிறது" என்று வேண்டிக்கொண்டனர்.

வேறு பல சங்கீத வித்துவான்களும் பிரபுக்களும் இங்ஙனமே பல முறை தம்மை முன்னமே வேண்டிக் கொண்டதுண்டாதலால், பாரதியார் அவ்வாறே ஒரு நாயனார் சரித்திரத்தைக் கதை வடிவமாக விரைவில் இயற்றத் தொடங்க வேண்டுமென்று நிச்சயித்தார். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு ஒருவாறு தொடங்கிவிட்டால் பிறகு எளிதில் நிறைவேறுமென்ற நம்பிக்கை இவருக்கு உண்டாயிற்று. எந்தச் சரித்திரம் இயற்றலாம் என்ற யோசனை பிறகு தோன்றிற்று. சிதம்பரம் சென்ற காலங்களில் ஆலயத்தில் நந்தனார் பிம்பத்துக்கருகில் இருந்து சிவத்தியானாதிகள் செய்துவந்த பழக்கத்தால் இவருக்கு நந்தனாருடைய நினைவு வந்தது. அன்றியும், சிதம்பரத்தில் ஈடுபாடுடையவராதலின் ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பலவாறு துதிக்கத் தக்க சந்தர்ப்பங்களை உடையதாக அச்சரித்திரம் இருக்க வேண்டுமென்று எண்ணினார். 'சிதம்பரம் போகவேண்டும்' என்று ஒருமையுள்ளத்தோடு இருந்து, "நாளைப் போவேன். நாளைப்போவேன்" என்று எப்பொழுதும் மனமுருகிக் கூறிக்கொண்டே இருந்ததனால், 'திருநாளைப்போவார்' என்னும் காரணப்பெயரையடைந்த நந்தனாரது சரித்திரமே தம் மனோபாவங்களை விளக்குவதற்கு ஏற்றதென்று தெளிந்தார். ஒரு நல்ல நாள் பார்த்து இவர் தொடங்க எண்ணினார். அந்த நாளும் வந்தது.

அப்பொழுது சுந்சப்ப செட்டியார் இவர் இருந்த விடுதிக்குப் பலவகையான பழங்களை அனுப்பினார். கொணர்ந்த வேலைக்காரன் அப்பழங்களை இவர் முன்னே வைத்தான். இவர் அவற்றைப் பார்த்து, "இது நல்ல சுபசகுனம்" என்று மகிழ்ந்தார். இவர் மனத்தில் பழம் வந்தமை பதிந்தது; 'பழம் நம் மருங்கு அணையும்' என்று நினைந்தார்; அதையே தாம் இயற்றப் புகுந்த சரித்திரத்தின் தொடக்கமாக வைத்துக்கொண்டு 'பழனமருங்கணையும்' என்று தொடங்கினார்.

பாரதியார் நந்தனார் சரித்திரத்தைச் சுருக்கமாக மேற்கூறிய பழனமருங்கணையும் என்பதையே முதலாகக் கொண்ட ஒரு சிந்து வடிவத்தில் அமைத்தார். அந்தச் சிந்தை இயற்றியபின் பலர் கூடிய சபையில் பாடிக் காட்டினார். அதில் உள்ள சேரியின் இயற்கை வருணனை முதலியன கேட்டோரை மகிழ்வித்தன. அந்தச் சிந்தில் அமைத்த வரலாற்றையே விரித்துச் சரித்திரமாகச் செய்ய எண்ணி

யிருப்பதை அன்பர்களிடம் பாரதியார் வெளியிட்டார். கந்தப்ப செட்டியார் முதலியோர் தங்கள் விருப்பம் நிறைவேறும் சமயம் வந்துவிட்டதென்றெண்ணி அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

பாரதியார் சிலகாலம் நாகபட்டினத்திலேயே இருந்து முறையாக நந்தனர் சரித்திரத்தை இயற்றி வரலானர். அப்பொழுதப்பொழுது இயற்றிய பகுதிகளை அன்பர்களுக்குப் பாடிக் காட்டுவார். கேட்டவர்கள், "இச்சரித்திரம் நிறைவேறினல் தமிழ் நாடு முழுதும் ஒரு மலர்ச்சியை அடையும்" என்று எண்ணினர்கள். பாரதியார் நாகபட்டினத்திலுள்ள அன்பர்களிடம் தாம் மாயூரம் சென்று சரித்திரம் முழுவதையும் இயற்றி முடித்துக் கொண்டு வருவதாகக் கூறி விடை பெற்றுக்கொண்டார். கந்தப்ப செட்டியார் தக்க பொருளுதவி புரிந்து, "நீங்கள் இந்தச் சரித்திரத்தை இயற்றத் தொடங்கியது சிவபக்தர்கள் செய்த தவப்பயனென்றே சொல்லவேண்டும்; ஸ்ரீ சிதம்பர சபாநாயகர் திருவருள் நிரம்ப வாய்க்கப் பெற்ற உங்களுடைய பக்தியும் ஞானமும் இதில் பிரதிபலிக்கின்றன; இதனை விரைவிற் பூர்த்தி செய்துகொண்டு இங்கே வந்து பிரசங்கம் செய்து எங்களை உய்விக்க வேண்டும். எங்களுடைய அளவற்ற ஆசையால் அடிக்கடி வற்புறுத்திச் சொல்வதை நீங்கள் பிழையாக எண்ணமல் பொறுத்தருள வேண்டும் மாயூரத்தில் எவ்வளவோ அன்பர்கள் தங்களுடைய அருமையான கதாப் பிரசங்கங்களைக் கேட்பதற்குக் காத்திருப்பார்கள்; அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் உள்ளத்தைச் செலுத்தி, இந்தச் சரித்திரம் இயற்றுவதில் பராமுகமாக இருக்கக்கூடாது. இச்சரித்திரம் முடியும் வரையில் இங்கேயே இருந்தால் உங்களுக்கு யாதொரு கவலையும் இல்லாமல் கவனித்துக் கொள்ளுகிறோம்" என்றார்.

பாரதியார், "உங்களுக்கு இவ்வளவு அன்பும் ஆவலும் இருப்பதற்காகவேனும் நான் ஞாபகத்தைச் செலுத்தி இதனைச் செய்து முடிப்பேன். இதனை இயற்றுவதனல் என்னுடைய மனத்துக்கும் நாவிற்கும் பரிசுத்தமுண்டாகுமே! கரும்பு தின்னக் கூலியா? மாயூரத்திற்குப் போனல் தனியே இருந்து சிந்திப்பதற்கும் தியானம் செய்வதற்கும் உரிய இடங்கள் இருக்கின்றன; அன்றியும் இடையிடையே சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜ மூர்த்தியையும் தரிசித்து வரலாம். நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். நான் விரைவில் இதை முடித்துக்கொண்டு வருவேன்" என்று கூறவே, செட்டியார் பிரிவாற்றத வருத்தத்தோடு விடைகொடுத்தனுப்பினர்.

அப்பால் பாரதியார் மாயூரம் வந்து சேர்ந்தார். அதுமுதல் நந்தனர் சரித்திரத்தை மிக்க ஊக்கத்தோடு இயற்றிவந்தார். பெரிய புராணத்திலுள்ள வரலாற்றை வைத்துக்கொண்டு தமது மனேபாவத்துக்கும் காலத்துக்கும் வேறு சரித்திரப் போக்குக்கும் ஏற்ப அதை விரிவுபடுத்தி அமைத்துக்கொண்டார். அந்த வரலாற்றுக்கு ஏற்றபடி சமயோசிதமான இராகங்களையும் புதிய மெட்டுக்களையும் அமைத்துக்கொண்டு கீர்த்தனங்களை இயற்றினர். இடையிடையே சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜ தரிசனம் செய்து மீள்வார்.

தாம் அவ்வப்பொழுது ஸ்ரீ நடராஜப் பெருமான்மீது முன்னமே இயற்றி வைத்திருந்த சில தனிக் கீர்த்தனங்களையும் இந்நூலில் ஏற்ற இடங்களிற் சேர்த்துக்கொண்டார்.

சில மாதங்களில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனத்தை இவர் இயற்றி முடித்தார். பலமுறை நினைந்து நினைந்து இயற்றியதாதலின் அச்சரித்திரம் இவருடைய உலக அநுபவத்தையும் சிவபக்திப் பெருக்கத்தையும் யோகாநுபவம் முதலியவற்றையும் புலப்படுத்தியது. அது நிறைவேறியதை இவர் நாகபட்டினத்திலுள்ள கந்தப்ப செட்டியாருக்கு அறிவித்தார். அவர் உடனே தக்க மனிதர் ஒருவரை அனுப்பி இவரை அழைத்துவரச் செய்தார்.

பாரதியார் தம் மாணாக்கர்கள் சிலருடன் நாகபட்டினம் சென்றனர். நல்ல நாளில் அரங்கேற்றம் தொடங்கப்பட்டது. மூன்று தினங்கள் அது நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் பெருங்கூட்டமாக அன்பர்கள் வந்து கதையைக் கேட்டு இன்புற்றனர்.

அந்த அரங்கேற்றம் நிறைவேறியவுடன் பாரதியாருக்கு ஸம்மானங்கள் பலவாறு வழங்கப்பட்டன. பொது ஜனங்கள் அந்த மூன்று நாட்களிலும் நந்தனார் சரித்திரத்தை ஒரு முறை கேட்டதோடு திருப்தி அடையவில்லை. நாகபட்டினத்திலுள்ள பிரபுக்கள் பலருடைய வீட்டில் தனித்தனியே அவரவர்கள் விருப்பத்தின்படி பாரதியார் நந்தனார் சரித்திரத்தைப் பிரசங்கம் செய்து வந்தார். கதை நடைபெற்று வருகையில் காரைக்காலில் இருந்த உத்தியோகஸ்தர்கள் பலர் நாகை வந்து கதையைக் கேட்டு இன்புற்றுத் தங்கள் ஊர் சென்றனர். இரவெல்லாம் கண் விழித்தமையால் அவர்கள் தங்கள் உத்தியோக நிலையங்களில் தூக்கக் கலக்கத்தால் அவஸ்தைப்பட்டார்கள். காரைக்காலிலுள்ள கலெக்டராகிய விஸே துரையென்னும் ஒரு கனவான் தம் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் இங்ஙனம் இருப்பதற்குக் காரண மென்னவென்று விசாரித்தார்; நாகபட்டினத்திற் பாரதியார் செய்து வந்த கதாப்பிரசங்கமே அதற்குக் காரணமென்று அறிந்து ஆச்சரியமுற்றார். அவர் சிறிது தமிழ்ப் பயிற்சியும் சங்கீத ஞானமும் உடையவர்; ஆதலின், 'இந்த உத்தியோகஸ்தர்களை மயக்கும் சரித்திரமாக இருந்தால் அதை நாம் கேட்க வேண்டாமா?' என்று எண்ணினார். அதையறிந்த சில தக்க உத்தியோகஸ்தர்கள் பாரதியாரை நாகபட்டினத்திலிருந்து அன்போடு அழைத்துவந்து காரைக்காலில் நந்தனார் சரித்திரப் பிரசங்கத்தை நடத்தச் செய்தனர்.

அப்பொழுது விஸே துரையும் வந்து கேட்டு மிகவும் ஈடுபட்டார். அந்தக் கதையைக் கேட்பதற்காகக் கூடிய கூட்டத்தின் மிகுதியை அவர் அதற்கு முன் ஒரு பொழுதும் கண்டதில்லை. அவ்வளவு அருமையான சரித்திரத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினால் உலகுக்கு உபகாரமாக இருக்குமென்று அந்தத் துரை எண்ணினார். பாரதியாரிடம் அக்கருத்தைத் தெரிவிக்கவே, இவர் அச்சரித்திரம் முழுவதையும் நன்றாக எழுதிக்கொடுத்தார். விஸே துரையே அதை முதல் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

அப்பதிப்பின் முகப்புப்பக்கத்தில், 'உ சிவமயம். பெரிய புராணம் அறுபத்தமூன்று நாயன்மார்களில் சிதம்பரத்தில் முக்தி பெற்றவ

ராகிய திருநாளைப் போவார் சரித்திரக் கீர்த்தனை. இஃது முடிகொண்டான் பாரதி கோபால கிருஷ்ணையரால் நூதனமாக வியற்றியதைக் காரைக்கால் கலெக்டர் ஸிஸே துரை யவர்கள் உத்திரவின்படி மேற்படியூர் ஞானப் பிரகாச பிள்ளையவர்களாலும் பிட்டில் அருணசல பிள்ளையவர்களாலும் பரிசோதித்து, புரசை க. குண்ணப்ப மூர்த்தி அவர்களால் கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. துன்மதி ஞு ஐப்பசிமீ உஅ உ' என்னும் செய்திகள் காணப்படுகின்றன.

காரைக்காலில் பாரதியார் சில காலம் இருந்து பின்பு மாயூரம் வந்து சேர்ந்தார். மாயூரம் முதலிய இடங்களிலும் தொடர்ந்து பல நாட்கள் நந்தனர் சரித்திரத்தை இவர் பிரசங்கம் செய்யலானார். அங்கே வந்து கேட்டுச் சென்றவர்களாலே தமிழ் நாடு முழுவதும் நந்தனர் சரித்திரப் பிரஸ்தாபமே நிறைந்திருந்தது.

பாரதியாருக்கு நந்தனர் சரித்திரம் புகழுடம்பை நாட்டியது. கோபாலகிருஷ்ண பாரதியாரை நாமெல்லாம் மறவாமல் நினைக்கப் பண்ணுவது இச்சரித்திரந்தான்.

மாயூரத்தைச் சார்ந்த கூறை நாட்டில் அக்காலத்தில் இருந்த கவிராயர் ஒருவருக்குக் கோபால கிருஷ்ண பாரதியார் அடைந்து வரும் பெருமை பொறாமையை உண்டாக்கிற்று. அவர் நல்ல தமிழ்ப்பயிற்சியும் சங்கீத ஞானமும் வாய்ந்தவர்; திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தைக் கீர்த்தன உருவத்தில் இயற்றியவர். அவர் பெரும்பாலும் தமிழ் இலக்கண விதிகளைக் கவனித்து அந்தச் சரித்திரத்தை இயற்றினார். சங்கீதப் பயிற்சி உடையவர்கள் அதனை மதிக்கவில்லை. அதனால் அந்தச் சரித்திரம் அதிகமாகப் பரவாமல் அந்தக் கவிராயர் பழகும் இடங்களில் மட்டும் அவரால் பிரசங்கம் செய்யப்பட்டு வந்தது. அவர் எவ்வளவோ முயன்றும் அதற்கு மதிப்பு உண்டாகவே இல்லை. காரணம் நந்தனர் சரித்திரக் கீர்த்தனத்தின் வியாபகமே.

அதனால் கவிராயருடைய பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிந்தது. பாரதியாரைப் பற்றிப் பல குறைகளை அவர் கூறத் தொடங்கினார். இவர்மீது பல வசைக்கவிகளைப் பாடித் தமக்குத் தெரிந்த சிலருக்குப் பாடம் பண்ணுவித்துச் சில இடங்களில் பாடச் செய்தார். அவர் அப்படி இயற்றிய கண்டனங்களுள் பின்வரும் கீர்த்தனம் ஒன்று:

(பல்லவி)

நந்தன் சரித்திரத்தைக்
கேளாதே—நாளும்
வந்த தரித்திரந்தான் மாளாதே.

(அநுபல்லவி)

தந்தன மாகக்கொள்வான்
தடிப்பிரம்ம சாரி
தையலர் மேற்பெருங்
காமவி காரி (நந்தன்)

(சரணம்)

பெரிய புராணத்திலே
இருப்பதை விட்டுப்
பேய்த்தன மாகஇவன்
சொன்னதைத் தொட்டு
அரிய புலவர்க்கு
வந்ததே சொட்டு
ஐயையோ அத்தனை
புங்கதைக் கட்டு (நந்தன்)

அன்பர்களிற் சிலர் பாரதியாரிடம் வந்து, "இதற்குக் கண்டனமாக நீங்கள் சில கீர்த்தனங்கள் பாடித் தர வேண்டும்; துஷ்டர்

களுக்கு இடங் கொடுக்கக்கூடாது; கண்டிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுள் ஒருவர் அந்தத் தமிழ்ப் பண்டிதர் இயற்றிய திருநாவுக்கரசர் சரித்திரத்தைப் பழித்து,

''அப்பன் சரித்திரத்தைச்
சொல்லாதே
கப்பறையுங் கையுமாய் நில்
லாதே''

என ஒரு கீர்த்தனம் இயற்றினர்; பாரதியார் அவரைப் பார்த்து, ''அதை உடனே மறந்துவிடுங்கள்; உங்கள் செயலால் எனக்கு அவமதிப்பு அதிகமாகுமேயன்றி நன்மதிப்பு உண்டாகாது'' என்று கூறினர்; மற்றவர்களைப் பார்த்து, ''நான் சர்வக்ஞனு? என்னுடைய கீர்த்தனங்களில் பிழை யிருப்பதாக அவருக்குத் தோன்றியதனல் அவர் அங்ஙனம் கூறி வருகிறார். ஆனல் அநாவசியமாக என்னை அவர் கண்டபடி தூஷிப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சிவ கிருபையையே துணையாக நான் கொண்டு சரித்திரத்தை இயற்றினேன். எனக்கு வரும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் ஸ்ரீ நடராஜமூர்த்தியையே சார்ந்தவை. இதன் கண்டனமாக நான் கீர்த்தனங்களை இயற்றத் தொடங்கினல் எனது எண்ணம் பாழ்படும். ஈசுவரனையும் அடியார்களையும் பாடியதனல் புனிதமடைந்த என்னுடைய நாவை வேறுவிதமாக உபயோகித்து அழுக்கடையச் செய்யமாட்டேன். கங்கையில் நீராடிவிட்டுச் சாக்கடை நீரில் மூழ்க யாராவது விரும்புவார்களா? அவர் தம்முடைய ஆத்திரத்தை ஒருவிதமாக இந்தப் பாட்டுக்களால் தீர்த்துக்கொள்கிறார். நாமும் அவரைப்போல் செய்ய ஆரம்பித்தால் நமக்கும் அவருக்கும் வித்தியாசம் என்ன? எல்லாம் நடராஜப் பெருமானது திருவருள் என்றெண்ணி அமைதியாக இருப்பதையே விரும்புகிறேன்'' என்று உணர்த்தினர். கேட்டவர்கள் பாரதியாருடைய உயர்ந்த பொறுமையை அறிந்து பாராட்டினர்கள்.

அக்காலத்தில் மாயூரத்திலே தமிழில் மகா வித்துவானகிய ஸ்ரீ மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வசித்து வந்தார்கள். பாரதியாருடைய சிவபக்தியையும் ஞான நிலையையும் அறிந்த அவர்களுக்கு இவர்மீது அன்புண்டாயிற்று. இருவரும் அடிக்கடி கண்டு சல்லாபம் செய்வதுண்டு. பாரதியார் ஒரு நாள் தமக்குச் சிறப்புப்பாயிரம் பாடித் தர வேண்டுமென்று கேட்டார். பிள்ளையவர்கள் இவர்பால் அன்புடையவர்களாயினும், நந்தனர் சரித்திரம் பெரிய புராணத்திலுள்ளவாறே இயற்றப்படாமையாலும், பிழைகள் உடையதாக இருப்பதனுலும் அதற்குச் சிறப்புப்பாயிரங் கொடுப்பதற்கு விரும்பவில்லை; பாரதியாருடைய விருப்பத்தை மறுப்பதற்கும் மனந்துணியவில்லை. ஆதலின், ''சாம்பவர்களாகிய உங்களுடைய கீர்த்தனத்துக்கு எனது சிறப்புப்பாயிரம் எதற்கு? இசை நூலாகிய அதற்கு இசையறிந்தவர்கள் அளித்தால் பொருத்தமாக இருக்கும். அன்றியும் மிகவும் பிரசித்தமாக வழங்கும் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வேண்டிய அவசியமே இல்லை'' என்று கூறினர்கள். பாரதியார், ''எவ்வளவோ சிவபுராணங்களைப் பாடியவர்களும் சிவபக்த சிரோமணிகளுமாகிய உங்களுக்குத்தான் அச்சரித்திர அமைப்பின் அருமை பெருமை தெரியும். சாதாரண ஜனங்களும் பக்தியில் ஈடுபடும்

வண்ணம் அமைய வேண்டுமென்று எண்ணிச் செய்த அது, நடராஜ மூர்த்தியின் கிருபையால் ஓர் உருவம் பெற்றது. உங்கள் வாக்கினுல் அதற்கு ஒரு சிறப்புப்பாயிரம் இருந்தால் இதுவரையிலும் இல்லாத பெருமை உண்டாகுமென்று எண்ணுகிறேன்'' என்று அடிக்கடி கூறி வற்புறுத்தி வந்தார். பிள்ளையவர்களோ ஒவ்வொரு முறையும் ஏதேதோ சமாதானம் கூறிவந்தனர்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் பிற்பகலில் பாரதியார் பிள்ளையவர்களது வீட்டை அடைந்தார். அப்போது பிள்ளையவர்கள் ஆகாரம் செய்துவிட்டு வழக்கம்போலவே துயின்று கொண்டிருந்தனர். அதனையறிந்த பாரதியார் வீட்டின் வெளித் திண்ணையிலேயே உட்கார்ந்துகொண்டு பாடத் தொடங்கினர். இவருடைய இன்னிசை பிள்ளையவர்களை எழுப்பிவிட்டது. அவர்கள் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டார்கள். கீர்த்தனங்களின் இசையும் பொருளும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. உடனே எழுந்து சென்ருல் பாரதியார் தாமே அநுபவித்துப் பாடுவதை நிறுத்திவிடுவாரென்று எண்ணி அங்கிருந்தபடியே கேட்கலானுர்கள். பாரதியார், ''கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலி தீரும்'' என்ற கீர்த்தனத்தைப் பாடினுர். பிள்ளையவர்கள் ஸ்ரீ நடராஜ மூர்த்தியினிடம் உறுதியான பக்தி பூண்டவர்கள்; அம்மூர்த்தியின் குஞ்சித சரணத்தை மறவாத உள்ளத்தினர். ஸ்ரீ நடராஜமூர்த்தி விஷயமாகவுள்ள அக் கீர்த்தனம் அவர்கள் மனத்தை உருக்கியது. பாரதியார் பின்னும் சில கீர்த்தனங்களைப் பாடினுர். பிள்ளையவர்கள் தம்மையே மறந்து அந்த இசைப் பாட்டுக்களில் ஈடுபட்டிருந்தார்கள்; பக்தி மிகுதியினுல் அவர்களுக்குக் கண்ணீர் வெளிப்பட்டது. உடனே எழுந்து வெளியே வந்தார்கள். பாரதியார் எழுந்து நின்ருர். அவர்கள் பாரதியாருக்கு அஞ்சலி செய்தார்கள். பின்பு, சிறப்புப்பாயிரப் பாடலொன்றை அன்புடன் பாடியளித்தார்கள்; அளித்துவிட்டு, ''பல நாளாக நீங்கள் விரும்பியபடி செய்ய இயலாததற்கு வருந்துகிறேன்; பரம சாம்பவர்களாகிய உங்களை இதுவரையில் அலைக்கழித்ததைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்'' என்று கூறினுர்கள்.

உடனே பாரதியார், ''எந்தக் காலத்தில் எது நிறைவேற வேண்டுமோ அந்தக் காலத்திலேதான் அது நிறைவேறும். தாங்கள் இப்பொழுதேனும் அளிக்கும்படி செய்த ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளை எண்ணிப் போற்றுகின்றேன்'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்ருர்.

பாரதியார் ஒருமுறை சிதம்பரம் சென்றிருந்த காலத்தில் ஆலயத்திற் பாடிக்கொண்டிருக்கையில் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இவரைக் கவனித்தனர். அப்பொழுது அவர் இவருடைய சிவ பக்தியை அறிந்து வியந்தார்; இவருடைய கீர்த்தனங்களைக் கேட்டு அவை சிவபிரான் திருவருட் சிறப்பைப் பலவகையாக எடுத்துப் பாராட்டுவனவாக இருத்தலை யுணர்ந்து இன்புற்றுச் சென்ருர்; மறுநாள் ஆலயத்துக்கு வந்த காலத்தில் இவரைக் கண்டு தம்முடைய ஞாபகத்தின் அறிகுறி

யாக இருக்க வேண்டுமென்று பத்து ரூபாய் அளித்தனர்.

நந்தனர் சரித்திரம் இயற்றப்பட்ட பிறகும் பாரதியார் அவ்வப்போது சிலசில கீர்த்தனங்களை இயற்றி வந்தார். நாகபட்டினத்திலுள்ள வைசியர்கள், "எங்கள் மரபினராகிய நாயனர் ஒருவரது சரித்திரத்தை இயற்றியளிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டியபடியே இயற்பகை நாயனர் சரித்திரத்தை இவர் இயற்றினர். அதன் பிறகு சிதம்பரத்திலுள்ளார் சிலர் விரும்பியபடி திருநீலகண்ட நாயனர் சரித்திரத்தையும் இயற்றினர்.

என் தந்தையாராகிய ஸ்ரீ வேங்கட சுப்பையரவர்கள் சிறந்த சங்கீத வித்துவானுதலின் பாரதியாருடைய பழக்கம் பல நாளாக அவருக்கு இருந்தது. என் ஐந்தாம் பிராயம் முதற்கொண்டே நந்தனர் சரித்திரக் கீர்த்தனங்களை நான் அறிந்து மனனம் செய்து பாடுவதுண்டு. அச்சரித்திரத்திற்கு நாடெங்கும் இருந்த மதிப்பினை அறிந்து நான் கோபாலகிருஷ்ண பாரதியார் ஒரு மகானென்றும் அவரைத் தரிசிக்க வேண்டுமென்றும் எண்ணினேன். பாரதியார் மாயூரத்திலேயே இருந்து வருவதாக எந்தையார் கூறியிருந்தனர். ஆதலின் மாயூரத்திற்குச் சென்றால் இவரைத் தரிசித்துப் பழகலாமென்னும் ஆவலுடையவனுனேன்.

பிரஜோத்பத்தி வருஷம் சித்திரை மாதம் (1871 ஏப்ரலில்), முதல்முதலாக ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரைத் தரிசித்துப் பழகும் பேறு எனக்கு வாய்த்தது. அக்காலத்தில் எனக்குப் பிராயம் பதினேழு.

என் தந்தையாரவர்கள் மாயூரத்திலிருந்த மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் என்னை ஒப்பித்துத் தமிழ் கற்பிக்கச் செய்ய எண்ணினர். அதன்பொருட்டு என்னை அழைத்துக்கொண்டு மாயூரம் சென்றனர்.

நானும் என் தகப்பனரும் மாயூரத்தில் மகாதானபுர அக்கிரகாரத்தில் ஓரன்பருடைய வீட்டுத்திண்ணையில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். பிற்பகல் 3 மணி இருக்கும். வீதி வழியே ஒருவர் நடந்து வந்தார். அவரைக் கண்ட என் தகப்பனர் எழுந்து, "பாரதியாரவர்களா?" என்று கேட்கவே, வீதியிற் சென்ற அவர், "யார் அது? வேங்கட சுப்பையரவர்களா? ஏது இவ்வளவு தூரம்?" என்று சொல்லிக் கொண்டே நாங்கள் இருவரும் இருந்த திண்ணைக்கு வந்து அமர்ந்தார். உடனே என்னுடைய தந்தையாரின் கட்டளைப்படி அவரை நான் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன்.

வந்தவர் கோபாலகிருஷ்ண பாரதியாரென்பதை அறிந்த நான் மிக்க வியப்பை அடைந்தேன். அவருடைய புகழையும் நந்தனர் சரித்திரத்தின் அழகையும் உணர்ந்து ஈடுபட்டிருந்த என் இளைய உள்ளத்துக்குப் பாரதியார் ஓர் அழகிய உருவத்தை உடையவராக இருப்பாரென்ற காரணம் இல்லாத தோற்றமொன்று இருந்து வந்தது. நான் கண்ட காட்சியோ அதற்கு நேர் விரோதமாக இருந்தது.

அகலமான புறங்கால்களுக்கு மேல் கூம்பின கால்கள்; பருத்த முழங்கால்கள்; தடித்த இடை; முழங்காலுக்குமேல் வஸ்திரம்; கூனல் முதுகு; இறுகின கழுத்து; பெருத்த முண்டொன்று முன் வந்திருக்கும் குரல்வளை; அந்தக் கழுத்

தில் ஏக (ஒற்றை) ருத்திராட்சம்; மார்பில் வில்வ ஓட்டு வில்லையோ டுள்ள ருத்திராட்ச கண்டி; பூனைக் கண்; குறுக்கே நீண்ட தலை; அதன் மேல் நாணற்பூவைப்போலப் பறந்து கொண்டிருக்கும் பத்து மயிர்; இத் தக் கோலத்தோடு பாரதியார் இருப்பாரென்று நான் கனவிலும் நினைத்ததில்லை. அத்தகைய உருவத்தினால் இவருடைய சங்கீதத்துக்கோ சிவபக்தி வைராக்கியத்துக்கோ இழுக்கு ஒரு சிறிதும் உண்டாகவில்லை. கோணலையுடைய வீணையிலிருந்தல்லவா இனிய இசை எழுகின்றது? ஜடமாகிற அதற்கே அவ்வளவு சக்தி இருக்கும்போது, ஈசுவர சக்தியினால் உண்டாகிய சாரீர வீணைக்கு எவ்வளவு கோணல் இருந்தால்தான் என்ன?

பாரதியார் கையில் மூங்கிற் கம்பு ஒன்றை ஊன்றிக்கொண்டு நடந்து வந்தார். அவருக்கு அக்காலத்தில் பிராயம் சற்றேறக்குறைய எழுபதுக்குமேல் இருக்கலாம். ஆயினும் பிரமசரியத்தின் சக்தி அவருடைய பிராயத்தை அடக்கிக் காட்டியது. அறுபதுக்குள்ளேதான் இருக்குமென்று தோன்றியது.

என் தந்தையாரும் பாரதியாரும் ஒருவரை ஒருவர் க்ஷேமலாபங்களை விசாரித்துக்கொண்டார்கள்.

பாரதியார்:—நீங்கள் இங்கே வந்த விசேஷம் என்ன? இந்தப் பையன் யார்?

தகப்பனர்:—இவன் என்னுடைய குமாரன்; தமிழ் படித்து வருகிறான். இங்கேயுள்ள மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் படிக்கச் செய்யலாமென்று எண்ணி அவர்களிடம் ஒப்பிக்க வந்திருக்கிறேன்.

பாரதியார்:—சங்கீதத்தில் அப்பியாசம் பண்ணிவைக்கவில்லையா? கனம் கிருஷ்ணையருடைய சிஷ்ய பரம்பரை வீணகப் போகாமல் விளங்கவேண்டாமா?

தகப்பனர்:—சங்கீதமும் தெரியும். என்னிடமும் என் தம்பி சின்னசாமியிடமும் அப்பியாசம் செய்திருக்கிறான். பல உருப்படிகள் பாடம் உண்டு. இங்கே இருந்தால் உங்களிடமும் சில சமயங்களில் வந்து சொல்லிக்கொள்ளலாமல்லவா?

பாரதியார்:—பிள்ளையவர்கள் மிகச் சிறந்த வித்துவானே. அவரைப்போன்ற கவிதாசாமர்த்தியமும் பாடஞ்சொல்லும் திறமையும் நற்குணமும் உபகார சிந்தையும் உள்ளவர்களைப் பார்க்கமுடியாது. ஆனாலும், அவர் சங்கீத விரோதியல்லவா? அவருக்கும் சங்கீதத்துக்கும் வெகுதூரம். இருக்கட்டும். இவனுக்குக் கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்கள் பாடமுண்டா? 'குஸுமம் குந்தளாம் பிகையே' என்ற கீர்த்தனம் தெரியுமா?

உடனே என் தகப்பனாரது கட்டளையின்மேல் அந்தக் கீர்த்தனத்தையும் வேறு சில கீர்த்தனங்களையும் பாடினேன்; நந்தனர் சரித்திரத்திலுள்ள சில கீர்த்தனங்களையும் பாடினேன். அவர் விருப்பியபடி என் தகப்பனரும் பல கீர்த்தனங்களைப் பாடிக் காட்டினர். நானும் உடன் பாடினேன்.

கேட்ட பாரதியார் மகிழ்ந்து, "இவனுக்குச் சாரீரம் இருக்கிறது. உங்களுடைய வழிகளை நன்றாக அப்பியாசம் பண்ணியிருக்கிறான். பழக்கத்தை நிறுத்தாமல் மேலும் மேலும் விருத்தி பண்ணிக்கொண்டு வந்தால் நல்லது" என்றார்.

தகப்பனர்: — தினந்தோறும்

விடியற்காலையில் தங்களிடம் வந்து சிக்ஷை சொல்லிக்கொள்ளும்படி செய்விக்கிறேன். தாங்கள் கிருபை வைத்துச் சொல்லி வைக்கவேண்டும். இவனுக்குத் தெரிந்த கீர்த்தனங்களையும் கேட்டு ஆசீர்வாதம் செய்யவேண்டும். அதனால் இது வரையில் தெரிந்துகொண்டவற்றை மறவாமல் இருக்கமுடியும். தாங்கள் இருக்கும்போது இவனுக்கு என்ன குறை?

பாரதியார்: — ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் கிருபை பூர்ணமாக இருக்குமென்று நம்புகிறேன். இவன் என்னிடம் அப்பியாசம் பண்ணிவந்தால் எனக்கும் மிகவும் திருப்தியாக இருக்கும். கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்களைச் சுத்தமாகப் பாடும்படி சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள்.

பிறகு பாரதியார் தம் இருப்பிடம் சென்றார். நான் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்கத் தொடங்கினேன். தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து பாரதியாரிடம் சென்று இசைப்பயிற்சி செய்து வந்தேன். பாரதியார் எனக்குப் பாடமாயிருந்த கீர்த்தனங்களைக் கேட்டுத் திருத்துவார்; கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்களை அடிக்கடி பாடச்செய்து கேட்டு இன்புற்று உருகுவார்; அவற்றின் மெட்டைப் பாராட்டுவார். பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களையும் வேறு பல பழைய உருப்படிகளையும் அக்காலத்தில் நான் கற்றுக் கொண்டேன். மாலைக் காலங்களில் ஓய்விருந்தால் இவரோடு காவிரி யாற்றுக்குச் சென்று சந்தியாவந்தனம் செய்துவருவேன்.

நாள்தோறும் நான் பாரதியாரிடம் சென்று பயின்று வருவது பிள்ளையவர்களுக்குத் தெரியாது. ஒருநாள் அப்புலவர் பெருமானும் பாரதியாரும் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது பிள்ளையவர்கள் பாரதியாரை நோக்கி, "என்னிடம் ஒரு பிராமணச் சிறுவர் பாடங்கேட்கிறார்; செய்யுட்களை இசையோடு படிக்கிறார்; காதுக்கு இனிமையாக இருக்கிறது. நீங்கள் கேட்டால் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும்" என்றார்கள்.

பாரதியார்:—எனக்கு அவனைத் தெரியும். அவனுடைய தகப்பனாருக்கும் எனக்கும் பல நாளாகப் பழக்கம் உண்டு. அவன் தினந்தோறும் என்னிடமும் வந்து சங்கீத அப்பியாசம் செய்துவருகிறான். சாரீர சம்பத்து இருக்கிறது. தங்களிடம் படித்து வருவதாக அவன் சொன்னான். அவனை நன்றாகப் படிப்பிக்க வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிள்ளையவர்கள் இதனைக் கேட்ட பிறகு திடீரென்று பாரதியாரிடம் விடைபெற்று நேரே தம் வீட்டுக்கு வந்தார். அங்கே அன்பர்களுடன் பாடங்களைச் சிந்தனை செய்து கொண்டிருந்த நான் அவர்களைக் கண்டதும் எழுந்து நின்றேன்; அவர்கள் என்பால் வந்து, "நீர் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசைப்பயிற்சி செய்வதுண்டோ?" என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அதுகாறும் அச்செய்தியை அறிவியாததை நினைந்து அஞ்சினேன்; மெல்ல, "ஆம்; அவர்களிடம் சென்று அப்பியாசம் செய்யும்படி என் தகப்பனார் கட்டளையிட்டார்கள். இதுவரையில் பயின்றவற்றை மறவாமல் இருக்கும் பொருட்டு அங்ஙனம் செய்துவருகிறேன்" என்றேன். அக்கவிஞர்பிரான், "நீர் அங்ஙனம் செய்து வருவதை நான் இதுவரையில்

அறிந்துகொள்ளவில்லை; இன்று தான் பாரதியார் சொன்னர்; இசையில் அதிகப் பயிற்சியும் ஊக்கமும் வைத்துக்கொண்டால் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் நன்ருகப் புத்தி செல்லாது. நூல்களின் கருத்தை நுணுகி ஆராய்ந்து படிக்கும் வழக்கத்தை அது தடுத்துவிடும்" என்ருர்கள். அவர்களுடைய நோக்கத்தை அறிந்து மறுநாள் முதல் பாரதியாரிடம் இசை பயில்வதை நிறுத்திக்கொண்டேன். வேருென்றும் சொல்லாமல், "இங்கே வருவதற்கு ஒய்வு இல்லை; படித்தவற்றைச் சிந்திக்கவேண்டும்" என்று இவரிடம் சொல்லிவிட்டேன். அப்பால், நேர்ந்த காலங்களிலே இவரிடம் சென்று பழகிக்கொண்டுமட்டும் வந்தேன். திருவாவடுதுறை சென்று இருந்த காலங்களில் இடையிடையே மாயூரத்திற்குச் செல்லும் பொழுது இவரைப் பார்த்து இவருடைய ஆசீர்வாதம் பெற்று வருவேன்.

பிள்ளையவர்கள் என்னுடைய இசைப்பயிற்சியைப் பற்றிச் சொன்னபோது, பாரதியார், "அவர் சங்கீத விரோதி" என்று கூறிய தன் உண்மை புலப்பட்டது. அதனல் எனக்குப் பிள்ளையவர்களிடத்தில் சிறிதேனும் வெறுப்பு உண்டாகவில்லை. சங்கீதத்தில் இளமை தொடங்கியே இயல்பாகப் பிரியமிருந்தும், அக்காலம் முதற் கொண்டு என்னுடைய முக்கியமான நோக்கமும் முயற்சியும் தமிழாகவே இருந்தமையினல், அதன்பொருட்டு எதையும் தியாகம் செய்யும் இயல்பை மேற்கொண்டேன். இல்லையாயின், அந்தப் புலவர் சிகாமணியின் அன்புக்குப் பாத்திரமாகித் தமிழ்த்தாயின் திருத்தொண்டைச் செய்து இன்புற்று வரும் நிலைமை மாறியிருக்கலாமல்லவா?

பாரதியாரை நான் பார்த்த காலத்தில் அவருடைய சாரீரம் கம்மலாக இருந்தது. இவர் பல காலத்துக்கு முன்பிருந்தே பிடில் வாத்தியத்தைப் பழக்கம் செய்து வந்ததுண்டு; முதுமைப் பிராயத்தில் தனியே இருக்கும்பொழுது அதை வாசித்துப் பொழுதுபோக்கி மகிழ்ந்து இன்புற்றிருப்பார்.

இவர் கதை பண்ணுவதனல் உண்டான வருவாயைச் சேமித்து வைத்திருந்தார். ஆடம்பரமில்லாத வாழ்வுடையவராதலின் இவருக்குப் பொருட் செலவு மிகவும் சுருக்கமாகவே இருக்கும். ஆதலின் இவருடைய முதிய பிராயத்தில் மூவாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட தொகை இவரிடம் இருந்தது. அதில் தமது செலவுக்கு ஒரு சிறு தொகையை வைத்துக்கொண்டு, தம்மைப் போற்றிப் பாதுகாத்த இராமசாமி ஐயருக்கும் பிறருக்கும் உபகாரநிதியாக ஒரு தொகையை வழங்கினர். எஞ்சிய மூவாயிர ரூபாயைக்கொண்டு ஏதேனும் ஒரு சிவ தர்மம் செய்ய எண்ணினர். அத் தர்மத்தைச் செய்யும் கடமையை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் ஒப்பித்தால் அது முட்டின்றி நடைபெறுமென்பது இவரது நம்பிக்கை. ஆதலின் ஒருநாள் இவர் திருவாவடுதுறைக்குப் புறப்பட்டார். அப்பொழுது இவருடன் மாயூரத்திலேயே ஸ்தலவாஸம் செய்துவந்த சஞ்சீவி சிவராமையர் என்பவர் சென்ருர்.

சஞ்சீவி சிவராமையர் என்பவர் தஞ்சாவூரிலே பழைய சங்கீத வித்துவான்களின் சமூகத்திலுள்ள ஒரு

வர். அவருக்கு ஸுப்பராயர் என்ற குமாரர் இருந்தார்; அவர் மகா வைத்தியநாதையர் பாடும் காலங்களில் உடன் இருந்து பிடில் வாசித்து வந்தவர்; அகாலத்தில் இறந்து போய்விட்டார். அதனால் புத்திர சோகத்தை அடைந்த சிவராமையர் தம்முடைய மனச்சாந்தியை உத்தேசித்து, தஞ்சையை நீங்கி மாயூரத்தை யடைந்து சிவதரிசனம் செய்துகொண்டு காலங் கழித்து வந்தார். அக்காலத்தில் பாரதியாருடைய பழக்கம் அவருக்கு ஆறுதலை அளித்தது.

பாரதியாரும் சிவராமையரும் திருவாவடுதுறை சேர்ந்தனர். பாரதியார் ஆதீனத் தலைவராகிய சுப்பிரமணிய தேசிகரிடம் தம் உள்ளக் கருத்தை வெளியிட்டார். தம்மிடம் இருந்த ரூபாய் மூவாயிரத்தையும் கொடுத்து மாயூரம் சிவாலயத்தில் தாம் யோகம் செய்யும் இடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அகஸ்தீசுவரருக்கு நாள்தோறும் அர்த்த சாமத்தில் தயிரன்னமாவது சம்பா அன்னமாவது நிவேதனம் செய்து, அந்த அன்னத்தைத் தேங்காய்த் துவையலுடன் தேசாந்தரிகள் ஆறு பேர்களுக்குக் கொடுக்கும்படி செய்விக்க வேண்டுமென்று விரும்பினர். அன்றியும் சிதம்பரத்திலும் சில கட்டளைகளை நடத்திவர வேண்டுமென்று கூறினர். சுப்பிரமணிய தேசிகர் மிக்க மகிழ்ச்சியுடன் அத்தொகையை ஏற்றுக்கொண்டு இவருடைய கருத்தின்படியே குறைவின்றி நடத்திவந்தார்.

பாரதியாருடைய முதுமைப் பருவத்தில் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்கு நேரவில்லை. ஆயினும் எப்பொழுதேனும் சந்திக்கும்போது அன்புடன் க்ஷேமத்தைப்பற்றி இவர் என்னை விசாரிப்பார். கும்பகோணத்திற்கு நான் சென்ற பிறகும் இவர் மாயூரத்தில் இருந்து வந்தார்.

இவர் தொண்ணூற்றைந்து பிராயம் வரையில் வாழ்ந்தார்.

பாரதியார் எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவர். ஹாஸ்யச் சுவை இவருடைய பேச்சில் நிரம்பியிருக்கும். தம்மோடு பழகுபவர்களிடம் வேடிக்கையாக இவர் பேசும்போது இடையிடையே பழமொழிகளும் உபமானங்களும் விரவி வரும். நொடி பேசுவதில் இவர் மிகவும் சமர்த்தர்.

ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லச் சொல்லி அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு ஒரு புராண கதையை ஆரம்பித்து முடிப்பார். ஒரு சமயம், கனைத்தானென்று நான் சொன்னேன். உடனே, "யமன் கனைத்தான். எதற்குத் தெரியுமா? பரீக்ஷித்து மகாராஜன் தனக்கு இன்ன நாளில் மரணம் நேருமென்பதை யறிந்து அதிலிருந்து தப்பும் பொருட்டுச் சமுத்திரத்தின் மத்தியில் பெரிய பாதுகாப்பில் இருந்தான். அப்பொழுது அதனையறிந்த யமன், 'நமக்கு, இவன் தப்பிப் போய்விடுவானா, பார்ப்போம்' என்று கனைத்தான்" என்று சொல்லி அந்த வரலாற்றை விரிவாகவும் ரஸமாகவும் சொல்லி முடித்தார். இவ்வாறு நான் பல கதைகளை இவரிடம் கேட்டிருக்கிறேன்.

பாரதியார் நந்தனர் சரித்திரக் கீர்த்தனத்தை யாவரும் கதை பண்ணும் முறையில் அமைத்திருக்கிறார். அதற்கேற்றவாறு இடையிடையே கதை பண்ணுவோர் கூற்றாகச் சில வசனப் பகுதிகளையும் சேர்த்திருக்கிறார். நந்தனர் முதலியோர் கூற்றுக்களாக அமைத்த ஏசல், வாக்கு

வாதம் முதலியன இச் சரித்திரத்திற் கண்ட புது அமைப்புக்கள்.

நந்தனர் சரித்திரத்தை முதலில் திருப்பழனம் சாமி ஐயரென்பவரும், பிறகு வேறு சிலரும், தஞ்சைக் கிருஷ்ண பாகவதரும், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் முதலியவர்களும் கதை பண்ணி வந்தார்கள்.

பாரதியார் முதல் முதலில் அமைத்திருந்த இராகங்களிற் பல பிற்காலத்திற் சிலரால் மாற்றப்பட்டன; கிருஷ்ண பாகவதரும் அங்ஙனம் மாற்றியிருப்பதுண்டு.

இச்சரித்திரத்தின் முதற்பதிப்பு, சென்ற துன்மதி வருஷத்துச்கு முந்திய துன்மதி (1861—2) ஆப்பதிப்பிக்கப் பெற்றது; அடுத்த வருஷமாகிய துந்துபி (1862—3) யிலேயே இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அந்தக் காலத்தில் இவ்வளவு விரைவில் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்தமையே இப்புஸ்தகமானது பலரால் வாங்கப்பட்டதென்பதையும், பலர் இதைப் படித்து ஈடுபட்டனரென்பதையும் உணர்த்தும்.

என்னுடைய ஏழாவது பிராயம் முதற்கொண்டே எனக்கு நந்தன் சரித்திரக் கீர்த்தனங்களில் அளவற்ற பற்று உண்டாயிற்று. ஒரு சமயம், உடையார்பாளையம் தாலூகாவைச் சேர்ந்த பெரிய திருக்குன்றம் என்ற கிராமத்தில் நெருங்கிய பந்து ஒருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு விசேஷத்திற்கு நான் போயிருந்தேன். அப்பொழுது அங்கே வந்திருந்த ஒருவர் சில கீர்த்தனங்களைப் பாடிவிட்டு நந்தனர் சரித்திரக் கீர்த்தனங்களையும் பாடினர். அவற்றுள் கானடா இராகத்தில் அமைந்த,

(பல்லவி)

தீயினில் முழுகினர் - திருநாளைப் போவார்

தீயினில் முழுகினர்.

(அநுபல்லவி)

நாயிலும் கடையென்று நயந்து துணிந்திடும்

மாயச் சடலம் போக்கி மறைமுனியாகவே (தீயினில்)

(சரணங்கள்)

பாழும் நரகத்திற் படிந்திடும் பாவியான

ஏழையின் இடத்தினில் இரக்கமுற்ற தோவென்று (தீயினில்)

அரகரசங்கர அம்பலவாவென்று

பரிவுடன் குண்டத்தைப் பிரதக்ஷிண மாய்வந்து (தீயினில்)

என்ற கீர்த்தனத்தை அவர் சொன்னவுடன் எனக்கு அது பாடமாயிற்று. அதனை இடைவிடாமல் நான் பாடிக்கொண்டிருந்ததைக் கண்ட என் தந்தையார் கேட்டு, "உனக்கு இந்தக் கீர்த்தனத்தை யார் சொல்லிக் கொடுத்தார்?" என்று கேட்டனர். நான் நடந்ததைச் சொன்னேன். அதுமுதல் எனக்கு அவர் சங்கீதப் பயிற்சியையும் செய்வித்து வரலானர்.

இப்போது நந்தனர் சரித்திரம் தமிழ்நாட்டின் இசைச் செல்வங்களில் ஒன்றாக நிலவுகின்றது. எவ்வளவு புதிய கீர்த்தனங்கள் வந்தாலும் அதன் ஒளி மங்காது. அதற்குக் காரணம் அச்சரித்திரத்தில் அமைந்துள்ள பக்திச்சுவையும் சங்கீத அமைப்பின் சிறப்புமேயாகும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

தேர்தலின்போது

முக்கியமான பிரச்னைகள் குறித்து வோட்டர்களின் அபிப்பிராயத்தை அறிவது, அவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க உதவி புரிவது இந்த இரண்டுந்தான் ஜனநாயகத் தேர்தல்களின் முழு நோக்கமாகும். அரசியல் கட்சிகள் தங்கள் திட்டங்களைப் பொதுஜனங்களுக்கு முன்பு சமர்ப்பிக்கின்றன; தங்கள் திட்டப் பெருமைகளையும் பிற கட்சிகளின் திட்டக்குறைகளையும் எடுத்துச் சொல்லி ஒவ்வொரு கட்சியும் தீவிரமாகப் பிரசாரம் புரிகிறது. ஜனங்களுக்கு விஷயஞானம் போதித்து, சரியானவரைத் தேர்ந்தெடுக்கச் செய்வதே இதன் கருத்து.

ஆனால், என்ன காரணத்தாலோ தேர்தல்களில் பெரும் பரபரப்பு உண்டாகிவிடுகிறது. இதனால் சில சமயம் துரதிருஷ்டவசமாக மக்கள் இயற்கையை மீறிக் கேவலமாக நடக்கிறார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி; நாம் அனைவரும் இதற்கு இடங் கொடுக்கக்கூடாது. மிகவும் ஒழுங்காகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்ளவேண்டும். நம் பேச்சோ, எழுத்தோ எதுவும் ஆளைப்பற்றியதாக இருக்கக்கூடாது; கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றியதாகவே இருக்கவேண்டும். எக்காரணம் குறித்தும், ஆளைக் குறைகூறவோ, திட்டவோ கூடாது.

வயது வந்த சகல மக்களுக்கும் வோட்டுரிமையுள்ள நமது முதல் முதலான பொதுத்தேர்தல் இதுவே. இன்று நாம் நடந்துகொள்ளும் முறையே, வருங்காலத் தேர்தல்களுக்கெல்லாம் வழிகாட்டி உதாரணமாய் விளங்கும்.

—ஜவாஹர்லால் நேரு

December '51 Regd. No. M. 4975

மஞ்சரி

கர - மார்கழி

ஊரும் உலகமும் 1
சட்டசபை உறுப்பினர் கடமை .. .. இந்தியன் ரெவ்யூ 3
ஸினிமாவில் வானலோகம் 5
க்விஸ் 10
அமெரிக்காவை வென்ற மைனு 11
கார்ட்டூன் கதம்பம் (படம்) 14
தெய்வ அறிவு .. .. கலாநிதி 16
பாபுராவ் பதில் சொல்லுகிறூர் .. .. பிலிமிண்டியா 18
20 - லட்ச ரூபாய்ப் பூனே 20
ரமணர்: வாழ்வும் வாக்கும் 22
பால் நிறுத்தும் சமயம் .. .. தாம்பத்ய ஜீவனம் 25
வழி வழி வந்த வசன நடை: சீவகாருணியம் 29
முயல்குட்டி பெற்ற பெண் 31
கி. பி. 2000 - ஆண்டில் .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 33
பஞ்சு படும் பாடு .. .. ப்ரீ இந்தியா 36
ராமனின் தாபம் 40
கண் விஷயம் 44
உல்லாச ராஜதானி .. ..ஸ்த்ரீ 46
கவி போதனு 49
குடிகார டிரைவர் 52
உலகின் உன்னத புருஷர் 56
கிருஷ்ணதேவ ராயர் .. .. ப்ளிட்ஸ் 57
கொடி (சிறு கதை) .. .. கே. ஏ. அப்பாஸ் 61
கோபாலகிருஷ்ண பாரதியார் (புத்தகச் சுருக்கம்)
டாக்டர் உ. வே. சாமிநாதையர் .. 65
தேர்தலின்போது .. ஜவாஹர்லால் நேரு (மூன்ரும் அட்டை)